ஸ்ரீ தமிழ்
உண்மை நின்றிட வேண்டும்

**ஆசிரியர் – பதிப்பாளர் :**
இல. பத்மப்ரியா

**பொறுப்பாசிரியர் :**
வெ. ஜெயராமன்

**துணை ஆசிரியர்கள் :**
நா. பாஸ்கரன்
சி. பாண்டிக்குமார்

**வடிவமைப்பு :**
ஸ்ரீஸ்வயம்

**சட்ட ஆலோசகர்கள் :**
இல. ஸ்ரீராம்
த. பாஸ்கர்

**அலுவலக முகவரி:**
ஸ்ரீ தமிழ்
77/6, 10வது அவென்யூ,
அசோக்நகர்,
சென்னை –600 083

70102 81932

http://www.shreetv.tv
facebook.com/shreetv
x.com/Shreetv media
youtube com/ShreeTV
shreemedia.news@gmail.com

Press and Registration of Books Act-ன்படி எல்லா வழக்குகளும் சென்னையில் உள்ள உரிய நீதிமன்றங்களின் வரம்பிற்கு மட்டுமே உட்பட்டவை.

கதைகளில் வரும் பெயர்களும் நிகழ்ச்சிகளும் கற்பனையே. இதழில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மைத்தன்மைக்கு ஸ்ரீ தமிழ் நிர்வாகம் பொறுப்பல்ல. பேட்டிகள் மற்றும் சிறப்புக் கட்டுரைகளின் கருத்துகள் படைப்பாளர்களின் சொந்தக் கருத்துகளே!

**தனி பிரதி: ரூ 30/–**
**ஆண்டு சந்தா: ரூ 600/–**

# ஜனநாயகம் வென்றதா? இளைய தலைமுறைக்கு

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் 85.1% வாக்குகள் பதிவாகியுள்ளது, வழக்கத்தைவிட அதிகம் என்கிறார்கள். தமிழகத்தில் எஸ்.ஐ.ஆரில் நீக்கப்பட்டும் பின் புதியதாகச் சேர்க்கப்பட்ட வாக்குக்களையும் கணக்கில் கொண்டால், ஏறத்தாழ 68 லட்சம் வாக்குக்கள் குறைந்துள்ளது. இந்த அடிப்படையில், எஸ்.ஐ.ஆர் நீக்கத்தைத் தவிர்த்துப் பார்த்தால், வாக்குப் பதிவு சுமார் 75%. கடந்த தேர்தலில் பதிவான வாக்குகள் 74%. இது ஒரு பெரிய மாற்றம் இல்லை. நீக்கப்பட்ட போலி ஓட்டுக்களுக்கு பதிலாக, நியாயமான ஓட்டுக்கள் பதிவாகியுள்ளது என்றும் இதை எடுத்துக்கொள்ளலாம். எது எப்படியிருந்தாலும், ஜனநாயகம் வென்றதா?

தமிழகத்தை ஆண்டு கொண்டிருக்கும் கட்சியும், ஆண்ட கட்சிகளும் வாக்காளர்களை நன்றாக கவனித்தனர். முதல்முறையாகத் தேர்தல் களம் கண்ட த.வெ.கவும் சில இடங்களில் கவனித்தனர். பணம் வரவில்லை என்று பல பகுதிகளில் மக்கள் போராட்டங்களில் ஈடுபடவும் செய்தனர். ஓட்டுப் போடப் பணம் வாங்குவதை வாக்காளர் உரிமைத் தொகை என்று கொண்டாடும் இழி நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் பணம் படைத்தவன் மட்டுமே தேர்தலில் வெற்றி பெற முடியும் என்ற நிலை ஏற்பட்டுள்ளது, பொது ஒழுக்கக் கேட்டின் அடையாளமே இது!

இளம் தலைமுறை வாக்காளர்கள் பலர் த.வெ.க ஆதரவாளர்கள் என்பதைவிட வெறியர்களாகவே இருந்தனர். ஓட்டுக்கும், சீட்டிற்கும் கூட வித்தியாசம் தெரியாதவர்களாகவும், வேட்பாளர் யார் என்று தெரியாமலும், எதற்காக வாக்களிக்கிறோம் என்று சொல்லக்கூடத் தெரியாமல், குடும்பத்தினரையும், நண்பர்களையும் வாக்களிக்க நிர்ப்பந்தித்த முறைகள், தமிழகத்தின் எதிர்காலத்தை எண்ணி வேதனைப்பட வைத்துள்ளது. இந்தச் சூழலுக்கு, தமிழகத்தை ஆண்ட திராவிடக் கட்சிகளே பொறுப்பெடுக்க வேண்டும். ஒழுக்கம், சுயமரியாதை, பகுத்தறியும் தன்மை, சமூகப் பொறுப்புணர்வு இல்லாத கல்வியால் வந்த வினை இது.

தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டபின் அசம்பாவிதங்கள் எதுவும் நடக்காமல் இருக்க இறைவனைத் தான் பிரார்த்திக்க வேண்டும்.

மாற்றம் வேண்டும் என்ற இளைய தலைமுறையின் தாபம் நியாயமானதே! அந்த மாற்றம் என்ன? எப்படி இருக்க வேண்டும்? நாம் என்ன செய்கிறோம் என்று கூடத் தெரியாமல் இளைய தலைமுறையினர் இந்தத் தேர்தலில் வெளிப்படுத்திய அறியாமை, நம் நாட்டிலும் இளைய தலைமுறையை திசை திருப்பி எளிதாகக் கலகத்தை ஏற்படுத்த முடியும் என்ற அபாயத்தை வெளிப்படுத்தியுள்ளது. தேர்தலில் யார் வென்றாலும், இளைய தலைமுறையின் அறியாமை இருளை அகற்றுவதை முதன்மையாகக் கொண்டு செயல்பட வேண்டும். பெற்றோர்களும், சமுதாயத் தலைவர்களும், மூத்தவர்களும், முன்னவர்களும் சமூக மற்றும் அரசியல் விழிப்புணர்வு கொண்ட இளைய சமுதாயத்தை உருவாக்க அர்ப்பணிப்புடன் செயல்படுவது காலத்தின் கட்டாயம்.

# மாற்றத்தை தரப் போகிறதா? தேர்தல் 2026

-லலிதாம்பா

ஜனநாயத் திருவிழா 2026 என தலைப்புச் செய்தியோடு ஊடகங்கள் தமிழ்நாடு, கேரளா, அஸ்ஸாம் மற்றும் மே.வங்க சட்டமன்ற தேர்தல்களை குறிப்பிட்டு செய்திகளை வெளியிட்டு மகிழ்கின்றன. உண்மையில் ஜனநாயகத்தை நிலைநிறுத்தத் தான் மக்கள் வாக்களிக்க நினைக்கின்றனரா? இல்லை ஜனநாயத்தை பணநாயகம் ஆட்டு விக்கிறதா? என்பதே பலரின் கேள்வியாக உள்ளது.

**மே.வங்கத்தில் காவி அலை:**

மே. வங்கத்தில் இம்முறை பாஜகவின் ஆட்சியை கொண்டு வந்தே தீருவது என கங்கணம் கட்டிக் கொண்டு முனைப்புடன் வேலை செய்கிறது பாஜக. பல பகுதிகளில் 30 லிருந்து 35 சதவீதம் வரை முஸ்லீம்களின் எண்ணிக்கை பெருகிவிட்ட நிலையில் ஹிந்துக்களை மட்டுமே நம்பி தேர்தலில் சந்திக்கும் பாஜகவிற்கு இது சாத்தியமா என்ற கேள்வி எழுகிறது. மறுபக்கம் மாநில உரிமை, முஸ்லீம்கள், அதிலும் வங்கதேச ஊடுவல்கார முஸ்லீம்களுக்காக மட்டுமே ஆட்சியும், ஆசியும் தந்து போஷிக்கும் மம்தாவின் திரினாமுல் காங்கிரஸ். மம்தா மீண்டும் ஆட்சியில் தொடர்வது மே.வங்கத்திற்கு எந்தளவிற்கு பாதிப்போ, அதைவிட பல மடங்கு பாதிப்பு ஒட்டுமொத்த தேசத்துக்கும்.

மே.வங்கத்தில் தேர்தல் நடத்துவது என்பதே தேர்தல் ஆணையத்திற்கு மிகப் பெரிய சவலாக இருக்கும். அந்தளவிற்கு தேர்தல் முறைகேடு, வன்முறை, மிரட்டல், கொலை என சர்வசாதரணமாக அரங்கேறும் மாநிலம். இன்று தான் இப்படியா என்றால் இல்லை, இது தொட்டுத் தொடரும் பாரம்பரியம் என்பது போல கம்யூனிஸ்ட்கள் தொடங்கி வைத்ததை மம்தா அச்சு பிசகாமல் தொடர்கிறார் என்பதே உண்மை.

மே. வங்க தேர்தலை நேர்மையாக நடத்த SIR எனும் தீவிர வாக்காளர் சீர்திருத்த நடவடிக்கையை தேர்தல் ஆணையம் முன்னெடுத்தது. ஆரம்பத்தில் 70லட்சம் நீக்கப்பட்டு, கடைசியாக இப்போது 25 லட்சம் என்ற எண்ணிக்கையில் நீக்கப்பட்டுள்ளது. இந்த பணியை தொடங்கும் போதே திரினாமூலின் முக்கிய வாக்காளர்களான வங்கதேச ஊடுருவல்காரர்கள் பலர் நைசாக அந்த கிராமத்தை காலி செய்து சென்றதை பார்க்க முடிந்து. அய்யோ என பதறியடித்த மம்தா SIR க்கு எதிரான வழக்கில் தானே உச்சநீதிமன்றத்தில் ஆஜராகி



வாதாடுவேன் என கூத்தெல்லாம் நடத்தினார்.

SIR-ஐ எப்படி சமாளிப்பது என மம்தா யோசிப்பதற்குள் அடுத்த இடியை இறக்கியது மத்திய உள்துறை அமைச்சகம். நாட்டின் உள்ளுக்கும், எல்லையிலும் உள்ள வீரர்களை பாதுகாப்புக்கு பணித்தது. ஆகா எங்களது தேர்தல் கால வன்முறை வெறியாட்டம் எனும் ஜனநாயக கடமைக்கு மத்திய அரசுக்கு ஆப்பு வைத்து விட்டதே என ஏதோ அறுந்து விட்ட எலியைப் போல கத்திக் கொண்டு இருக்கிறார் மம்தா.

இரண்டு கட்டமாக தேர்தல் நடக்கும் மே.வங்கத்தில் வன்முறையை தடுத்து, மக்கள் அனைவரும் அச்சமின்றி வாக்களித்தாலே அங்கு மாற்றம் நடந்துவிடும் என பாஜக நினைக்கிறது. மோடி, அமித்ஷாவின் பிரமாண்ட பிரச்சாரம், ரோடு ஷோவுக்கு மக்கள் அளித்த ஆதரவே அதற்கு சாட்சி. மமதையுடன் ஹிந்துக்களை நசுக்கும் மம்தாவை, எதிர்த்து ஹிந்துக்களை ஒருங்கிணைத்து சுவேந்து அதிகாரி நடத்தும் அரசியல் பாஜகவினருக்கு நம்பிக்கையை கொடுத்துள்ளது. மே 4-ல் என்ன நடக்கப் போகிறது என்பதை பார்க்க தேசமே ஆவலாக இருக்கிறது.

**திராவிட குட்டிச்சுவர் சரியுமா?**

தமிழகத்தில் பிரிவினைவாதத்தை முன்னெடுத்து ஆட்சி நடத்தி வரும் திமுகவை அகற்ற வேண்டிய அவசியத்தை உணர்ந்து தனது தயவில் சின்னம் கிடைக்கப் பெற்ற அதிமுகவிடம் சற்றே இறங்கி வந்து கூட்டணி அமைத்து பாஜக களம் காண்கிறது.

தான் தான் கூட்டணிக்கு தலைமை என எடப்பாடி சொல்லி வந்தார், ஆனால் அன்புமணி, டிடிவி தினகரன், தமிழ் மாநில காங்கிரஸ் என கட்சிகளை ஒருங்கிணைத்தது பாஜக தான். மேலும் அதிமுக கூட்டணிக்காக அண்ணாமலையின் தலைமையை மாற்றி நயினார் தலைமையில் தமிழக பாஜக போட்டியிடுகிறது. தேர்தலுக்கு முன்பு அவசரமாக கட்சியின் அமைப்பு பொதுச்செயலாளர் கேசவ விநாயகத்தையும் மாற்றியது. இப்படி அதிரடி மாற்றம் செய்த தமிழக பாஜக ஏதோ புதுரூட்டில் சாதிக்கப் போகிறது என நினைத்தால் தொகுதிகளை கேட்டுப் பெற்றதில் செம்ம சொதப்பல். ஆனாலும் திமுக மீது மக்களுக்கு இருக்கும் அதிருப்தி ஒரு பக்கம், விஜய் ஆபத்பாந்தவனாய் காப்பாற்றுவார் என்ற கனவுடன் களம் காணுகிறது பாஜக.

மகளிர் உரிமைத் தொகையை 3 மாதத்திற்கும் சேர்த்து தந்த 5000 ரூபாய், புதிய வாக்குறுதியாக அறிவித்த 8000 கூப்பன் என பெண்களை மையமாக வைத்து திமுக களம் இறங்கியுள்ளது. 5 ஆண்டுகளில் 50 ஆண்டு கால சாதனை செய்து விட்டோம் என பிரச்சாரத்தை தொடங்கிய திமுகவினருக்கு ஆரம்பமே அதிர்ச்சியாக அமைந்தது. பிரச்சாரத்திற்கு சென்ற பல அமைச்சர்களுக்கே தொகுதிகளிக்குள் நுழைய முடியாத நிலை. நாம இத்தனை உருட்டியதை மக்கள் நம்பவில்லை என்பது தலைமைக்கு உரைக்க ஆரம்பித்தது. திமுகவின் பிரச்சாரம் கொஞ்சமும் சோபிக்கவில்லை என்பதை காண முடிந்தது. தமிழக தேர்தல் என்பதை மறந்து இது தமிழழத்திற்கும் டெல்லிக்குமான போர் என முழக்கமிட்டு ஸ்டாலின் ஒருபுறம் என்றால், சென்ற முறை எய்ம்ஸ் செங்கலை தூக்கிய உதயநிதி இம்முறை எடப்பாடி சசி கலா காலில் விழுந்து ஆசிபெற்ற படத்தைக் காட்டி அருவருப்பான பிரச்சாரத்தை மேற்கொண்டார். இது மக்களிடம் முகம் சுழிக்க வைத்தது என்பதைத் தாண்டி எடப்பாடி தந்த பாலிடாயில் பதிலடியால் நகைப்புக்குரியதாக மாறியது.

எடப்பாடி பழனிச்சாமி ஒருபுறம் அனைத்து பகுதிகளுக்கும் சென்று மக்களுக்கு புரியும்படியான எளிமையாக, அதே நேரத்தில் வலிமையான பிரச்சாரம் செய்தார் என்றால், ஒவ்வொரு பகுதிக்கும் ஏற்ற வகையில் சரியான தரவுகளுடன் அண்ணாமலை முன்னெடுத்த பிரச்சாரம் மிகப்பெரியளவில் மக்களிடம் போய் சேர்ந்தது, கூட்டமும் கூடியது. அண்ணாமலையை முன்பு மோசமாக விமர்சித்த அதிமுக தலைவர்களே! தங்கள் தொகுதிக்கு அவர் வந்து பிரச்சாரம் செய்ய வேண்டும் என விரும்பியது, ஏங்கியது வேறுகதை.

பணப்பட்டுவாடா, கூப்பன் கொடுப்பது, கொலுசு, தங்க காசு கொடுப்பது என தேர்தல் விதிமீறலில் ஈடுபட்ட திமுகவினரை பிடித்து தந்தாலும்



நடவடிக்கை எடுக்காத ஆணையம். இவர்களின் நடவடிக்கையின் லட்சணத்தை, எங்களுக்கு பணம் இன்னும் வந்து சேரல என மக்கள் சாலையில் இறங்கி போராடியதிலிருந்து தெரிந்து கொள்ளலாம். இம்முறை ஒரு ஓட்டுக்கு 10000 ரூபாய் என IPL ஏலம் போல திமுக நிர்ணயித்திருப்பது ஜனநாயகத்திற்கு பெரும் கேடு.

இதெல்லாம் ஒரு பக்கம் என்றால் தவெகவினரின் பிரச்சாரமும், அலப்பறைகளும் தாங்க முடியாத அளவிற்கு போய் கொண்டிருக்கிறது. 10 இடங்களில் மட்டுமே விஜய் ரோடு ஷோ. பல இடங்களில் அவர் பேசவே இல்லை என்ற போதும் தேர்தலில் அதிகளவில் விசிலுக்காக வாக்களித்துள்ளனர் இளைஞர்களும், இளம் பெண்களும் என கூறுகின்றனர். சில இடங்களில் முதியவர்களும் கூட இரு கழகங்களும் வேண்டாம் என்ற சிந்தனையையும் தாண்டி குழந்தைகள் கொடுத்த மிரட்டலும் அஞ்சி விஜய் கட்சிக்கு வாக்களித்திருப்பதாக செய்தி வருகிறது. மக்கள் அதிகளவில் வாக்களித்திருப்பதாக செய்தி பரவியதை அடுத்து விஜய் முதல்வராகவே ஆகி விட்டதாக விசிலடிச்சான் குஞ்சுகள் தான் நினைக்கிறார்கள் என்றால், தவெக நிர்வாகிகளே யார் யார் அமைச்ச ர்கள் என பட்டியல் தயாரிக்க ஆரம்பித்திருப்பது ஆச்சரியமாக இருக்கிறது.

சினிமாவில் தனிவொரு ஆளாக நூற்றுக்கணக்கான அடியாட்களை அடிச்சு துவம்சம் செய்யும் விஜய் தான் சட்டமன்ற தேர்தலில் மற்ற கட்சிகளின் வேட்பாளர்களை பறந்து பறந்து வந்து அடித்து காலி செய்து அரியணையில் ஏறப் போகிறார் என காத்திருக்கும் அவரின் ரசிக குஞ்சுகளின் மனநிலையை மே 4 தேர்தல் முடிவு வெளிவரும் நாளில் பார்க்க நமக்கு தைரியமில்லை.

கல்வியிற் சிறந்த தமிழ்நாடு என விளம்பர ஷோ நடத்திய திமுக, தவெகவினர் செய்யும் அலப்பறையை பார்த்து, தற்குறிகள் நிறைந்த தமிழ்நாடு என புலம்ப ஆரம்பித்துள்ளனர்.

இதைப் பார்க்கும் சாமானியன் இந்த கருமத்துக்கு தான் நைட்டு முழுக்க முழிச்சிருந்து ஓட்டிகிட்டு இருந்தீங்களாடா என கிண்டல் செய்கிறார்கள்.

மே 4-ல் என்னென்ன கூத்துகள் நடக்கிறது என பார்ப்போம்.

# சபரிமலைக் கோவிலுக்குப் பெண்கள் செல்வது 9 நபர் அரசியல் சாசன அமர்வின் மதிப்பாய்வு

-அருண்பிரபு

சபரிமலை ஸ்ரீ ஐயப்ப ஸ்வாமி திருக்கோவிலுக்கு 10-50 வயது வரை உள்ள பெண்களுக்கு அனுமதியில்லை என்ற வழக்கம் நூற்றாண்டுகளாகத் தொடர்கிறது. சமீபத்தில் 1980களில் சில திரைப்படப் படப்பிடிப்புகள் அங்கே நடத்தப்பட்ட போது பங்கேற்ற நடிகைகளுக்கும் இயக்குனருக்கும் அபராதம் விதிக்கப்பட்டது. முன்னாள் நடிகையும், கர்நாடக முன்னாள் அமைச்சருமான ஜெயமாலா தான் சந்நிதானத்தின் உள்ளே போய் விக்கிரகத்தைத் தொட்டதாகச் சொன்னார். பிறகு ரன்னி நீதிமன்றத்தில் வழக்கு பாய்ந்தவுடன் தானாகப் போகவில்லை, கூட்டம் தன்னை உள்ளே தள்ளிவிட்டது என்றார். சபரிமலைக்குப் போனவர்களுக்குத் தெரியும் என்ன தான் கூட்ட நெரிசல் என்றாலும் சந்நிதானத்துக்குள்ளே போவது படிகள் ஏறிப்போகவேண்டும். அப்படிப்போய் விக்கிரகத்தைத் தொடுவது சாத்தியமற்ற ஒன்று. கோர்டில் பல பல்டிகள் அடித்துப் பைத்தியக்காரியா என்று சந்தேகிக்கும் அளவுக்குப் போனார் இந்த முன்னாள் அமைச்சர். சபரிமலையின் அப்போதைய மேல்சாந்தி கண்டறரு மகேஸ்வரரு "இது கற்பனையில் கூட முடியாத விஷயம்" என்று சொன்னார். ரன்னி வழக்கில் 2006ல் நீதிபதி ஜோசியரின் கணிப்புத் திறத்துக்கு ஆதரவாகப் பேசத் தலைப்பட்டுப் பைத்தியக்காரி போல உளறுகிறார் ஜெயமாலா என்று தலையிலடித்துக்கொண்டு வழக்கைத் தள்ளுபடி செய்துவிட்டார். ஜோசியர் மீதான விசாரணை குறித்து மேலதிகத் தகவல் இல்லை.

இப்படிப்பட்ட சூழலில் கேரள உயர்நீதிமன்றம் 1991ல் S. Mahendran vs The Secretary, Travancore என்ற வழக்கில் கேரள உயர்நீதிமன்றம் 10-50 வயதுள்ள பெண்கள் சபரிமலைக் கோவிலுக்குப் போகக்கூடாது என்று தீர்ப்பளித்தது. அதுவரையில் மத, சமூக வழக்கமாக இருந்த இந்தப் பழக்கம் சட்ட அங்கீகாரம் பெற்றது. இந்நிலையில் 2006ல் Indian Young Lawyers Association (IYLA)எனும் அமைப்பு உச்சநீதிமன்றத்தில் பொது நல வழக்கு ஒன்றைத் தொடுத்தது. இதன் தலைவர் நௌஷாத் அகமது கான். இவர் வழிகாட்டுதலின்படி 5 பெண் வக்கீல்கள் உள்ளிட்ட 6 வக்கீல்கள் பக்தி பஸ்ரிஜா சேத்தி (IYLA செயலாளர்), டாக்டர் லக்ஷ்மி சாஸ்திரி, பிரேரணா குமாரி, அல்கா ஷர்மா, சுதா பால், ஆர்.பி.குப்தா (இவர் Advocate-on-Record. உச்சநீதிமன்றத்தில் மனுப்போட இப்படிப்பட்ட AOR இல்லாமல் முடியாது)

இந்த ஆறு பேரும் 10-50 வயதுப் பெண்களை அனுமதிக்க மறுப்பது அரசியல் சாசனம் வழங்கியிருக்கும் அடிப்படை உரிமைகளை மறுப்பதாகும் என்று வாதாடினர். இந்த வழக்கை விசாரித்த 5 பேர் அமர்வு (நீதிபதிகள் தீபக் மிஸ்ரா, சந்திரசூட், ரோஹிண்டன் நாரிமன், கான்வில்கர், இந்து மல்ஹோத்ரா அடங்கிய அமர்வு பெரும்பான்மைத் தீர்ப்பின்படி உயிரியல் காரணங்களுக்காக 10-50 வயதுப் பெண்களுக்கு அனுமதி மறுப்பதை ஏற்க முடியாது என்றும், அரசியல்சாசன ஒழுக்கம் மத, சமூகப் பழக்கங்களை விடவும் சக்திமிக்கது என்றும், ஐயப்ப பக்தர்கள் தனியொரு மதப் பழக்கம் கொண்டவர்களல்ல என்பதால் சாசனப் பிரிவு 26 செல்லாது என்றும் கூறி எல்லா வயதுப் பெண்களும் கோவிலுக்குப் போக அனுமதியளித்து உத்தரவிட்டது.

ஒரே நீதிபதி இந்து மல்ஹோத்ரா "மதசார்பற்ற அரசியல் அமைப்பில் நீதிமன்றங்கள் ஆழ்ந்த மத நம்பிக்கைகளில் தலையிடுவது தவறு என்றும், மத, சமூக நம்பிக்கைகள் நாசகாரமாக அல்லது அடக்குமுறையாக இல்லாதவரை மதப் பழக்க வழக்கங்களை அறிவுகொண்டு பரீட்சித்துப் பார்ப்பது அறிவுடைமை ஆகாது" என்று தீர்ப்பெழுதினார். ஆனால் 4:1 என்ற கணக்கில் பெரும்பான்மைத் தீர்ப்பு நின்றது.

**2006ல் நீதிபதி ஜோசியரின் கணிப்புத் திறத்துக்கு ஆதரவாகப் பேசத் தலைப்பட்டுப் பைத்தியக்காரி போல உளறுகிறார் ஜெயமாலா என்று தலையிலடித்துக்கொண்டு வழக்கைத் தள்ளுபடி செய்துவிட்டார்.**




**கர்ப்பம் தரிக்கத்தக்க பெண்கள் உள் நுழைவது அங்கிருக்கும் நைஷ்டிக பிரம்மச்சாரி தெய்வத்தின் இருப்புக்கு விரோதமானது. ஆழமான மத நம்பிக்கைகள் நீதிமன்றத்தால் கேள்வி கேட்கப்படக்கூடாது.**

சகலகலாவல்லவன் என்று தனக்குத் தானே பட்டம் சூட்டிக்கொண்டு திரியும் சுப்பிரமணிய சாமி இந்தத் தீர்ப்பை எதிர்ப்பவர்களைச் சுட்டுத்தள்ளிவிட்டு ராணுவப் பாதுகாப்போடு 10-50 வயதுப் பெண்களைச் சபரிமலைக்கு அனுப்பவேண்டும் என்றார். தீர்ப்புக்கு எதிர்ப்பு வருவதையும் அதுவும் ஹிந்துப் பெணகள் குறிப்பாக 10-50 வயதுப் பெண்கள் மத்தியில் எதிர்ப்பு வலுப்பதையும் கண்டு பல்டியடித்த சுப்பிரமணிய சாமியார் சீராய்வு செய்யட்டும், அரசியல் சாசனப்படி நடப்போம். மக்கள் உணர்வை மதிப்போம் என்றெல்லாம் சமாளித்தாலும் ஹிந்துக்கள் மத்தியில் தன் மதிப்பை இழந்தார்.

பாரபட்சம் இருக்கக்கூடாது என்பது சரிதான். கொஞ்சம் கொஞ்சமாகப் பேசி மக்களிடம் மனமாற்றத்தை ஏற்படுத்தி இந்தப் பழக்கத்தை மாற்ற வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருந்த சங்க பரிவார அமைப்புகள் கள நிலவரத்தை உணர்ந்து நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டன. மக்களுக்கு ஆதரவாகக் களம் கண்டனர் சங்கிகள். தலைமுடிக்கு வெள்ளையடித்து 10-50 வயதுப் பெண்களை மலைக்கு அனுப்பிய கம்யூனிஸ்டு அரசும் அதெல்லாம் சட்டம் தான் பெரிதாக்கும் என்று பேசிய காங்கிரசும் களத்தில் மக்களைச் சந்திக்க வந்த போது அதெல்லாம் வழக்கத்தை மாற்றக் கூடாது என்று முழங்கினர். மண்டைய எல்லாப்பக்கமும் ஆட்டுறீங்களேப்பா என்றால் பதில் இல்லை.

இந்த Indian Young Lawyers Association vs State of Kerala தீர்ப்பை எதிர்த்துக் கேரளத்தில் மிகப்பெரும் போராட்டங்கள் நடந்தன. காத்திருப்பேன் என்று பதாகை ஏந்திப் 10 வயதுக் குழந்தைகள் முதல் 50 வயதுப் பெண்கள் வரை தெருவில் இறங்கிப் போராடினர்.

இந்தத் தீர்ப்பை எதிர்த்து 50க்கும் மேற்பட்ட சீராய்வு மனுக்கள் உச்சநீதிமன்றத்தில் பதிவாகின. இவற்றை விசாரித்த அமர்வு நவம்பர் 2019ல் 9 நீதிபதிகள் அமர்வுக்கு 3:2 என்ற பெரும்பான்மையில் அனுப்பியது. பிப்ரவரி 2020ல் 9 நீதிபதிகள் அமர்வு மனுக்களை ஆராய்ந்து இவை ஆய்வுக்குப் பொருந்தக்கூடியவை என்று அறிவித்து ஏற்றது. பிப்ரவரி 2026ல் தலைமை நீதிபதி தலைமையிலான 9 நீதிபதிகள் அமர்வின் விசாரணைக்கு இந்த மனுக்கள் வரிசைப்படுத்தி வைக்கப்பட்டன. ஏப்ரல் 7, 2026ல் விசாரணை தொடங்கியது.

**ஒன்பது நீதிபதிகள் அமர்வின் நீதிபதிகள் பட்டியல் இது:**

பி.வி.நாகரத்தினா, எம்.எம்.சுந்தரேஷ், அசானுதீன் அமானுல்லா, அரவிந்த் குமார், அகஸ்டின் ஜார்ஜ் மஸிஹ், பிரசன்னா பாலச்சந்திர வரலே, ஆர்.மஹாதேவன், ஜோய்மாலா பக்சி.

**வைக்கப்பட்ட வாதங்கள்:**

10-50 வயதுப் பெண்கள் சபரிமலைக்கு வரக்கூடாது என்ற கட்டுப்பாடு ஐயப்பன் நைஷ்டிக பிரம்மச்சாரி என்பதால் கொண்டு வரப்பட்ட சம்பிரதாயம். அதை நீதிமன்றம் சரிபார்க்கவோ செல்லும் செல்லாது என்று தீர்ப்பளிப்பதோ அத்தியாவசிய மத நம்பிக்கையில் தலையிடுவதாகும்.

மதப்பிரிவுகள் தங்கள் பழக்கவழக்கங்களைத் தாங்களே நிர்வகித்துக்கொள்கின்றன. அவை அந்த மதப்பிரிவுகளின் உள்விவகாரங்கள். அவற்றில் வெளித்தலையீடு (நீதிமன்றமாக இருந்தாலும்) தேவையற்ற அடிப்படை உரிமை மீறலாகும்.

அரசியல் சாசன ஒழுக்கம் என்பது தெளிவற்ற நிலைப்பாடு. அதற்கானவரையறை இதுவரை இல்லை. தெளிவற்ற ஒரு விஷயம் மத நம்பிக்கை, வழிபாட்டு முறைகள், பொது ஒழுக்கம், அங்கீகரிக்கப்பட்ட ஆசாரங்களை மீறிய சக்தி கொண்டதாக இருக்க முடியாது. இருப்பது சரியில்லை.

மத நம்பிக்கை இல்லாதவர்கள் மத வழிபாடுகளைப் பின்பற்றாதவர்கள் நம்பிக்கை குறித்தும் வழிபாட்டு நெறிகள் குறித்தும் கேள்வி கேட்டு நீதிமன்றத்தை நாடுவது அடிப்படையற்ற செயல்.

அனைத்து மத அடிப்படையிலான கட்டுப்பாடுகளும் தீண்டாமையோ, பாகுபாடோ அல்ல. அவை குறிப்பிட்ட வழிபாட்டு நெறிகள் வகுத்த கட்டுப்பாடுகள் என்பதை நீதிமன்றம் கருத்தில் கொள்ளவேண்டும்.

மத்திய அரசின் சார்பில் வாதாடிய சொலிசிட்டர் ஜெனரல் துஷார் மேத்தா வைத்த வாதங்கள்:

“அரசியல் சாசனப் பிரிவு 25(2)(b) அரசு அனைத்து மத வழிபாட்டுத் தலங்களையும் அனைவருக்கும் திறந்துவிடவேண்டும் என்று சொல்கிறது. இது சாதி ரீதியான தடைகளுக்கு எதிராகச் சொல்லப்பட்டதே




தவிர வழிபாட்டு நெறிகளின் அடிப்படையில் வகுக்கப்பட்ட விதிகளுக்கு எதிராக அல்ல.''

"நம்பிக்கை உள்ளவர்களின் அரசாக இருந்தாலும் ஆலய விவகாரங்களில் தலையிட்டு விதிகள் வகுப்பதும், நியமனங்கள் செய்வதும் கூடாது. இவை ஆகமங்களின் அடிப்படையில் விவரமறிந்தவர்கள் செய்யவேண்டிய பணி.''

"சாசனப் பிரிவு 26 (மத சுதந்திரம்) என்பது சாச னப்பிரிவுகள் 14, 15, 17 இவற்றுடன் இணைத்துப் படித்துப் புரிந்துகொள்ளப்படவேண்டும். சமூக சீர்திருத்தம் என்ற பெயரில் மதப் பழக்க வழக்கங்களை தன்னிச்சைக்கு ஒழிக்க முடியாது.''

"பெண்கள் நுழைவுக்குத் தடை என்பது பெண்களுக்கு எதிரானதல்ல, குறிப்பிட்ட காலத்துக்கு வேண்டாம் என்ற வழக்கம். ஆண்கள் வரக்கூடாத கோவில்கள் உள்ளன, அவற்றை ஆண்களுக்கு எதிரானது என்று சொல்லமுடியுமா? இப்படி சகட்டுமேனிக்கு அறிவித்துக்கொண்டிருப்பது வழிபாட்டுச் சுதந்திரத்துக்கு எதிராகவே போகும்.''

இவ்வழக்கின் விசாரணையின் போது நீதிபதி அசானுதீன் அமானுல்லா "இந்தப் பழக்கம் மூடநம்பிக்கையா என்பதை முடிவுசெய்ய நீதிமன்றத்துக்கு அதிகாரம் உள்ளது'' என்றார். அரசு வழக்கறிஞர் துஷார் மேத்தா உடனடியாகப் பதில் சொன்னார் "நீதிபதிகள் சட்டம் படித்தவர்கள், சட்ட வல்லுநர்கள், மத விஷயங்களில் அவர்கள் வல்லுநர்கள் அல்ல. அதனால் மூடநம்பிக்கை பற்றி நீதிமன்றம் முடிவு செய்ய முடியாது''. "ஒரு பகுதியின் மத நம்பிக்கை மற்றொரு பகுதியில் ஏற்கப்படாதிருக்கலாம். அதற்காக அதை மூடநம்பிக்கை என்று சொல்வதா?'' என்றும் துஷார் மேத்தா கேட்டார்.

திருவாங்கூர் தேவசம் வாரியம் சார்பில் வாதாடிய வக்கீல் அபிஷேக் மனு சிங்வி "கர்ப்பம் தரிக்கத்தக்க பெண்கள் உள் நுழைவது அங்கிருக்கும் நைஷ்டிக பிரம்மச்சாரி தெய்வத்தின் இருப்புக்கு விரோதமானது. ஆழமான மத நம்பிக்கைகள் நீதிமன்றத்தால் கேள்வி கேட்கப்படக்கூடாது.'' என்று வாதாடினார்.

இந்த விஷயத்தோடு முஸ்லிம் பெண்கள் மசூதிக்குள் போவது பற்றியும் பார்சி பெண்கள் அக்னிக் கோவிலுக்குப் போவது பற்றியும் நீதிமன்றம் விசாரிக்கிறது.

AIMPLB எனும் முஸ்லிம் தனிநபர் சட்ட வாரியம் "பெண்களை மசூதிக்குள் அனுமதிக்கிறோம், ஆனால் அவர்களுக்குத் தனி வழி உள்ளது. அப்படித்தான் அவர்கள் வந்து போகவேண்டும். பொது வழியில் வருவதற்கு அனுமதியில்லை'' என்று சொன்னது. உடனே குறுக்கிட்ட நீதிபதி அமானுல்லா "பெண்கள் சீக்கிரம் வீட்டுக்குப் போய் பிள்ளைகளைப் பார்த்துக்கொள்ள வேண்டாமா? அதற்காகத் தான் இப்படி'' என்று முட்டுக்கொடுத்தார். "யோவ் மில்ட்ரீ! இது பாகுபாடா மூடநம்பிக்கையா என்றெல்லாம் விசாரிக்க வேண்டாமா?'' என்பது பொதுமக்கள் கேள்வி. ஜட்ஜ்யா பதில் சொல்வார் என்று நம்பிக்கை இல்லை.

பார்சிக்காரர்கள் இன்னும் அவர்கள் வழக்கம் பற்றிப் பதில் சொல்ல வேண்டும்.

வழக்கு விசாரணை தொடர்கிறது. இந்நிலையில் மத்திய அரசு மறைமுகமாக அரசுக்கட்டுப்பாட்டில் கோவில்கள் இருப்பதில் தங்களுக்கு உடன்பாடில்லை என்று சொல்லிவிட்டது. இதைச் சட்டமாக்கி எல்லா மாநிலங்களுக்கும் சேர்த்து அமலாக்கினால் கோவில்களும் தர்மமும் காக்கப்படும். சீக்கிரம் நடக்கக்கூடியதல்ல இது. நீதிக்கான நெடும்பயணம் தொடரும். கல்லும் முள்ளும் காலுக்கு மெத்தை. ஸ்வாமி சரணம், சரணம் ஐயப்பா! வந்தே மாதரம்.

# பிரகாஷ் ராஜின் ஹிந்து அவதூறு அமைதிகாக்கும் ‘நடு’ நிலைகள்

-வெள்ளய்யன்

நம் நாட்டின் பண்பாட்டையும், ஹிந்து சமயத்தையும் இழிவாகப் பேசுவதை முழு நேரத் தொழிலாகக் கொண்டவர்களில் ஒருவர் நடிகர் பிரகாஷ் ராஜ். அவரின் ஹிந்துத் துவேஷத்தின் சமீபத்திய பரிமாணம், ஒரு கற்பனைக் கதை.

பிரகாஷ் ராஜ் ராமாயணத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு கற்பனை நாடகத்தை விவரித்தார், அதில் மனிதர்களுக்கு பதிலாக எறும்புகளே கதாபாத்திரங்களாக இருந்தன.

அவரது கதையின்படி, வட இந்தியாவைச் சேர்ந்த ராமர், சீதை மற்றும் லட்சுமணன் ஆகியோர் தங்களது வனவாசத்தின் போது தெற்கு நோக்கிப் பயணம் செய்து, ராவணனுக்குச் சொந்தமான ஒரு வனப் பண்ணைக்குள் நுழைகிறார்கள்.

பசியுடன் இருக்கும் லட்சுமணன் அங்கிருந்த பழங்களைப் பார்த்துவிட்டு, அதைச் சாப்பிட விரும்புவதாக ராமரிடம் கூறுகிறான். “இங்கு பழங்கள் இருக்கின்றன. நாம் சாப்பிடலாமா?” என்று லட்சுமணன் கேட்கிறான். அதற்கு ராமர், “வேண்டாம், இது வேறு யாருடையதோ பண்ணை” என்கிறார். “ஆனால் இது திருட்டு ஆகுமா?” என்று லட்சுமணன் கேட்கிறான். “நமக்கு பசியாக இருந்தால், நாம் சாப்பிடலாம்,” என்று ராமர் பதிலளிக்கிறார்.

அவர்கள்சாப்பிட்டு முடித்ததும், சூர்ப்பணகையும் ராவணனும் அவர்களைப் பார்த்து விடுகின்றனர். “சூர்ப்பணகை தன் அண்ணனை அழைத்து இவர்களைப் பற்றி புகார் செய்கிறாள். ஆனால் ராவணனோ, அவர்கள் பசியாக இருக்கிறார்கள், சாப்பிடட்டும் என்று அவளிடம் சொல்கிறான்,” என்று பிரகாஷ் ராஜ் கூறுகிறார்.

ராமர் அந்த அண்ணன்-தங்கையை ‘பழங்குடியினர்’ (Tribals) என்று அழைக்கிறார், அதற்கு ராவணன், தாங்கள்தான் இந்த காட்டின் உரிமையாளர்கள் என்று பதிலளிக்கிறான். “நீங்கள் பழங்களைச் சாப்பிட்டுவிட்டதால், அதற்கான தொகையை நீங்கள் செலுத்த வேண்டும்” என்று சொல்லும் ராவணன், அதை கணக்கிடுமாறு தன் தங்கையிடம் கூறுகிறான். அந்தத் தொகை ஜிஎஸ்டியுடன் (GST) சேர்த்து 2,000 அமெரிக்க டாலர்களாக வருகிறது.

தங்களிடம் பணம் இல்லை என்று ராமர் கூறுகிறார். உடனே ராவணன், அவர்களுக்கு 20 சதவீத தள்ளுபடி கொடு என்று சொல்கிறான். அப்போதும் ராமர் தங்களிடம் பணம் இல்லை என்கிறார். இதைக் கேட்ட ராவணன், “நீங்கள் இங்கு சுற்றுலாப் பயணிகள் அல்ல. உணவு தேடி வந்திருக்கிறீர்கள். நீங்கள் பழங்களைச் சாப்பிட்டுவிட்டீர்கள் அல்லவா, அதிலுள்ள விதைகளை நட்டு, அதை மரமாக்கிவிட்டுப் போங்கள்” என்று கூறியதாக பிரகாஷ் ராஜ் சொல்கிறார்.

“உங்கள் பெயர் என்ன? - நான் வடக்கிலிருந்து வரும் ராமர்.”

“நான் தெற்கிலிருந்து வரும் ராவணன், உங்களை சந்தித்ததில் மகிழ்ச்சி.”

அதன் பிறகு அவர்கள் புறப்படுகிறார்கள் என்று பிரகாஷ் ராஜ் தனது கதையை முடிக்கிறார். இந்த நாடகம், இந்தி மொழி திணிக்கப்படுவதாகக் கருதப்படும் எண்ணத்தின் மீதான ஒரு நையாண்டியாக (satire) முன்வைக்கப்பட்டுள்ளது.

கற்பனைக் கதாபாத்திரங்களின் பெயரை, கில்ஜி, திப்பு, ஹைதர் என்று வைத்தால், அதில் ஒரு நியாயம் உள்ளது. இந்திய நாட்டின் நிர்வாக அமைப்பை உருவாக்கியவர்கள் முகலாயர்கள் என்று பொய் பிரச்சாரம் செய்யும் பிரகாஷ் ராஜ் கூட்டங்கள், இவர்கள் பொய்யை நியாயப்படுத்தவாவது ஒரு கற்பனைக் கதையை, அக்பர், ஔரங்கசீப் என்று எழுதியிருக்கலாம்! அப்படிச் செய்திருந்தால் பிழைப்பு போகுமே! எனவே, இந்த அவதூறு நையாண்டி, இந்தித் திணிப்பு மட்டுமல்ல, வேறுபல பிரிவினைவாத சதிகளும் அடங்கியுள்ளது.

மதுரையை ஆண்ட திராவிட தேசத்து அரசன் சத்யவ்ரதனின் மகனான இஸ்வாகுவின் வழித்தோன்றல் இராமன். உத்திரப் பிரதேச மாநிலம், நொய்டா பகுதியிலுள்ள பிஸ்ரக் ஜலால்பூர் என்ற ஊரில் பிறந்தவன் இராவணன். சீதையை அசோகவனத்தில் இராவணன் சிறை பிடித்து வைத்திருந்தான். சீதையைத் தேடிச் சென்ற அனுமன், சீதையிடம், ராக்ஷசர்களுக்குத் தெரியாத மதுர மொழியில் பேசினார் என்கிறது வால்மீகி இராமாயணம். வால்மீகி குறிப்பிடும் மதுர மொழி என்பது தமிழ் என்றும், நான்காம் தமிழ் சங்கம் அமைத்த வள்ளல் பாண்டித்துரைத் தேவரின் அவைப்



புலவராக இருந்த திரு . நாராயண ஐயங்கார் விரிவாக எழுதியுள்ளார்.

இராவணாதிகளுக்குத் தெரியாத மொழி தமிழ் என்றால், இராவணனைத் தமிழுடன் அடையாளப்படுத்துவது முட்டாள்தனம் என்பதைவிட, இது விஷமத்தனம், அடையாளத் திணிப்பு. இப்படி ஒரு கதையைச் சொல்லி, அடையாளத் திணிப்பை ஆதரித்துள்ளார் பிரகாஷ் ராஜ்.

இந்தக் கதையின் அடுத்த நச்சுப் பரிணாமம், இராமன், இராவணனையும், சூர்ப்பணகையையும் டிரைபல்ஸ்(Tribals) என்று அடையாளப்படுத்தினாராம்! அதாவது, இராவணன் இந்த மண்ணின் மைந்தராம்! இராமன் ஆக்கிரமிப்பாளராம்! சங்க இலக்கியங்கள், காப்பியங்கள் தொடங்கி, இந்த மண்ணின் இலக்கியங்கள் எல்லாம் இராமனைக் கொண்டாடுகிறது. ஆனால், குபேரனை விரட்டிவிட்டு, இலங்கையை இராவணன் ஆக்கிரமித்தான் என்கிறது இராமாயணம். தரவுகளின் அடிப்படையில் பார்த்தால், மண்ணின் மைந்தன் இராமன். ஆக்கிரமிப்பாளன் இராவணன். ஆனால், பழங்குடியினர் வேறு, ஹிந்துக்கள் வேறு என்று பிரித்தாளும் மிஷனரி சூழ்ச்சியும், இந்த கிறிஸ்தவ சினிமா நடிகரின் நையாண்டியில் புதைந்துள்ளது.

பழத்தைத் திருடித் தின்றவர் இராமர் என்று இராமரை இழிவு படுத்தும் சதியும், காசு கொடுக்க வக்கில்லாதவர் என்று அவதூறாகச் சித்தரிக்கும் வன்மமும் இந்தக் கதையில் இடம்பெற்றிருப்பதை சாதாரணமாகப் புறம் தள்ளிவிட முடியாது. இராவணனை கொண்டாடுவது என்பதைவிட, இராமனைக் கொச்சைப்படுத்துவதே இந்தக் கதையில் ஓங்கி ஒலிக்கிறது. இராமனைப் பார்த்து இராவணன், நீங்கள் சுற்றுலா பயணி இல்லை, உணவு தேடி வந்தவர்கள் என்றாராம்.! இந்த மண்ணுக்கு அன்னியன் இராமன் என்பதைவிட, சுரண்ட வந்தவர் என்ற த்வனியில் பேசியிருப்பது அயோக்கியத்தனமானது.

இந்த ஹிந்துத் துவேஷப் பேச்சை, ஜி.எஸ்.டி எதிர்ப்பு அரசியலுடன் தொடர்புபடுத்தி, தனது மோடி எதிர்ப்புப் பிரச்சாரத்தையும் செய்துள்ளார் பிரகாஷ் ராஜ். இந்தப் பேச்சை இவர் பேசிய இடம், கேரள புத்தகத் திருவிழாவான கேரள லிட் பெஸ்ட். மொழி வளர்ச்சிக்கும், ஆக்கப்பூர்வமான கருத்துருவாக்கத்திற்கும், படிக்கும் பழக்கத்தைத் தூண்டவும், எழுத்தாளர்களுக்கு ஊக்கம் கொடுக்கவும் புத்தகத் திருவிழா என்று விளம்பரப்படுத்தும் இந்த அமைப்புகளின் உண்மையான நோக்கம் ஹிந்து இன அழிப்பே !

கம்யூனிஸ்ட் கட்சியும், அடிப்படைவாத கிறிஸ்தவ மிஷினரிகளும், இஸ்லாமிய அடிப்படைவாதிகளும், இந்த மூவரின் வாடகை சித்தாந்தவாதிகளான போலி மதச்சார்பின்மை பேசும் கூட்டத்தினர் அரசியல் மேடைகளிலோ, வேறு மன்றங்களிலோ ஹிந்து வெறுப்பைக் கக்கினால் பிரச்சினை ஏற்படும் என்பதால், கருத்துச் சுதந்திரம், கற்பனைக் கதை, மறு வாசிப்பு என்று பல பெயர்களில் செய்துவரும் ஹிந்து வெறுப்புப் பிரச்சாரமே இது!.

பிரகாஷ் ராஜின் இந்த அவதூறுப் பேச்சிற்கு, திருமலை திருப்பதி தேவஸ்தானத்தின் அறங்காவலர் குழு உறுப்பினரும் ஆந்திர மாநில பாஜக செய்தி தொடர்பாளருமான பானுபிரகாஷ், வழக்கறிஞர் மூலம் பிரகாஷ் ஹிந்துக்களிடம் மன்னிப்பு கேட்க வேண்டும், இல்லாவிட்டால் ரூ. 100 கோடி இழப்பீடு கோரப்படும் என நோட்டீஸ் அனுப்பியுள்ளார்.

இதற்கு பதில் அளித்து வீடியோ ஒன்றை வெளியிட்டுள்ள நடிகர் பிரகாஷ்ராஜ், ஒரு தலைப்பைப் பற்றிய விவாதத்தில் நான் கூறிய சில தகவல்களைப் பிரித்து தவறான புரிதல்களுடன் பரப்புவதற்கு என்னை பயன்படுத்தி கொண்டனர். நான் எல்லா மதங்களையும் நேசிக்கிறேன், எல்லா மதத்திற்கும் மதிப்பு அளிக்க கூடியவன். ஸ்ரீ ராமரின் அவதாரத்தைப் பற்றி நான் ஏன் தவறாகப் பேச வேண்டும் என்றும் கேள்வி எழுப்பினர். மேலும் தமிழ்நாடு தேர்தல் பணியில் பிசியாக இருந்துவிட்டு, தற்போது கோடை வெயில் காரணமாக செடி, கொடிகளுடன் பேசி கொண்டு இருக்கிறேன். அதுவரை நீங்கள் என்னைப்பற்றி இப்படியே பேசுவதாக இருந்தால் பேசுங்கள், நான் எனது நேரத்தை பொறுத்து நான் வந்து உரிய பதில் அளிக்கிறேன் என்று செல்பி வீடியோவை வெளியிட்டுள்ளார்.

ஹிந்துக்களைத் தொடர்ந்து இழிவாகப் பேசும், பிரகாஷ் ராஜ் போன்றவர்கள் மீது நடவடிக்கை எடுக்காமல் காவல்துறையும், நீதிமன்றங்களும் பரிவு காட்டுவது, இது போன்ற அவதூறுகள் அதிகப்படுவதற்குக் காரணமாகியுள்ளது. ஹிந்துக்களை கேவலமாகப் பேசிய இஸ்லாமிய அடிப்படைவாதிகளுக்கு, குரானை மேற்கோள் காட்டிய நூபுர் ஷர்மாவை வெறுப்புப் பேச்சாளர் என்று முத்திரை குத்திய உச்சநீதிமன்றம், வெறுப்புப் பேச்சு அகராதியைத் தொலைத்து விட்டதோ!

# திடல் தற்குறி Vs விசில் தற்குறி

ராயன்




அண்டார்டிக்கா கண்டத்தில் உள்ள அழகான நாடு இம்பிக்கா. இம்பிக்கா கலாச்சாரம், பண்பாடு நிறைந்த ஒரு ஜனநாயக நாடு. ஜனநாயக நாடுன்னா..? என கேட்பவர்களுக்கு புரியும்படி சொல்லணும்னா, அந்த நாட்டு எதிர்க்கட்சி எப்படி செயல்பட வேண்டும் என்பதை அமெரிக்காவுல இருக்குற தாத்தா, மாமா சொல்வதை செய்யுறது தான். அது இம்பிக்கா நாட்டுக்கு பாதகமா இருந்தாலும் அந்த கட்சிகள் மீது நடவடிக்கை எடுக்க முடியாது என்பதில் தான் இருக்கு ஜனநாயகம்.

இம்பிக்கா நாட்டில் பல மாநிலங்கள் இருக்கு. ஒவ்வொரு மாநிலமும் அதற்கான அடையாளத்துடன் இருப்பது தான் அந்த நாட்டோட சிறப்பு. 5 ஆண்டுகளுக்குப் பிறகு இம்பிக்கா நாட்டின் தம்பிக்கா பிரதேசத்துக்கு தேர்தல் நடக்கப் போகுது என அறிவிச்சாங்க. தம்பிக்காவில இருக்குற எல்லா கட்சிகளுக்கும் ஒரே சந்தோசமாக போச்சு. தம்பிக்கா பிரதேசம் இம்பிக்காவில் ஒரு தனித்த அடையாளம் என ஆட்சியில இருக்கும் திருந்தாத முட்டாள் கழகம் கட்சி சொல்லி சொல்லி பிரச்சாரம் செய்து மக்களிடம் பிரபலமானது.

தம்பிக்கா தனித்து இருப்பதற்கு காரணமே, அந்த கட்சியின் கொள்கைக்கு விதை போட்டதே காமசாமி தான் என சொல்லி வந்தாங்க. விதை போட்டவரையே திருந்தாத முட்டாள் கழகம் கட்சி ஆரம்பிச்சதும் பிதுக்க ஆரம்பிச்சது வேற கதை. பதிலுக்கு வெங்காய மண்டி காமசாமியும் ரொம்ப அசிங்கம் அசிங்கமா பேசி வாழ்த்திக் கொண்டே காலத்தை ஓட்டுனாரு. இந்த கட்சியும் 6 முறை ஆட்சியில் இருந்தது என்பதே தம்பிக்காவின் சாபக்கேடுன்னு அங்கே ஒரே பேச்சு. தேர்தல் நடந்தா எல்லாவிதமான தில்லுமுல்லு வேலைகள் செய்வதிலேயும் கிள்ளாடி அந்தக் கட்சி என்பது பிறக்கப் போகிற குழந்தைக்கும் தெரியும்.

2026 தேர்தல் ஒரு வித்தியாசமானதாக இருந்தது என்று தான் சொல்லணும். காரணம், எதிர்க்கட்சிகளை ஒன்று சேர்க்க மேலே மத்தியில இருக்கிற 3 முறை தொடர்ந்து ஆட்சியில இருக்கிற தர்மேந்திரா கட்சி படாதபாடு பட்டுச்சு. உலகமே தர்மேந்திராவை கண்டு வியக்குது, அமெரிக்காவையே ஆட்டிப் படைக்கிறாரு என சொல்லி, உங்களோட வந்து சேர்ந்துக்கவா என ஒவ்வொரு நாடும் தாமாக முன்வந்து பேசுவதை பார்க்கும் போது இம்பிக்கா நாடே பெருமையா தான் பார்க்குது. ஆனா தம்பிக்காவில் தர்மேந்திரா கட்சி தன்னால் உயிர்பெற்ற "கடும்பாடி" கட்சியிடம் பம்மிக் கொண்டு நிற்பதை பார்க்க பலருக்கும் சகிக்கவில்லை என்பது வேறு கதை. முரண்டு பிடிச்சவர்களையெல்லாம் ஒன்றாக உட்கார வெச்ச தர்மேந்திரா கட்சிக்கு பல உதவாக்கரை சீட்டுகளை கொடுத்து தர்மேந்திராவுக்கே டஃப் கொடுத்தாரு கடும்பாடி. தங்களுக்கு சீட்டு கிடைச்சதே, அது போதும்டா சாமி, ஜெயிச்சு எம்.எல்.ஏவா ஆகுறோமோ இல்லயோ, போட்டி போட்டு வசதியானாலே சுகம்னு நினைச்ச தலைவர்கள் எல்லாம் அசிங்கத்தை துடைச்சு தூர வீசிட்டு களத்துல குதிச்சாங்க.

திருந்தாத முட்டாள் கழகம் கட்சி இந்த தேர்தலை ஈசியாக ஊதி தள்ளிடலாம், நம்மிடம் அதிகாரம் இருக்கு, ஆஸ்தி பாஸ்தி, அடியாள் பலம் இருக்கு, போதாக்குறைக்கு மக்களின் பாதுகாப்புக்கு இருக்குற தம்பிக்கா போலீசே நம்ம கட்சித் தொண்டனை போல வேலை செய்வாங்க என மிதப்புல இருந்தாங்க. ஆனால் தேர்தல் நடத்துற நிர்வாகம் தம்பிக்கா போலீஸ் அதிகாரிங்க பலரை மாத்திடுச்சு, ஆனாலும் தி.மு.க உஷாராக எங்கெல்லாம் பணத்தை பதுக்கணுமோ அங்கே எப்பவோ செய்திடுச்சுன்னு மக்களுக்கு புரிஞ்சது. தம்பிக்கா மக்களும் ஆவலோட இருந்தாங்க, இந்த முறை தேர்தலில் எவ்வளவு பணம்? என்ன கிஃப்ட் தருவாங்க என்று..

தம்பிக்கா பிரதேசத்துல நல்ல கூத்து கட்டி சம்பாதிச்சதோட, ரசிகர்களையும் அதிகம் வெச்சிருக்கிற "கஜா" களத்துல இறங்குனதும் தேர்தல் களை கட்டிடுச்சுன்னு தான் சொல்லனும். கஜா

நல்லா கூத்து கட்டுவாரு, டான்ஸ் ஆடுவாரு, ஆனால் கட்சி நடத்துறது, நிர்வாகம் அப்படிங்கிறதெல்லாம் பெரிய விஷயமாச்சே இதெல்லாம் அவருக்கு தெரியுமா? என கேள்வி கேட்டீங்கன்னா, அவரை மர்மதேசத்தில் இருக்கும்"விஷனெரி" கூட்டம் தான் ஸ்கெட்ச் போட்டு இயக்குது என சிலருக்கு புரிய ஆரம்பிச்சது. அவரு கூத்து கட்டுறவரு என்பதால் அவரை யாராவது ஆக்ஷன், கேமரா ரோல், கட் என இயக்கினால் தான் பெர்ஃபாமென்ஸ் கொடுக்க முடியும்.

கஜாவை ஒரு பக்கம் விஷனெரி இயக்குவது, மறுபக்கம் அவரோடு கூத்து கட்டிய கரிஷா இன்னொரு பக்கம் டைரக்ஷன் கொடுக்க தம்பிக்கா அரசியல் சுவாரஸ்யமா போயிட்டு இருக்குது. சரி இவரு தான் கூத்து கட்டி கட்சி நடத்துறாருன்னு பார்த்தா, ஆட்சியில் இருக்கும் முசோலினி தலைவரும் டெய்லி ஏதோ ஒரு கடையில் டீ குடிக்கிறதும், யாருடைய வீட்டுக்காவது போயி குடும்பத்தினரோட படம் எடுக்குறதுமா போனது. அதைவிட முக்கியம், முசோலினி முன்னெடுத்த பிரச்சாரம் தான். தேர்தல் நடப்பது தம்பிக்கா பிரதேசத்துல, ஆனால் இவரு சண்டை போடுவது இம்பிக்கா தேசத்து தலைவர் தர்மேந்திரா ஆட்சியோட. முசோலினிக்கு எதையும் எழுதிக் கொடுத்தா தான் பேசுவாருன்னு தெரிஞ்ச மக்களுக்கு, இவர் ஏன் தர்மேந்திராக்கு எதிரா நின்று கம்பு சுத்துறாருன்னு ஒரே கன்பியூஷன்.

தேர்தல் நேரத்துல திருந்தாத முட்டாள் கழகம் எதை ஹைலைட்டா சொல்லி பிரச்சாரம் செய்யுறாங்க, அது எந்தளவுக்கு மக்களுக்கு போய் சேருது என ஸ்ரீதமிழ் களத்தில இறங்கி ஆய்வு செஞ்சாங்க. களத்தில இறங்கிய பிறகு தான் தெரிஞ்சது, பிரச்சாரம் ரொம்ப கீழே இறங்கி நடக்குதுன்னு. முசோலினிக்கு பிறகு அதிகாரத்துக்கு வரனும்னு துடிக்கிற "உதவாக்கரை மகன்" போன தேர்தலில் கட்டிடம் கட்ட வெச்சிருந்த செங்கல்லை தூக்கி காட்டி பிரச்சாரம் செஞ்சது தான் வெற்றிக்கு காரணம் என கட்சியின் அடிமைகள் சொன்னதை உண்மை என நம்பி இந்த முறையும் நாம் செய்யனும் என நினைச்சாரு. அப்போது கழிவறையில் இருந்த "உதவா" இந்த தேர்தலில் நாம் எதை தூக்கி காட்டுவது என யோசித்த போது கணநேரத்தில் உதித்த ஐடியா தான் "கடும்பாடி" முன்னொரு காலத்தில் ராஜமாதா கலாவிடம் காலில் விழுந்த புகைப்படத்தை காட்டுவது என தீர்மானித்தார்.

உதவா, செல்லுமிடங்கள் எல்லாம் பல சைஸ்களில் அந்த படத்தையே தூக்கிக் காட்டி பிரச்சாரம் செய்தார். ஒரு கட்டத்தில் பொறுமையிழந்த கடும்பாடி, உதவா ஒரு காலத்தில் பொழுதுபோக்கிற்காக தனது நண்பன் சாந்தனுடன் கூத்து கட்டி வந்தார். அதிகாரமிக்க குடும்பம் என்பதால் ஆதாயத்திற்காக பிரபலமான தாரா நடிகை இவருடன் கூத்து கட்டியது போக, குதூகலமாய் இருந்து பின் பால்டாயில் வரை சென்ற கதையை ஒரே வரியில் போடுடைத்தார். ரொம்ப அசிங்கமா போச்சே கொமாரு என்ற கதையாக, கேவலப்பட்டாலும் கேப் விடாமல் அதை மட்டுமே பிரச்சாரம் செய்வதே உதவாக்கரைக்கு வேலையாக இருந்தது.

பிரதான கட்சிகளின் பிரச்சாரம் அடிக்கும் பங்குனி வெயிலில் நடந்தது என்றால், கஜாவின் பிரச்சாரமோ அலட்டிக்கொள்ளாமல் கேரவனில் வருவது, ஒரு வார்த்தைக் கூட பேசாமல் கையசைத்து போவதுமாக இருந்தது. கடும்பாடி, முசோலினி ஊரெல்லாம் சுத்தி வந்து மாம்பழம் பெற போராடி வந்த போது, தாய், தந்தையே உலகம் என மொத்தமே 10 தொகுதிக்கு சுத்தி வந்தார். 48,500 ஆண்டுகளுக்கு முன்பு உலகை அச்சுறுத்திய சோம்பி வைரஸ் க்ளைமேட் மாற்றத்தால் மீண்டும் வெளிவந்தது போல, கஜாவை திரையில் பார்த்து பித்துப் பிடித்தவர்கள், அவரை நேரில் பார்த்ததும், பல ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின் சைபீரியாவில் தோன்றிய சோம்பி வைரஸ் போல தாக்குதலுக்கு உள்ளானார்கள்.

கஜாவுக்கு ஓட்டு போடலன்னா சோத்துல விஷம் வெச்சிருவேன், கையில பிளேடால் கிழிச்சுப்பேன் என ரீல்ஸ் வீடியோ போட்டு சோம்பிகள் தம்பிக்கா பிரதேசத்தையே அச்சுறுத்த ஆரம்பித்தனர். தேர்தல் நாளில் தனக்கு ஓட்டு இருக்கிறதா? இல்லையா? என்று தெரியாமல் வாக்குசாவடியில் போய் அலப்பரை செஞ்சது வேற லெவல். தங்களின் அறிவுகெட்டதனத்தையுமே ரீல்ஸாக போட மறக்கவில்லை என்பது சோம்பிகளின் ஸ்பெஷல். இப்படியாக தேர்தல் தம்பிக்கா பிரதேசத்தில் சிறப்பாக நடந்து முடிஞ்சிருக்கு.

கஜாவின் சோம்பிகளின் அதிரடி பிரச்சாரம், குடும்பத்தினரை மிரட்டி பலரை ஓட்டு போட வெச்சதினால் ஆடிப்போனா முசோலினி கட்சி என்ன செய்வதென்று தெரியாமல் தவிக்கும் நிலையில் தாங்கள் வளர்க்கும் வேட்டைநாய்களை வைத்து சோம்பிகளை கடித்து குதற வைக்கத் தொடங்கி இருக்கிறது. ஊடகங்களில் இந்த வேட்டைநாய்கள் கஜா கட்சியினரை கடைந்தெடுத்த "தற்குறிகள்" என குரைக்க ஆரம்பித்துள்ளனர்.

டிவியிலும், சோஷியல் மீடியாவிலேயும் இந்த நாய்களின் குரைக்கும் சத்தத்தைக் கேட்ட சாமானியர்கள் என்னடா! போனமாசம் தானேடா நீங்க, "கல்வியிற் சிறந்த தம்பிக்கா நாடு" என செட்டப் நிகழ்ச்சி நடத்துனீங்க, இப்ப என்னடா என்றால் பூரா பேரையும் தற்குறின்னு சொல்றீங்க என்றார்.

அதற்கு பக்கத்தில் அமர்ந்து அவரோடு டிவி பார்த்தவர் சோம்பி கட்சிக்கும், முசோலினி கட்சிக்கும் கொள்கைத் தலைவர் அந்த"காமசாமி" தானே என நக்கலாக சிரித்தார்.

என்ன பாவம் செய்ததோ தம்பிக்கா பிரதேசம்?

# ஹிந்து மத அடையாளங்களுக்குத் தடை - இந்தியாவில் ஷரியா

இராமகிருஷ்ணன்



கர்நாடகத்தில் என்ஜினீயரிங் உள்ளிட்ட தொழிற்படிப்புகளுக்கான பொது நுழைவு தேர்வு (சி.இ.டி.) கடந்த 22-ந் தேதி முதல் 24-ம் தேதி வரை நடைபெற்றது. 23-ம் நாளில் இயற்பியல், வேதியியல் பிரிவு தேர்வு நடைபெற்றது. அப்போது மாணவிகளின் கம்மல், மூக்குத்தி, மோதிரம் போன்றவற்றை தேர்வு அதிகாரிகள் அகற்றினர். அகற்ற முடியாமல் போன மூக்குத்திகளை 'டேப்' போட்டு ஒட்டி மறைத்தனர்.

இந்நிலையில் 24-ஆம் தேதி, உயிரியல், கணித பிரிவு தேர்வு நடைபெற்றது. பெங்களூரு மடிவாலாவில் உள்ள கிருபாநிதி கல்லூரியில் தேர்வு எழுத வந்த 5 மாணவர்களின் சட்டையைக் கழற்றினார்கள் தேர்வு அதிகாரிகள். அவர்கள் பூணூல் அணிந்திருந்தனர். அவற்றை அகற்றும்படி அறிவுறுத்தினர். நீங்கள் தேர்வு எழுத விரும்பினால் பூணூலை அகற்ற வேண்டும் என்று அதிகாரிகள் கூறினர். இதை அறிந்த அந்த மாணவர்களின் பெற்றோர் அந்த தேர்வு மையத்துக்கு வந்து அதிகாரிகளுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

இதேபோல் சிவமொக்கா, பீதர் போன்ற பல்வேறு மையங்களில் மாணவர்களின் பூணூல் அகற்றப்பட்டன. கடந்த ஆண்டே இத்தகைய நிகழ்வு நடைபெற்றது. இதற்கு பெற்றோர் எதிர்ப்பு தெரிவித்ததால், இனி பூணூல் அகற்றப்பட மாட்டாது என்று அரசு தரப்பில் உறுதியளிக்கப்பட்டது. ஆனால் தற்போது இந்த நிகழ்வு நடைபெற்று உள்ளது. இதுகுறித்து எதிர்க்கட்சி தலைவர் ஆர்.அசோக் தனது எக்ஸ் வலைதள பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், "காங்கிரஸ் அரசு இந்து விரோத நடவடிக்கையில் ஈடுபடுகிறது. பெற்றோர் எதிர்ப்பு தெரிவித்தபோதிலும் தாலி, பூணூல் தொடர்ந்து அகற்றப்படுகிறது. ஒருபுறம் இந்துக்களுக்கு பாதுகாப்பு இல்லை. இன்னொருபுறம் இந்துக்களின் நம்பிக்கைகள் மீது தாக்குதல் நடத்தப்படுகிறது. இது காங்கிரஸ் அரசின் தவறான அரசியலை வெளிப்படுத்துகிறது. இதற்கு யார் பொறுப்பு என்பதை அரசு கூற வேண்டும். காங்கிரஸ் என்ற நவீன முஸ்லிம் லீக் அரசு அதிகாரப்பூர்வமற்ற முறையில் ஷரியா சட்டத்தை அமல்படுத்துகிறது. ரம்ஜான் பண்டிகையின் போது உருது பள்ளிகளின் நேரத்தை இந்த அரசு மாற்றுகிறது. மற்றொரு புறம் இந்துக்களின் தாலி, பூணூலை அகற்றுகிறது. இது இந்து விரோத அரசு" என்று குறிப்பிட்டுள்ளார்.

அரசின் உத்தரவையும் மீறி, மூக்குத்தி, கம்மல் போன்றவற்றை டேப் போட்டு ஒட்டியும், சட்டைக்குள் இருக்கும் பூணூலை அறுத்தும் ஹிந்து மதத்தின் மீதுள்ள வன்மத்தைக் கக்கும் ஆசிரியர்கள் பள்ளியில் பாடம் மட்டும் தான் நடத்தியிருப்பார்களா? இந்த ஆசிரியர்கள் மீது, அவர்கள் சென்ற இடங்களிலெல்லாம் என்ன செய்தார்கள் என்று தீர விசாரித்து கடுமையான நடவடிக்கை எடுத்தால் மட்டுமே இது போன்ற வெறுப்புச் செயல்களைத் தடுக்க முடியும்.

தில்லியிலுள்ள கங்கா இண்டர்நேஷனல் பள்ளியில், செக்யூரிட்டி பணியில் ஈடுபட்டிருக்கும் ஊழியர்கள் ஹிந்து மாணவர்கள் பூணூல், காப்புக் கயிறு போன்றவற்றையும், மாணவிகள் பொட்டையும் அகற்றச் செய்தனர். ஆனால் முஸ்லீம் மாணவிகள் புர்காவுடன் அனுமதிக்கப்பட்டனர். இந்தப் பாகுபாடை பெற்றோர்கள் எதிர்த்தனர். ஹிந்து அடையாளங்களை அழிக்கும் செயல், திட்டமிட்டு நாடு முழுவதும் நடந்தேறி வருகிறது. இந்தச் செயல் அடிப்படை மதச் சுதந்திரத்திற்கு எதிரானது. அடையாளத்தை மறைத்து ஆள் மாறாட்டம் செய்ய வாய்ப்புள்ள உடைக்கு அனுமதி ஆனால், ஆடைக்குள் இருக்கும் பூணூலையும், உடலுடன் ஒட்டி, வெளிப்படையாகத் தெரியும் கம்மல், மூக்குத்தி, பொட்டு போன்றவற்றால் முறைகேடு நடக்க வாய்ப்பிருக்கிறது என்று அகற்றும் செயல் நியாயமற்றது என்பதைவிட தீய உள்நோக்கம் கொண்டது.

# அரசியல் உலா

**- கரிகாலன்**

**ஆனந்த உலா**

இது மாற்றத்திற்கான காலம். தேர்தல் அலையடித்து ஓய்ந்து விட்டது. பரபரப்பான அரசியல் சூழ்நிலை சற்றே ஆறி இருக்கிறது.

நானுமே கூட இடைவிடாத தேர்தல் பணிகளில் ஈடுபட்டிருந்த காரணத்தினால் தினசரி நடைப்பயிற்சியைத் தொடர முடியாத ஒரு நிலை இருந்தது, இப்பொழுது அதுவும் மாறி இருக்கிறது.

மிகவும் அசதியாக இருந்தது, கோடை வெயில் வாட்டி வதைக்கிறது ஆனாலும் ஓய்வெடுக்க கொடைக்கானல், ஊட்டிக்கோ, தொலைதூர நாட்டுக்கோ செல்லும் வசதி இல்லாத காரணத்தினால் வீட்டிலேயே இரண்டு நாட்கள் ஓய்வெடுத்து விட்டு மீண்டும் நடைப் பயிற்சியைத் தொடங்கி விட்டேன்.




ஓய்வெடுத்தாலும், ஓய்வில்லாமல் உழைத்தாலும், நேரில் சந்தித்தாலும், அலைப்பேசியில் அழைத்தாலும் எல்லோரும் கேட்பது ஒரே கேள்வி. உங்களிடமும் அதைக் கேட்டிருப்பார்கள். என்னிடமும், என்னைச் சுற்றி இருப்பவர்களிடமும் தினமும் பலர் கேட்டபடியே இருக்கிறார்கள்.

எல்லோருக்கும் பதில் ஒன்றுதான். இந்த இதழ் கையில் கிடைக்கும் பொழுது தேர்தலுக்குப் பிந்தைய கருத்துக் கணிப்புகள் வெளியாகி இருக்கும். ஆனால் அவற்றின் நம்பகத்தன்மை கேள்விக் குறியாகி இருக்கும். ஆறேழு மாதங்களுக்கு முன்பு நாம் எழுதியபடி ஆட்சி மாற்றம் உறுதி செய்யப்பட்டு விட்டது. இன்னும் சில நாள் பொறுத்து இருப்போம். முழுமையான முடிவுகள் வந்த பின்பு நீங்கள் நம்பினால் போதுமானது.

கருத்துக்கணிப்புகளின் மீது ஐயப்பாடு வந்து பலகாலம் ஆகிவிட்டது. அவரவர் விருப்பத்திற்கு ஏற்றபடி விளைவுகள் இருக்கும் என்று நம்ப வைக்கிறார்கள். ஜனநாயகன் வருகையில் தாமதம் ஆகி இருக்கலாம், ஜனநாயகம் வருகையில் மாற்றமில்லை. மே 4 ஆம் தேதி தான் முஹூர்த்த நாள்.

தேர்தலில் அதிக சச்சரவுகள், சலசலப்புகள் இல்லாத ஒரே கூட்டணி தேசிய ஜனநாயக கூட்டணி மட்டும் தான். தொகுதிப் பங்கீடு தொடங்கி தேர்தல் பிரச்சாரம் வரையில் அனைத்துமே சுமூகமாக நடந்து முடிந்தன. பிரதமர் உள்துறை அமைச்சர் உள்ளிட்ட எத்தனையோ தலைவர்கள் கூட்டணி வேட்பாளர்களுக்காக சிறப்பான முறையில் பிரச்சாரம் செய்து முடித்தனர்.

ஏற்கனவே எதிர்பார்த்தபடி எதிர் தரப்பில் ஏகப்பட்ட குழப்பம். திமுகவிற்கும் காங்கிரசுக்குமான உறவில் ஏற்பட்ட விரிசல் கூட்டணியில் நீடிப்பதா இல்லையா என்பது தொடங்கி, வாக்குப்பதிவுக்குப் பின்னும் இன்னும் நீடித்து வருகிறது. இரண்டு கட்சித் தலைவர்களும் ஒன்றாக மேடை ஏறவில்லை என்பது கூடுதல் தகவல்.

ஐந்தாண்டு கால திமுக ஆட்சியின் மீதான மக்களின் அதிருப்தி, பெருங் கோபமாக இத்தேர்தலில் வெளிப்படும் எனத் தெரிந்ததால் தேர்தலுக்கு முன்பே திமுக கூட்டணி தோல்வியைச் சந்திக்கத் தயாராகிவிட்டது.

திமுகவின் நீண்ட கால அரசியல் அனுபவம் இந்த தேர்தலில் அவர்களுக்கு வெகுவாகக் கை கொடுத்திருக்கிறது. கை மட்டுமே ஒழுங்காகக் குலுக்கவில்லையே தவிர, மீதி கூட்டணிக் கட்சிகள் அனைத்தையும் திமுக சின்னம் எனும் ஒற்றைத் தகர டப்பாவிற்குள் போட்டு குலுக்கோ குலுக்கென்று குலுக்கி விட்டார்கள்.

கூட்டணியில் இருக்கும் சிறு சிறு கட்சிகள் ஓரிரு தொகுதிகளில் ஜெயித்து விட்டு ஆட்சி

மாற்றத்திற்குப் பின் அணி தாவிடக்கூடும் என்ற பயம் இருந்ததாலே தான் அவர்கள் அனைவரையும் திமுகவின் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட வற்புறுத்தினார்கள். ஜெயித்தால்தானே மனம் மாறும் என்ற கேள்வியோடு பலர் தோற்கடிக்கவும் படலாம்.



இதற்கிடையே அடுத்த தேர்தலைக் கணக்கில் கொண்டு திமுக தனது சத்தியமூர்த்தி பவன் கிளையின் தலைவரை மாற்றுவதற்கான எல்லா ஏற்பாடுகளையும் செய்து விட்டது.

காங்கிரசின் கை, தூக்கி வைத்திருக்க வேண்டிய விசிலை பின்னணியில் இருந்து யாரோ தூக்கி திமுக ஆட்சிக்கு மொத்தமாக சங்கு ஊதி விட்டார்கள். மறைமுகமாக காங்கிரஸூம் அதற்கு உதவி இருக்கிறார்கள்.

வாக்குப்பதிவு தினத்தன்று நடைபெற்ற சம்பவங்களை வைத்து பார்த்தால் நாதக, விசிக, திமுக மூவரின் வாக்கு வங்கியையும் தவெக மிகப்பெரிய அளவில் பதம் பார்த்திருப்பது தெரிய வருகிறது.

மொத்தத்தில் ஆச்சரியங்களை எதிர்பாருங்கள், அதிகம் காத்திருக்கிறது.

ஒருவேளை இப்படி எல்லாம் இல்லாமல், எதிர்மறையாக நடந்து விட்டால்..? அதற்கென்ன மக்களின் தீர்ப்பை மதிக்கிறோம் என்று அடுத்த இதழில் விளக்கம் கொடுத்துவிட்டால் போச்சு. !

**ஒரு பக்க நாளேடு:**

உங்களில் பலரும் ஏதோ ஒரு விதத்தில் கேட்டறிந்த சம்பவம், சிலருக்கு நேர்ந்த அனுபவம் எனக்கும் நேர்ந்தது.



தேர்தல் நாள். நான் வாக்களிக்கத் தயாராகிக் கொண்டிருந்தேன். வாட்ஸ் அப் தொடர்பு என்னைத் தாமதப்படுத்தியது. மலேஷியத் தோழியின் திடீர் கரிசனம். திமுகவுக்கா வாக்களிப்பீர் எனக் கேள்வி. நிச்சயமாக இல்லை என்றதும், வேறு யாருக்கு என்ற தொடர்க் கேள்வி.

எனது தொகுதியில் அதிமுக எனச் சொன்னதும் இந்த முறை விஜய்க்கு வாய்ப்பளிக்கலாமே என்ற அறிவுறுத்தல். நாசூக்காக நான் அதை மறுத்த போது தனக்காக தவெகக்கு வாக்களியுங்கள் என்ற கோரிக்கை.

விருப்பமில்லை என்று எத்தனையோ முறை சொன்ன பிறகும் தொடர்ந்து விசில் ஊதிக் கொண்டே இருந்தார். எதற்கும் வாய்ப்பில்லை என்றதும் விலை போய் விட்டேனா என்ற குற்றச்சாட்டு.

நானும் பொறுமையாக நமது அரசியல் சார்பையும் கொள்கை பிடிப்பையும் கோடிட்டுக் காட்டிய பிறகு, வாக்குகளை விற்று விடாதீர்கள் என்ற முனுமுனுப்போடு அரைகுறை மனதுடன் அனுமதி கொடுத்தார்.

வாக்குச்சாவடியில் வரிசையில் நிற்கையில் பெற்றோரிடம் கெஞ்சிய குழந்தைகள், வீட்டிலேயே மிரட்டி காரியத்தைச் சாதித்துக் கொண்ட சிறுமிகள், வாட்ஸ் அப்பிலும் அலைபேசியிலும் ஆதரவு திரட்டிய பெண்கள் என இதில் பல ரகம் உண்டு.

வழக்கம் போல் எவரெவருக்கோ வாக்கை வீணடிப்பவர்கள், இந்த முறை பிறரது வற்புறுத்தலால் வீணடித்தவர்கள், இதை மாற்றம் என நினைத்து ஏமாந்தவர்கள், அவர் நன்றாக நடிப்பார் நடனமாடுவார் என நம்பி மோசம் போனவர்கள், அதை மதக் கடமையாக நினைத்து மடத்தனம் செய்தவர்கள். இப்படி விசில் சத்தத்தை இந்த ஐந்து வகையறாக்களில் அடக்கி விட முடியும்.

வெளிநாட்டில் இருந்தும் வெறித்தனமாக வேலை செய்யும் இத்தகைய பிரச்சார யுக்திகளை எந்தக் கட்சித் தலைமையும் எதிர்பார்க்கவில்லை என்பதுதான் உண்மை. மொத்தத்தில் இது நாள் வரையில் உறங்கிக் கொண்டிருந்த பல பைத்தியங்களை உசுப்பி விட்டிருக்கிறது தவெக தலைமை.

திரை மோகம் தமிழக அரசியலை இன்னமும் ஆட்டிப்படைக்கிறது என்பது கண்கூடாகத் தெரிகிறது. தெளிவாகச் சிந்திக்கும் திறனற்ற இத்தகையத் தலைமுறையை உருவாக்கிய பெருமை திராவிட அரசியலையே சாரும். விஜய் அதன் பலனை அறுவடை செய்ய நினைக்கிறார், இது எங்கு போய்ச் சேரும் என்பது தெரியவில்லை.

இப்படிப்பட்ட மூடத்தனத்தின் உச்சத்தில் இருப்போரை வெறுமனே தற்குறிகள் என விட்டு விடாமல் அவர்களுக்கும் குறைந்தபட்ச அறிவூட்டி காப்பாற்ற வேண்டிய சமூகக் கடமை புதிய அரசுக்கும், அதை விடக் கூடுதலாக நமக்கும் இருக்கிறது.

ஊடகங்களில் தவெக குறித்த தீவிரப் பிரச்சாரம் இன்னும் தொடர்கிறது. விசில் பைத்தியங்களால் விளையும் துன்பங்களை சமூக ஊடகங்கள் விவாதிக்கின்றன. துக்ளக்கில் சத்யா அவரது பாணியில் “ஒன்னரைப் பக்கம்” எழுதி இருக்கிறாராம். இங்கு நம் பங்குக்கு நமது அக்கறையை நாம் ஒரு முக்கால் பக்கமாவது நிரப்ப வேண்டாமா!

# தொண்டு நிறுவனம் வாயிலாக இஸ்லாமிய மதமாற்றம்

ரகுபதி





மஹாராஷ்டிரா மாநிலம் நாக்பூரில் இயங்கி வரும் 'ஃபிகர் ஃபவுண்டேஷன்' (Fikar Foundation) மற்றும் 'படே ஹம், பத்தாயே ஹம்' (Padhe Hum, Padhaye Hum) ஆகிய தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் உரிமையாளரான ரியாஸ் காஜி என்பவர் கைது செய்யப்பட்டார். இந்த நிறுவனங்களில் பெண் ஊழியர்களை இஸ்லாமிற்கு மதம்மாறு மாறும், இஸ்லாமிய உடை விதிகளைப் பின்பற்றுமாறும், குறிப்பிட்ட மதச் சடங்குகளைக் கடைப்பிடிக்குமாறும் அவர் வற்புறுத்தியதாகக் கூறப்படுகிறது. இந்த விவகாரத்தில் ஏதேனும் பெரும் குற்றப் பின்னணி கொண்ட அமைப்புக்களுடன் தொடர்புள்ளதா அல்லது வெளிநாட்டு நிதி உதவி உள்ளதா என்பதையும், பாலியல் துன்புறுத்தல் தொடர்பான புகார்களையும் விசாரிக்க மகாராஷ்டிரா பயங்கரவாத எதிர்ப்புப் படை (ATS) களமிறங்கியுள்ளது. தொண்டு நிறுவனங்களுக்கு வரும் நிதியின் ஆதாரங்கள் குறித்தும், எத்தனை பெண்கள் இவ்வாறு தவறாக நடத்தப்பட்டனர் என்பது குறித்தும் அதிகாரிகள் தற்போது ஆய்வு செய்து வருகின்றனர்.

முன்னதாக நாசிக்கில் உள்ள டாடா கன்சல்டன்சி சர்வீசஸ் (TCS) வளாகத்தில் இது போன்ற ஒரு மதமாற்ற முயற்சி மற்றும் துன்புறுத்தல் வழக்கைத் தொடர்ந்து இந்த கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. டி.சி.எஸ் நிறுவனத்தில் மதமாறிய ஹிந்துக்கள், ஒரு குழுவாக அமர்ந்து கொண்டு, அவர்கள் பெயரையும், மதமாற்றத்திற்குப் பின் கொடுக்கப்பட்ட இஸ்லாமியப் பெயர்களையும் சொல்லி அறிமுகப்படுத்திக் கொண்ட வீடியோ, பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. இந்தச் சர்ச்சை அடங்கும் முன், தொண்டு நிறுவன மதமாற்றம் பல கேள்விகளை எழுப்பியுள்ளது.

வியாபார நிறுவனங்கள், தொண்டு நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள் என்று மதமாற்றத்தை வாழ்வியலாகவே மாற்றி விட்டனர் இஸ்லாமிய அடிப்படைவாதிகள். 2047 ஆம் ஆண்டிற்குள், இந்தியாவை முஸ்லீம் நாடாக்குவோம் என்ற பாப்புலர் ஃபிரண்ட் ஆப் இந்தியாவின் அறிவிப்பை செயல் வடிவம் கொடுக்கும் செயலாகவே இது பார்க்கப்படுகிறது. எந்தெந்த ஜாதிப் பெண்களைத் திருமணம் செய்து மதமாற்றினால் எவ்வளவு பணம் என்று ரேட் கார்ட் போட்டது பி.எஃப்.ஐ. இந்த லவ் ஜிகாத் திட்டத்தை நிறைவேற்ற, தொழில், பொருளாதாரம், சமூக சேவை, அரசுத் துறைகள், கல்வி, தொலைத் தொடர்பு மற்றும் போக்குவரத்து போன்ற துறைகளைக் கைப்பற்றி வருகிறார்கள் முஸ்லீம்கள்.

1990களுக்குப்பின் வந்த உலகமயமாக்கல் கொள்கைக்குப்பின், கல்வித் திட்டத்திலும், வேலை வாய்ப்புகளிலும் பெறும் மாறுதல் ஏற்படத் தொடங்கியது. பொறியியல், கணினி போன்ற துறைகளில் மாணவர்கள் ஆர்வம் காட்டத் தொடங்கினர். உலகமயமாக்கலுக்கு முன், ஒவ்வொரு துறையின் நிர்வாகம், பொதுவாக அந்தத் துறை சார்ந்த நிபுணர்களிடமே இருந்தது. உலகமயமாக்கலுக்குப்பின், மனிதவள நிர்வாகம், பிரத்தியேக நிபுணத்துவம் கொண்ட துறையாக உறுவெடுத்தது. மனிதவள மேம்பாடு, நிர்வாகம், பொதுச் சேவை, உளவியல் போன்ற துறைகள் வளர்ந்ததுடன், இவைகளைக் கட்டாயப்படுத்தி நிர்வாக அலகுகளில் சேர்க்கும் சட்டங்களும் இயற்றப்பட்டன. பெரிய கணினி நிறுவனங்களில், கவுன்சிலர் (counsellor) நியமனம் கட்டாயமாக்கப்பட்டது. நிறுவனங்கள் பின்பற்ற வேண்டிய விதிமுறைகள், சோசியல் ஒர்க், மனிதவள மேம்பாட்டுப் படிப்புகளை படித்தவர்கள் தேவை என்ற அளவில் சி.எஸ்.ஆர் பணிகளை நடைமுறைப்படுத்தும் சட்டம் வடிவமைக்கப்பட்டன. வேலைக்கு சேர்க்கவும், பணியாளர்களை நிர்வகிக்கவும் இத்தகைய படிப்புகளைப் படித்தவர்கள் மட்டுமே எளிதாகக் கையாளும் வண்ணம் விதிகள் வகுக்கப்பட்டன.

இந்த நிபுணத்துவத்தைக் கொடுக்கும் கல்விமுறை, அமெரிக்க - ஐரோப்பிய பன்னாட்டு நிறுவனங்களின் வசதிக்கேற்ப, அவர்கள் சித்தாந்தக் கோட்பாடுகளின் அடிப்படையிலேயே

வடிவமைக்கப்பட்டன. இந்த நடைமுறை, பண்பாட்டுச் சீரழிவை ஏற்படுத்தும் காரணியாகவும் அமைந்தது. கார்பரேட் கல்சர் என்ற பெயரில், உணவுப் பழக்கம், உடைப் பழக்கம், மனிதர்களுக்கிடையேயான தொடர்பு முறை ஒழுக்க முறைகள் என்று அனைத்து வாழ்வியல் கூறுகளும் மறுவரையறை செய்யப்பட்டது. இதன் விளைவாக, நம் நாட்டின் தன்மையை நம் இளம் சமுதாயம் இழந்தது. வாழ்வின் குறிக்கோளும் மாறியது.

கார்ப்பரேட் கம்பெனியின் தயாரிப்பு, சேவை, நிர்வாகம் போன்ற துறைகளில் ஆர்வம் காட்டிய நம் இளைஞர்கள், மனிதவள மேம்பாட்டுத் துறைகளை கவனிக்காமல் விட்டனர் அல்லது அவர்கள் கவனத்திற்கு இத்துறை போகாமல் மேற்கத்திய பாஸ்கள் பார்த்துக் கொண்டனர். கிறிஸ்தவ கல்வி நிறுவனங்கள், இத்தகைய மனிதவளம் தொடர்பான கல்வியை வழங்கிய நேரத்தில், ஹிந்துக் கல்வி நிறுவனங்கள், அறிவியல், மேலாண்மை, பொருளாதாரம் போன்ற துறைகளில் மட்டும் கவனம் செலுத்தினர். இதன் விளைவாக, செல்வம் ஈட்டும் ஆற்றலை பெற்ற ஹிந்து மனிதவளம், மேற்கத்திய கிறிஸ்தவர்களால் மேம்படுத்தப்படுகிறது.

ஹிந்துக்கள் உழைப்பில், ஹிந்து நிறுவனங்கள் ஈட்டும் லாபம், கிறிஸ்தவர்களால், கிறிஸ்தவ நோக்கங்களுக்காக செலவு செய்யப்படும் நிலை ஏற்பட்டது. இந்தச் சூழலைப் புரிந்து கொண்ட அடிப்படைவாத முஸ்லீம் அமைப்புக்கள், மனிதவள மேம்பாட்டுத் துறைக்குள் 2005 ஆம் ஆண்டு காலகட்டங்களில் ஊடுறுவத் தொடங்கினர். கார்ப்பரேட் மயக்கத்தில் இருக்கும் ஹிந்துக்களை தங்கள் வசம் இழுக்க, கிறிஸ்தவர்களைப் போல் மனிதவளம் தொடர்புடைய துறைகளாகக் கைப்பற்றினர். அதே சமயத்தில், திரைத்துறை, விளம்பரத்துறை போன்றவற்றிலும் கால் பதித்தனர். ஹிந்துக்களின் பெருமித உணர்வை அழிப்பதுடன், அவர்களின் பழக்கவழக்கங்களையும், குறிப்பாக உணவு முதல் வழிபாட்டு முறை வரையிலான சமூகம் சார்ந்த கூறுகளை திட்டமிட்டு அழித்தனர். கார்ப்பரேட் கலாச்சாரத்தாலும், மீடியாக்களின் தாக்கத்தாலும் அடிப்படைகளை இழந்து நிற்கும் ஹிந்துக்களை மதமாற்றுவது இவர்களுக்கு சுலபமாகிவிட்டது.

தொண்டு நிறுவனத்தை வைத்து மதமாற்றம் செய்யும் இஸ்லாமிய நடவடிக்கை புதிதல்ல. முன்னதாக, 'ஜாமியா இமாம் வலியுல்லா டிரஸ்ட்' போன்ற அமைப்புகளை நடத்தி வந்த உமர் கௌதம் என்பவர், வெளிநாட்டு நிதி உதவியுடன் பலவீனமான நிலையில் உள்ள மக்களை மதமாற்றம் செய்ததாகக் கைது செய்யப்பட்டார். மாற்றுத் திறனாளிகளை மதமாற்றம் செய்து, அவர்களை பயங்கரவாதச் செயல்களில் ஈடுபடுத்தினார்.

**அடிப்படைவாத முஸ்லீம் அமைப்புக்கள், மனிதவள மேம்பாட்டுத் துறைக்குள் 2005 ஆம் ஆண்டு காலகட்டங்களில் ஊடுறுவத் தொடங்கினர். கார்ப்பரேட் மயக்கத்தில் இருக்கும் ஹிந்துக்களை தங்கள் வசம் இழுக்க, கிறிஸ்தவர்களைப் போல் மனிதவளம் தொடர்புடைய துறைகளாகக் கைப்பற்றினர்.**

இதற்காக, உமர் கௌதமை உத்திரப் பிரதேச காவல்துறை கைது செய்தது. நம் தமிழகத்திலும் கூட, மாற்றுத் திறனாளிகளுக்கான விசேஷ நிகழ்ச்சி களை அடிப்படைவாத இஸ்லாமிய அமைப்புகள் நடத்தினார்கள்.

கேரளாவைச் சேர்ந்த 'சத்ய சாரணி' (Sathya Sarani) என்ற தன்னார்வத் தொண்டு நிறுவனம் மீது கட்டாய மதமாற்றம் செய்ததாகக் குற்றச்சாட்டுகள் எழுந்தன. தமிழகத்தில், தேனி மாவட்டம், முத்துத்தேவன்பட்டியில் இயங்கி வரும் அறிவகம், பலரை மதம் மாற்றி, பயங்கரவாதத்தில் ஈடுபடுத்தியது. இந்த அறிவகத்தின் தொடர்பிலுள்ள அமைப்புகள், ஆம்புலன்ஸ்கள், ரத்த வங்கி போன்ற சேவையை பாதுகாப்பு அரணாக பயன்படுத்தி பயங்கரவாதச் செயல்களில் ஈடுபட்டுவருகின்றன. இந்த அமைப்புகள், இந்திய அரசால் தடை செய்யப்பட்ட பாப்புலர் ஃபிரண்ட் ஆப் இந்தியாவுடன் (PFI) தொடர்புடையன.

பாகிஸ்தானில் முஸ்லிம் அல்லாத சிறுமிகள் உள்ளூர் குழுக்களின் உதவியுடன் கட்டாய மதமாற்றம் செய்யப்படுவதாகவும், இது சர்வதேச மனித உரிமை கவலைகளை எழுப்புவதாகவும் அறிக்கைகள் தெரிவிக்கின்றன. இதுபோன்ற நிகழ்வுகள் நம் நாட்டில் தடையின்றி நடத்த, பாகிஸ்தானைப் போல் வன்முறையை பிரயோகிக்காமல், தொண்டு நிறுவனம், பணியிடம், கல்வி நிலையங்கள், வியாபாரத் தலம் ஆகியவற்றில் ஆதிக்கம் செலுத்தி சிறுமிகள், சிறுவர்கள் மட்டுமின்றி முதியவர்களைக் கூட விட்டு வைக்காமல் மதமாற்றி வருகிறார்கள். இந்த மதமாற்றப் பணிகளுக்காக, சேவை நிறுவனங்கள் (NGO) என்ற போர்வையில், வெளிநாடுகளிலிருந்து பணத்தைக் கொண்டு வருகிறார்கள். வெளிநாடுகளிலிருந்து வரும் பணத்திற்கு, கணக்குக் கொடுக்க மாட்டோம், சட்டதிட்டங்களில் கடுமை காட்டக் கூடாது என்று அரசுக்கு எதிராகப் போர் கொடியும் உயர்த்தி வருகிறார்கள். பயங்கரவாத மற்றும் பிரிவினைவாதச் செயல்களுக்கு பணத்தை மடைமாற்றம் செய்ய, தொண்டு என்பதை போர்வையாக்கியுள்ளனர். இதைத் தடுக்க, ஹிந்துக்களும், ஹிந்துக் கல்வி நிறுவனங்களும் மனிதவள மேம்பாடு தொடர்பான கல்வியைத் தமதாக்கிக் கொள்ளவேண்டும்.

# மாவோயிஸ்ட் - எல்.டி.டி.இ - சர்வதேச கடத்தல் தொடர்பு

பால கௌதமன்

இடதுசாரி அமைப்பினர் என்றால் மக்களுக்காக குரல் கொடுப்பவர்கள், தியாகிகள், மக்கள் நலனுக்காக அரசை எதிர்க்கும் வல்லமை படைத்தவர்கள் என்ற எண்ணம் பலருக்கு உண்டு. இவர்களின் இன்னொரு முகம் யாருக்கும் எளிதாகப் புலப்படாது. ஜனநாயகத்தை அழித்து சர்வாதிகாரம் செய்வதுடன், சர்வதேச மாபியாக்கள், பிரிவினைவாதிகள், பயங்கரவாதிகளுடன் நெருக்கமாகத் தொடர்பு வைத்திருப்பார்கள். பல நாடுகளை அழித்த சாதனையையும் செய்திருக்கிறார்கள், செய்து கொண்டும் இருக்கிறார்கள். நம் நாட்டில், பல்லாயிரம் உயிர்களைக் குடித்து வளர்ச்சியைத் தடுத்து வந்த மவோயிஸ்ட்டுகளை நிர்மூலம் ஆக்கியது மோடி அரசு. அரசின் கடும் நடவடிக்கையால் பல மாவோயிஸ்ட் தலைவர்கள் சரணடைந்தனர். இதில் முக்கியமானவர் தெலுங்கானா மாநிலத்தைச் சேர்ந்த திப்பிரி திருப்பதி என்கிற தேவ்ஜி. அண்மையில் சரணடைந்த தேவ்ஜி, காவல்துறையினரிடம் அளித்த ஒப்புதல் வாக்குமூலம், பல ஆண்டுகளாக இருந்து வந்த குற்றச்சாட்டுகளை உறுதி செய்துள்ளது.

தமிழீழவிடுதலைப்புலிகள்(LTTE), பிலிப்பைன்ஸ் மற்றும் நேபாளத்தில் உள்ள மாவோயிஸ்ட் குழுக்களுடன் சேர்ந்து இராணுவப் பயிற்சியில் மேற்கொண்டனர் என்று தெரிவித்துள்ளார். பீப்பாய் கையெறி குண்டு வீசும் கருவிகளை (barrel grenade launchers) உருவாக்கியதாகவும், போபால், ரூர்கேலா மற்றும் கொல்கத்தா ஆகிய இடங்களிலிருந்து ஆயுத தயாரிப்புப் பிரிவுகளை நடத்தியதாகவும் அவர் தெரிவித்தார்.

தொடர்ச்சியான பாதுகாப்புப் படையினரின் நடவடிக்கையால் அவர்களின் கட்டமைப்பு பலவீனமடைந்த நிலையிலும், தடைசெய்யப்பட்ட அந்த அமைப்பின் ராணுவப் பிரிவு கடந்த பல ஆண்டுகளாக களத்தில் புதிய ஆயுத கண்டுபிடிப்புகள், ஆயுத உற்பத்தி மற்றும் அமைப்பிற்கு வெளியே இருக்கும் நிபுணர்களின் உதவியுடன் நடத்திய ஆயுதப் பயிற்சி ஆகியவற்றைப் பற்றிய தகவல்களைத் தெரிவித்துள்ளார்.

இந்த விசாரணையின் போது, ட்ரோன்களை வாங்கவும், சுவர்களைத் தகர்க்கும் வகையில் வடிவமைக்கப்பட்ட பீரங்கிகளைப் பொருத்தி மேம்படுத்தப்பட்ட ஆயுதங்களை உருவாக்கவும், பீப்பாய் கையெறி குண்டு வீசும் கருவிகள் போன்ற ஆயுதங்களை உருவாக்கவும் மாவோயிஸ்டுகள் முயற்சிகளை மேற்கொண்டதாக தேவ்ஜி காவல்துறையிடம் கூறினார்.

இலங்கையைச் சேர்ந்த ஒரு விடுதலைப் புலி உறுப்பினர், பிலிப்பைன்ஸைச் சேர்ந்த ஒரு தகவல் தொடர்புப் பயிற்சியாளர் மற்றும் நேபாளத் தொடர்புகள் மூலம் முன்பு அளிக்கப்பட்ட பயிற்சிகள் குறித்தும் அவர் பேசினார். இந்த அமைப்பு எந்த அளவிலான ராணுவ லட்சியங்களைக் கொண்டிருந்தது என்பதையும், தொடர்ச்சியான ராணுவ நடவடிக்கைகள் காரணமாக அந்தத் திறன்கள் எந்தளவிற்குப் பாதிக்கப்பட்டுள்ளன என்பதையும் இந்த விசாரணை சுட்டிக்காட்டுகிறது.

**ஆயுதங்கள் மற்றும் கள அமைப்புகள்**

ஏகே (AK) துப்பாக்கிகள், எஸ்எல்ஆர் (SLR), எல்எம்ஜி (LMG), இன்சாஸ் (INSAS) துப்பாக்கிகள், .303 துப்பாக்கிகள், 12-போர் துப்பாக்கிகள் மற்றும் கார்பைன்கள் ஆகியவற்றை கையாளவும், உற்பத்தி செய்யவும் பயிற்சி பெற்றனர்.

CCM, SCM மற்றும் DVCM போன்ற மூத்த நிர்வாகிகள் வழக்கமாக ஏகே துப்பாக்கிகளை எடுத்துச் செல்வார்கள் என்றும், ACM, அஇகு மற்றும் PM ஆகியோருக்கு பொதுவாக எஸ்எல்ஆர் துப்பாக்கிகள் வழங்கப்படும் என்றும் அவர் கூறினார். PLGA குழுக்கள் பீப்பாய் கையெறி குண்டு வீசும் கருவிகளை உருவாக்கியதாகவும், இவை மாதவி ஹிடுமா என்பவரால் அவர்களின் பட்டாலியனுக்காக தயாரிக்கப்பட்டதாகவும், இது தவிர கையெறி குண்டுகள் மற்றும் 8மிமீ துப்பாக்கிகளை தயாரித்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஆயுதங்களைத் தயாரித்தல் மற்றும் பழுதுபார்க்கும் பணியை மேற்கொண்ட மாவோயிஸ்ட் பிரிவான தொழில்நுட்பத் துறை குறித்த விவரங்களும் விசாரணையில் தெரியவந்தன. கையெறி குண்டுகள் மற்றும் உதிரிபாகங்கள் தயாரிப்பதற்காக 2007-ல் போபால் மற்றும் ரூர்கேலாவிலும், 2011-ல் கொல்கத்தாவிலும்

பட்டறைகள் இயங்கியதாக தேவ்ஜி கூறினார். தெற்கு பஸ்தார் மற்றும் கர்ரேகுட்டலு வனப்பகுதியிலும் ஆயுத உற்பத்தி நடைபெற்றது, ஆனால் பாதுகாப்புப் படையினரின் நடவடிக்கையால் அந்த செயல்பாடு இப்போது வெகுவாகக் குறைந்துவிட்டது அல்லது நிறுத்தப்பட்டுவிட்டது.

**நேபாளத் தொடர்பு**

பல ஆண்டுகளாக அளிக்கப்பட்ட ராணுவப் பயிற்சியில் வெளிநாட்டுப் பயிற்சியாளர்கள் இடம் பெற்றிருந்தனர். 1989-ல், இலங்கையைச் சேர்ந்த ஒரு விடுதலைப் புலி உறுப்பினர் மாட் (Maad) பகுதியில் 40 நாள் பயிற்சி முகாமை நடத்தினார். அங்கு தொண்டர்களுக்கு உடற்தகுதி, துப்பாக்கிச் சுடும் பயிற்சி, கொரில்லா தந்திரங்கள், ராணுவக் கோட்பாடு, தாக்குதல்கள் மற்றும் பதுங்கியிருந்து தாக்குதல் ஆகியவை கற்றுக்கொடுக்கப்பட்டன.

2000-ம் ஆண்டில் மாட் பகுதியில் பிலிப்பைன்ஸைச் சேர்ந்த ஒரு பயிற்சியாளரால் அளிக்கப்பட்ட தகவல் தொடர்புப் பயிற்சி குறித்தும் அவர் குறிப்பிட்டார். விசாரணை மேலும் நேபாளத் தொடர்பையும் சுட்டிக்காட்டியது. 1995-ல் மூத்த மாவோயிஸ்ட்தலைவர்பசவராஜ்,நேபாளகம்யூனிஸ்ட் கட்சித் தொண்டர்களுக்குப் பயிற்சியளிக்க நேபாளம் சென்றதாக தேவ்ஜி காவல்துறையிடம் தெரிவித்ததாக காவல்துறை வட்டாரங்கள் கூறுகின்றன. முக்கியமாக தெற்கு பஸ்தார் மற்றும் மாட் பகுதியில் இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்படும் புத்துணர்ச்சிப் பயிற்சி என வர்ணிக்கப்படும் ராணுவத் தலைமைப் பயிற்சித் திட்டம் குறித்தும் விசாரணையில் குறிப்பிடப்பட்டது. கொரில்லா தந்திரங்கள், அணிவகுப்புகள், அதிரடித் தாக்குதல்கள், பதுங்கியிருந்து தாக்குதல் மற்றும் நகர்வு முறைகள் ஆகியவை அந்தப் பாடத்திட்டத்தில் இடம்பெற்றிருந்தன.

**பாதுகாப்புப் படையினரின் அதிரடி**

பாதுகாப்புப் படையினரின் தொடர்ச்சியான அதிரடி நடவடிக்கை மாவோயிஸ்டுகளின் தொழில்நுட்பத் துறையை கடுமையாகப் பாதித்தது, இதனால் அவர்கள் தங்களின் இருப்பிடங்களைத் தொடர்ந்து மாற்ற வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்பட்டனர். 2012-ல் மாவோயிஸ்ட் தொழில்நுட்பப் பிரிவுத் தலைவர் சதானலா ராமகிருஷ்ணா கைது செய்யப்பட்ட பிறகு, அந்தத் துறையின் பணிகள் பெருமளவு முடங்கின. தற்போது ஆயுதங்கள் எதுவும் தயாரிக்கப்படவில்லை என்று தேவ்ஜி காவல்துறையிடம் கூறினார்.

மணல் குவாரி, பீடி இலை வியாபாரம், கட்டுமானப் பணிகளில் ஈடுபட்டுள்ள ஒப்பந்ததாரர்களிடமிருந்தும், வணிகர்களிடமிருந்தும் தான் கட்சியின் நிதி முக்கியமாக வசூலிக்கப்பட்டதாகவும் அவர் கூறினார். மாவோயிஸ்ட் அமைப்பின் தலைமை குழுக்கள், கீழ் மட்டங்களில் செயல்படும் குழுக்களுக்கு நிதியை வழங்கியதாகவும், அமைப்பின் பொருளாதாரக் கொள்கையின் கீழ், பணம் அதிகபட்சம் மூன்று ஆண்டுகளுக்கு வைத்திருக்கவும் அனுமதிக்கப்பட்டது, அதுவும் பெரும்பாலும் தங்க நாணயங்களாகவே வைக்கப்பட்டிருந்தது என்றும் அவர் தெரிவித்தார்.

பிலிப்பைன்ஸ் மற்றும் நேபாள நாடுகளை மையமாக வைத்து சர்வதேச போதை மற்றும் ஆயுதக் குழுக்கள் செயல்படுகிறது. இந்தக் குழுக்களும் எல்.டி.டி.இ அமைப்பும், இணைந்து செயல்பட்டது. தமிழ் பிரிவினைவாதம் பேசும் ஜெகத் கேஸ்பர் ராஜ் போன்ற கிறிஸ்தவ மிஷனரிகள், பிலிபைன்ஸில் பலகாலம் இருந்ததை நாம் கவனிக்க வேண்டும். அமெரிக்காவில், எல்.டி.டி.இ அமைப்பிற்கு, ஆயுதம் வாங்கிய வழக்கில் ஜெகத் கேஸ்பர் மீது வழக்கு தொடரப்பட்டது. மாவோயிஸ்ட் பயங்கரவாதிகளுக்கு ஜார்கண்ட், ஒடிசா, சட்டிஸ்கர் ஆகிய மாநிலங்களில், கிறிஸ்தவ மிஷனரிகள் உதவி செய்து வருகின்றனர். தமிழகத்தைச் சேர்ந்த பாதிரியாரான ஸ்டேன்ஸ் சாமி, இந்த பயங்கரவாதிகளுக்கு பேருதவி செய்து, அரசிடம் சிக்கிக்கொண்டார். இன்று ஸ்டேன்ஸ் சாமிக்கு, நினைவுத் தூண் எழுப்பியுள்ளார், சேலத்தைச் சேர்ந்த வாடகைப் போராளி பீயுஷ் மனுஷ். இந்த ஸ்டேன்ஸ் சாமியின் இரங்கல் கூட்டம் சென்னை லயோலா கல்லூரியில் நடத்தப்பட்டது. இதில் முதல்வர் ஸ்டாலின் கலந்து கொண்டார்.

சர்வதேச பயங்கரவாத்தை விதைப்பதுடன், அந்தக் குழுக்களை ஒருங்கிணைத்து, நம் நாட்டிலுள்ள கிறிஸ்தவ மிஷனரிகள் செயல்படுவது, நம் நாட்டின் ஒற்றுமைக்கும், நல்வாழ்விற்கும், இறையாண்மைக்கும் பேராபத்து என்பதை, இந்த மாவோயிஸ்ட் தலைவர் தேவ்ஜியின் வாக்குமூலத்திற்குப் பிறகாவது, பாதுகாப்பு அமைப்புக்களும், அரசியல் தலைவர்களும் உணர்வார்களா! அன்பு மதம் என்ற போர்வைக்குள் ஒளிந்துக் கொண்டு, சேவை என்னும் போலியான ஆயுதத்தைக் கொண்டு, நம் நாட்டை மட்டுமின்றி, உலகத்தின் பல பகுதிகளை சீர்குலைக்கிறது மிஷனரி அமைப்புகள். இந்தச் சதிச் செயல்களுக்கு, இவர்களுக்கு உதவியும், மிஷனரிகளின் பாதுகாப்பையும், செல்வாக்கையும் பயன்படுத்தி, கம்யூனிஸ்ட் நாடுகளின் ஏஜெண்டாக செயல்படுகின்றன இடதுசாரிக் குழுக்கள். இனம், மொழி, பண்பாடு, வாழ்வாதாரம், அடிப்படை உரிமை என்று கவர்ச்சிகரமான கோஷங்களை முன்வைத்து, சாதாரண மக்களை ஏமாற்றும் இடதுசாரி-மிஷனரி கூட்டுச்சதி, நம் நாட்டை பீடித்திருப்பது பேராபத்து.



# வாய்க்காகட்டை வம்பு

- நா.பாஸ்கரன்

| | |
|---|---|
| ஜோசப் விஜய் திருச்செந்தூர் முருகனை வேலோடு போய் தரிசனம் பண்ணிருக்காரே? | திருப்பரங்குன்றம் தீபத் தூண் விஷயத்தில் வாய் திறக்காத பாவத்திற்கு, முருகனை வேலோடு வந்து வழிபட்டிருக்கிறார். இனி காவடி, விரதம் என எல்லாம் படு ஜோராய் தொடங்கும்... இன்னொரு திராவிட குஞ்சு. |
| தெலங்கானாவில் உள்ள 4 கோடி மக்களுக்கும் இனி நான் அம்மாவாக இருப்பேன் னு முன்னால் முதல்வர் சந்திரசேகராவ் மகள் கவிதா பேசியிருக்கே? | ஏம்ப்பா நீ வேற, ஏற்கனவே நம்ம ஊர்ல, தந்தை, சாச்சா, தாதா, அம்மா, அப்பா, அக்கா, அண்ணா னு ஆயிரம் உறவுகள் இருக்கு.... அடுத்த ஆறு மாசத்துல அதே ஊர்லேந்து, இனி நான் உங்களுக்கு அப்பாவா இருப்பேன்னு யாரவது கிளம்பி வந்தா அந்த மாநில மக்களோட நிலைமை என்னவாகும்? |
| கொசுத் தொல்லை தொடர்பாக புகார்கள் வந்தால் 48 மணி நேரத்தில் நடவடிக்கை எடுக்க வேண்டும் - ஐகோர்ட் | ஹ்ம்ம்ம். கொலை, கொள்ளை, நிலுவையில் உள்ள வழக்கு, Contempt of Court இதையெல்லாம் பொறுமையா பாத்துக்கலாம்னு சொல்றாங்களோ! |
| முன்னாள் பிரதமர் ராஜிவ் காந்தி படுகொலை வழக்கில் குற்றம்சாட்டப்பட்டு பல ஆண்டுகள் சிறையில் இருந்து, கருணை அடிப்படையில் வெளியில் வந்துள்ள பேரறிவாளன் வழக்கறிஞராக Bar கவுன்சிலில் பதிவு செய்து கொண்டுள்ளாரே ? | இதென்ன பிரமாதம், கழக ஆட்சி 2.0 அமைந்தால், அவர் சட்ட அமைச்சராக நியமிக்கப்படலாம். பிரதமர், ராணுவ தளபதி, ஜனாதிபதி, ஆளுநர் போன்றோர்களைக் கொன்றால் தியாகிகள் பட்டம் வழங்கும் சிறப்பு மசோதாவை நிறைவேற்றுவார். |
| அமைச்சர் சேகர் பாபுவை எதிர்த்து, போட்டியிட்டுள்ள TVK வேட்பாளர் அஷோக் சினோரே தன் உயிருக்கு ஆபத்து என பொது வெளியில் கூறியுள்ளாரே? | முதல்வர்தான் சொல்லிட்டாரே, 1980களில் இருந்த DMK பார்க்கணுமானு. பரமா பயத்தை காட்டிட்டாங்க.... |

# மோடி ஒரு தீவிரவாதி - காங்கிரஸ் (பொம்மைத்) தலைவர் கட்கே திமிர் பேச்சு

தமிழ்நேசன்

ஊருக்குள் சிலரது பெயரைச் சொன்னாலே வேற ஆள் கிடைக்கலையா? அவனப் போய் ஒரு ஆளுன்னு பேசிக்கிட்டு என்பார்கள். அது போலத்தான் பல காங்கிரஸ்காரர்களின் நிலை இன்று. குறிப்பாகத் தமிழக காங்கிரஸ் அகடவிகடமெல்லாம் செய்து கூட்டணியில் தங்கள் பெருமையை நிலைநாட்டிகொள்ள முயன்று விகடம் செய்தால் என்ன நிலையோ அதை அடைந்து அடங்கிவிட்டது. ராகுல் கோபித்துக்கொண்டார் பிரச்ச ாரத்துக்கு வரமாட்டார் என்று இதுவரை பெரிதும் அறியப்படாத பிரவீண் சக்கரவர்த்தி சொல்ல ஐயா சமூகம் யாருங்க என்று மற்றவர்கள் கேட்டு வைத்தது தான் மிச்சம். சமாதானம் செய்து 28 சீட்டுகளுக்கு இணக்கம் என்ற பனா சிதம்பரம் ஓரமாய் உட்கார்ந்துவிட, இதென்னடா எப்போதும் திமுக சொல்படி தான் போகவேண்டுமா என்று பலரும் எகிற, பிரச்சாரத்துக்கு வந்த ராகுல் ஸ்டாலின் என்ற பெயரை உச்சரிக்காமலே போக, இதையெல்லாம் சரிசெய்ய அனுப்பப்பட்டவர் மல்லிகார்ஜுன கட்கே.

இவர் காங்கிரஸ் கட்சித் தலைவர் என்று பெயர். ஆனால் தலைவருக்கான நாற்காலியை ராகுலோ சோனியாவோ யார் இருக்கிறார்களோ கொடுத்துவிட்டுப் பக்கத்தில் இன்னொரு (மர) நாற்காலி போட்டு உட்கார்ந்து கொள்ளும் விசுவாசி. இவர் ஸ்டாலின் கூடச் சேர்ந்து பிரச்சாரம் செய்ய வந்தார்.

ராகுல் ஏன் வரவில்லை? கேரளா பிரச்சாரம் இருக்கிறது, வங்காளப் பிரச்சாரம் இருக்கிறது, அசாம் பிரச்சாரம் என்று அடுக்கிய கட்கே அதுதான் கட்சித் தலைவர் நானே வந்துவிட்டேனே என்று சொன்னார். துரைமுருகனும் ஸ்டாலினும் ஒன்றா அதுபோலத்தான் கட்கே வந்தாலும் ராகுல் வந்தது போலாகுமா என்று சிலர் கடுப்பேற்றிவிட மேடையில் யாரைத் திட்டுவது என்று பார்த்தார். இருக்கவே இருக்கிறார் மோடி, திட்டுடா கைப்புள்ளே என்று மோடியைத் தீவிரவாதி என்று சொல்லிவிட்டார். அதுவும் தெள்ளத்தெளிவாக "அதிமுக அண்ணாத்துரையின் பெயரில் கட்சி வைத்துக்கொண்டு, அவர் படத்தை வைத்துக்கொண்டு மோடியுடன் எப்படிக் கூட்டுச் சேர்ந்தார்கள்? மோடி ஒரு தீவிரவாதி. அவர் சமத்துவத்தில் நம்பிக்கையற்றவர். அவரது கட்சி சமத்துவத்திலும் நீதியிலும் நம்பிக்கையற்றது. அவர்களோடு இவர்கள் கூட்டணி வைத்துக்கொண்டது எப்படி?'' என்று கேட்டார்.

**ஏன் தீவிரவாதி என்று சொன்னாராம்?**

சொல்லவே இல்லையாம். வீடியோ இருக்கேய்யா? சொல்லியிருக்காரே!

அதுதான் சொன்னார், ஆனால் சொல்வே இல்லை. எதே?

"அதாகப்பட்டது மோடி ஜிஎஸ்டி வரி போட்டு தீவிரமா வசூல் பண்றார், அதனால் வரித் தீவிரவாதின்னு சொன்னேன்'' என்று சப்பைக் கட்டினார் கட்கே. அப்படிச் சொல்லவில்லையே! வீடியோவில் வேறு மாதிரிதானே இருக்கிறது?

இதற்குள் தேர்தல் கமிஷனில் பாஜக புகார் சொல்ல அங்கிருந்து நோட்டீஸ் வருகிறது. 24 மணி நேரத்துக்குள் பதில் சொல்லுங்கள் என்று. பார்த்தார் கட்கே. வழக்கமான பல்லவியைப் பாடிவிட்டார். என்னவாம்?

"நான் தீவிரவாதி என்ற வார்த்தையைச் சொல்லவே இல்லை.'' ஆங்!

"வந்து... மோடி மக்களையும் அரசியல் கட்சிகளையும் அச்சுறுத்துகிறார். அவரிடம் ED, IT, CBI என்று பல விசாரணை அமைப்புகள் உள்ளன. அதை வைத்தும் இப்போது இந்த மறு சீரமைப்பு விஷயத்திலும் மக்களையும் அரசியல் கட்சிகளையும் பயமுறுத்துகிறார். அதனால் அவர் டெரர் காட்டுவதால் டெரரிஸ்ட் போல செயல்படுகிறார் என்று சொன்னேன். மற்றபடி அவர் தீவிரவாதி என்று சொல்லவே இல்லை'' என்று முழுப் பீட்சாவை ஆலிவ் ஆயிலில் மறைக்க முயன்றார் கட்கே. (இத்தாலி வகையறாவுக்கு சோறு பூசணிக்காயெல்லாம் புரியாது பாவம், அதுதான் பீட்சா ஆலிவ் ஆயில் உதாரணம்).

கட்கே பேச்சு ராகுலுக்கு அடுத்து மற்றொரு காங்கிரஸ் கட்சித் தலைவர் மன்னிப்புக் கேட்கும் நிலைக்குக் கொண்டு சென்றுள்ளது. கோர்ட்டில் மன்னிப்பு எழுதிக்கொடுத்துவிட்டு மூச்சுக்காட்டாமல் வெளியே வந்து வீர சூர தீரர்கள் என்று பீற்றிக் கொள்வார்கள். ஜவஹர்லால் நேரு தொடங்கி மன்னிப்புக் கேட்பதில் தொட்டுத் தொடரும் ஒரு பீத்தப் பாரம்பரியமாகக் கொண்டு செயல்படுகிறது காங்கிரஸ். இப்படிப்பட்ட இத்தாலியக் கொத்தடிமைகளற்ற தேசபக்தத் தலைவர்கள் நிறைந்த ஸ்தாபன காங்கிரஸ் போன்ற ஒரு கட்சி எதிர்க்கட்சியாக வரவேண்டும். அப்போதுதான் தேச நலன் காக்க ஆரோக்கியமான விவாதங்கள், செயல்பாடுகள் முன்னெடுக்கப்படும். அதற்கு பாரத மாதா திருவுளம் மலர வேண்டும். வந்தே மாதரம்.

# டாலருக்கு அடுத்த அடி

வீர வேலுநாச்சியார்

**இந்தியா வீசிய குண்டு**

"அமெரிக்கப் பொருளாதாரத்தில் இந்தியா ஒரு பெரிய குண்டை வீசியுள்ளது!" - இது ராணுவ ஆயுதங்களால் நிகழ்த்தப்பட்ட தாக்குதல் அல்ல, டாலரின் ஆதிக்கத்தை அசைத்துப் பார்க்க இந்தியா கையில் எடுத்துள்ள 'யுவான்' (Yuan) என்னும் ஆயுதம்.

சமீபத்தில் கசிந்த ஒரு செய்தி உலக நாடுகளை அதிர வைத்துள்ளது. அமெரிக்காவின் கடும் பொருளாதாரத் தடைகளையும் மீறி, ஈரான் நாட்டிடமிருந்து கச்சா எண்ணெயைச் சுமந்து வந்த நான்கு பிரம்மாண்ட கப்பல்கள் இந்தியக் கரையை வந்தடைந்தன. 'MT Felicity' என்ற கப்பல் ரிலையன்ஸ் நிறுவனத்திற்காக எண்ணெயை இறக்கிவிட்டது. இதில் சுவாரஸ்யம் என்னவென்றால், இதற்கான பணத்தை இந்தியா 'டாலரில்' கொடுக்கவில்லை; SWIFT அமைப்பைப் பயன்படுத்தவில்லை! இந்தியா தனது ICICI வங்கியின் Shanghai கிளை மூலம், சீன 'யுவான்' கரன்சியில் இந்தப் பணத்தைச் செலுத்தியுள்ளது.

அமெரிக்காவின் கண்காணிப்பு வளையத்திற்குள் இருக்கும் டாலரைத் தவிர்த்துவிட்டு, சீனா மற்றும் இந்திய வங்கிகளை இணைத்து ஒரு மாற்றுப் பாதையை இந்தியா உருவாக்கியுள்ளது. அமெரிக்காவுக்கு இந்தியா கொடுத்த தெளிவான செய்தி " இனி Swift payment system நமக்கு தேவையில்லை" என்பதே.

**SWIFT என்றால் என்ன**

உலகப்போர் என்றால் நமக்கு நினைவுக்கு வருவது ஏவுகணைகளும், பெரிய ஆயுதங்களும் தான். ஆனால், ஒரு நாட்டின் மீது ஒரு குண்டு கூட போடாமல், அந்த நாட்டை அப்படியே முடக்க முடியும். அதைச் செய்ய வல்ல நவீன காலத்து 'டிஜிட்டல் பிரம்மாஸ்திரம்' தான் SWIFT.

அமெரிக்காவில் இருக்கும் உங்கள் நண்பர் உங்களுக்குப் பணம் அனுப்பினாலும் சரி, அல்லது நமது நாடு அரேபிய நாடுகளிடம் இருந்து கச்சா எண்ணெய் வாங்கினாலும் சரி, பின்னணியில் இந்த SWIFT இருக்கும். SWIFT இல்லையென்றால் உலகப் பொருளாதாரம் ஒரு நிமிடம் கூட நகர முடியாது.

SWIFT (Society for Worldwide Interbank Financial Telecommunication) என்பது ஒரு வங்கி கிளை அல்ல. இது வங்கிகளுக்கு இடையே தகவல்களைப் பரிமாறும் ஒரு அதிநவீனத் WhatsApp போல இருக்கிறது. உதாரணமாக, நீங்கள் அமெரிக்காவிற்குப் பணம் அனுப்பினால், SWIFT அமைப்பு ஒரு ரகசிய குறியீட்டு செய்தியை (Instruction) அமெரிக்க வங்கிக்கோ அல்லது இடைத்தரகருக்கோ அனுப்பும். "இன்னார் கணக்கிலிருந்து இவ்வளவு பணம் வருகிறது, அதைச் சரிபார்த்து வரவு வையுங்கள்சு என்பதே செய்தி.

அந்த ஒற்றைச் செய்தியை நம்பித் தான் உலகப் பொருளாதாரம் இயங்குகிறது. பெல்ஜியம் நாட்டைத் தலைமையிடமாகக் கொண்டு 1973-ல் SWIFT தொடங்கப்பட்டது. இது சுமார் 2,400 வங்கிகள் இணைந்து நடத்தும் ஒரு கூட்டுறவு அமைப்பு. இந்த அமைப்பு, உலகெங்கிலும் உள்ள 11,000-க்கும் மேற்பட்ட நிதி நிறுவனங்களை இணைக்கிறது. ஆனால், உண்மையில் இதன் கடிவாளம் அமெரிக்காவின் பிடியில் இருக்கிறது.

**அமெரிக்காவின் பொருளாதார எதேச்சதிகாரம்**

அமெரிக்காவின் 'டாலர்' (USD) தான் உலகப் பொதுச் செலாவணி என்பதால், SWIFT-ன் ஒவ்வொரு அசைவும் வாஷிங்டனின் கண்காணிப்பிலேயே இருக்கிறது. உலக வர்த்தகத்தில் 80% டாலரில் நடப்பதால், SWIFT வழியாக நடக்கும் ஒவ்வொரு அசைவையும் அமெரிக்காவால் கண்காணிக்க முடியும்.

அமெரிக்கா நினைத்தால் ஒரு நாட்டைப் பொருளாதார ரீதியாகத் முடக்கி தனிமைப்படுத்த

முடியும். இதற்குப் பெயர்தான் "Financial Sanctions".

அமெரிக்கா தனக்குப் பிடிக்காத நாடுகளை (உதாரணம்: ஈரான், ரஷ்யா) இந்த அமைப்பிலிருந்து நீக்கச் செய்யும். இப்படி நீக்கப்பட்டால், அந்த நாடு சர்வதேச அளவில் எண்ணெய் விற்கவோ அல்லது அத்தியாவசியப் பொருட்களை வாங்கவோ முடியாது. இது ஒரு நாட்டின் பொருளாதார முதுகெலும்பை உடைக்கும் செயல். உதாரணமாக ரஷ்யா அல்லது ஈரான் போன்ற நாடுகள் தங்களுக்கு எதிராகச் செயல்படும்போது, அமெரிக்கா அழுத்தம் கொடுத்து அந்த நாடுகளை SWIFT அமைப்பிலிருந்து நீக்கச் செய்தது. இப்படியாக உலக நாடுகளின் வர்த்தகத்தை அமெரிக்கா தனது விரல் நுனியில் வைத்திருந்தது.

**BRICS**

அமெரிக்காவின் இந்த 'அதிகாரப் பசி' தான் இன்று மற்ற நாடுகளை மாற்று வழியை நோக்கித் தள்ளியிருக்கிறது. "அமெரிக்கா எப்போது நினைத்தாலும் நம் கழுத்தை நெரிக்கலாம்" என்ற பயம் உலக நாடுகளிடையே எழுந்துள்ளது.

அமெரிக்காவின் அட்டகாசத்திற்கு முடிவு கட்ட, பூனைக்கு யார் மணி கட்டுவது என்று உலக நாடுகள் ஏங்கித் தவிக்கையில்தான் BRICS அமைப்பு உருவாகியது. பிரேசில்(B), ரஷ்யா(R), இந்தியா(I), சைனா(C), தென் ஆப்ரிக்கா(S)

ஆகிய 5 நாடுகள் சேர்ந்து ஆரம்பித்த BRICS ல் எகிப்து, எத்தியோப்பியா, இந்தோனேசியா, ஈரான், ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய 5 நாடுகளும் சேர்ந்து மொத்தம் 10 நாடுகள் உறுப்பு நாடுகள். BRICS உருவாக்கிய 5 நாடுகளின் மக்கள் தொகை உலக மக்கள் தொகையில் பாதியாகும்.

**சீனாவின் CIPS**

அமெரிக்காவின் டாலர் அரசியலுக்குப் பதிலடி கொடுக்க சீனா உருவாக்கியதுதான் CIPS. இது முழுக்க முழுக்க 'யுவான்' (Yuan) கரன்சியை மையமாகக் கொண்டது. ரஷ்யா-உக்ரைன் போருக்குப் பிறகு, ரஷ்யா SWIFT-லிருந்து நீக்கப்பட்டதும், சீனா தனது **CIPS** அமைப்பை உலக நாடுகளுக்கு விரிவுபடுத்தி வருகிறது. அமெரிக்காவின் SWIFT-க்கு நேரடிப் போட்டியாக சீனா உருவாக்கிய இந்தத் தளத்தைத்தான் இன்று இந்தியா தனது கச்சா எண்ணெய் வர்த்தகத்திற்கு பயன்படுத்தி அமெரிக்காவுக்கு அதிர்ச்சி கொடுத்துள்ளது.

**ஐரோப்பாவின் SEPA**

சைனாவின் CIPS-ஐ அடுத்து ஐரோப்பிய நாடுகள் தங்களுக்குள் பணப்பரிமாற்றம் செய்ய SEPA என்ற முறையைப் பயன்படுத்துகின்றன. இது ஐரோப்பிய மண்டலத்திற்குள் அமெரிக்காவின் தலையீட்டை விட்டு விலகிப் போவதற்கான அறிகுறி.

**UPI புரட்சி**

அனைத்திற்கும் மேலாக இந்தியாவின் UPI ஒரு அமைதியான புரட்சி ஒன்றை ஏற்படுத்தியிருக்கிறது. இந்தியா தனது சொந்தத் தொழில்நுட்பமான UPI (Unified Payments Interface) மூலம் உலகையே ஆச்சரியப்பட வைத்துள்ளது. SWIFT என்பது பெரிய நிறுவனங்களுக்கானது, ஆனால் UPI என்பது சாமானிய மனிதனுக்கானது. இன்று சிங்கப்பூர், ஐக்கிய அரபு அமீரகம், பிரான்ஸ் போன்ற நாடுகள் UPI-ஐ ஏற்றுக்கொண்டுள்ளன. இது ஒரு கட்டத்தில் சர்வதேசப் பணப்பரிமாற்றத்தின் முகத்தையே மாற்றும் வலிமை கொண்டது.

**இன்று இந்தியா, ஈரான் கச்சா எண்ணெய்க்கு சீன யுவானில் பணம் செலுத்தியிருப்பது ஒரு சாதாரண வர்த்தகம் அல்ல; அது அமெரிக்காவின் ஒற்றைத் துருவ ஆதிக்கத்திற்கு விடுக்கப்பட்ட பகிரங்க சவால்.**

**SWIFT க்கு மாற்று**

SWIFT என்பது வெறும் தொழில்நுட்பம் மட்டுமல்ல; அது ஒரு சர்வதேச அரசியல் ஆயுதம். அமெரிக்கா இந்த ஆயுதத்தை வைத்து உலகை மிரட்டி வந்ததால் SWIFT க்கு மாற்று வழிகள் கொஞ்சம் கொஞ்சமாக பரிணமித்து வருகின்றன. இன்று இந்தியா, ஈரான் கச்சா எண்ணெய்க்கு சீன யுவானில் பணம் செலுத்தியிருப்பது ஒரு சாதாரண வர்த்தகம் அல்ல; அது அமெரிக்காவின் ஒற்றைத் துருவ ஆதிக்கத்திற்கு (Dollar Hegemony) விடுக்கப்பட்ட பகிரங்க சவால்.

SWIFT என்ற ஒரு மையப்படுத்தப்பட்ட அமைப்பை நம்பி உலக நாடுகள் ஏமாந்தது போதும் என்ற முடிவுக்கு பிரிக்ஸ் (BRICS) நாடுகள் வந்துவிட்டன.

எதிர்காலத்தில் CIPS, UPI மற்றும் டிஜிட்டல் கரன்சிகள் இணைந்து ஒரு புதிய நிதி உலகத்தை உருவாக்கும்.

**BRICS Pay**

பிரிக்ஸ் (BRICS) கூட்டமைப்பு தனது சொந்த பிளாக்செயின் அடிப்படையிலான டிஜிட்டல் கட்டண முறையான "BRICS Pay" ஐ அறிமுகப்படுத்த அதிகாரப்பூர்வமாக திட்டமிட்டுள்ளது. 2026 ஆம் ஆண்டு இந்தியாவில் நடைபெறவுள்ள பிரிக்ஸ் உச்சிமாநாட்டின் போது இது முழுமையாகச் செயல்படுத்தப்பட உள்ளது. இதன் மூலம் உறுப்பு நாடுகள் தங்கள் நாட்டு நாணயங்களிலேயே நேரடியாக வர்த்தகம் செய்துகொள்ள முடியும்.

கூடிய விரைவில் டாலரின் ஆதிக்கமும் அமெரிக்காவின் அடாவடித்தனமும் குறையப் போவதை நம் கண்களாலேயே பார்க்கப் போகிறோம் என்பதையே இந்தச் செய்திகள் நமக்கு உணர்த்துகின்றன.

# இந்தியாவில் இன்னொரு சிங்கப்பூர்

- ப்ரியா வெங்கட்

அந்தமான் நிக்கோபார் தீவுக்கூட்டத்தில் உள்ள கலாத்தியா விரிகுடா (Galathea Bay) பகுதியில் அமைய உள்ள புதிய பிரம்மாண்டமான 'சர்வதேச சரக்குப் பெட்டக மாற்று முனைய' (International Container Transshipment Port & ICTP) துறைமுகத் திட்டம், இந்திய மண்ணில் இன்னொரு சிங்கப்பூரை உருவாக்க இருக்கிறது. இந்தத் திட்டம் அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுக்கூட்டத்தின் தென்கோடியில் உள்ள பெரிய நிக்கோபார் தீவில் (Great Nicobar Island) உள்ள 'கலாத்தியா விரிகுடா' என்ற இடத்தில் அமைய உள்ளது. இத்திட்டம் இந்தியப் பெருங்கடலின் மிக முக்கியமான சர்வதேச கப்பல் போக்குவரத்துப் பாதைக்கு (East&West Shipping Route) மிக அருகில் உள்ளது.

**திட்டம்**

இத்திட்டம் இந்திய அரசின் 'துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிகள் அமைச்சகத்தால்' உருவாக்கப்பட்டு வருகிறது. செப்டம்பர் 2024-இல், இது இந்தியாவின் 13-வது முக்கியத் துறைமுகமாக அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டது. இதன் மேம்பாட்டுப் பணிகளின் முதல் கட்டம் 2028-ஆம் ஆண்டில் பயன்பாட்டிற்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**பெயர்க்காரணம்**

1845-47 காலகட்டத்தில் கிரேட் நிக்கோபார் தீவில் கனிம வளங்களை ஆய்வு செய்த 'கலத்தியா' (Galathea) எனும் டேனிய காலனித்துவக் கப்பலின் பெயரால் இந்தப் பகுதி கலத்தியா விரிகுடாத் துறைமுகம் (Galathea Bay Port) என்று இதுவரை அழைக்கப்பட்டு வருகிறது.

**திட்டத்தின் கட்டங்கள்**

₹41,000 கோடியில் உருவாகும் இந்தத் துறைமுகத் திட்டம் மொத்தம் நான்கு கட்டங்களாக அமைக்கப்படவுள்ளது. முதல் கட்டம் 2028-ல் சுமார் 4 மில்லியன் TEU-களைக் கையாளும் திறனுடன் செயல்படத் தொடங்கும். இறுதிக் கட்டத்தில் இது 16 மில்லியன் TEU-களாக உயரும். இரண்டு அலைத்தடுப்புகள், கப்பல் போக்குவரத்திற்கான 400 மீட்டர் அகல கால்வாய், 800 மீட்டர் திருப்பு வட்டம், சுமார் 2.3 கி.மீ நீளத்தில் மொத்தம் ஏழு கப்பல் நிறுத்துமிடங்கள், 125 ஹெக்டேர் பரப்பளவு கொண்ட கொள்கலன் முற்றம், RMQCகள் மற்றும் RTGகள் உள்ளிட்ட கொள்கலன்களைக் கையாளும் உபகரணங்கள், மற்றும் திரவ சரக்குகளுக்காக இரண்டு கப்பல் நிறுத்துமிடங்கள், சேமிப்புப் பகுதிகள், கட்டிடங்கள், பயன்பாட்டு வசதிகள், மற்றும் முக்கிய உள்கட்டமைப்புடன் கூடிய ஒரு துறைமுகக் குடியிருப்பை உருவாக்குதல் ஆகிய அனைத்தும் திட்டத்தின் முதல் கட்டத்தின் மதிப்பிடப்பட்ட செலவில் அடங்கும், இதன் மதிப்பு சுமார் ₹18,000 கோடி ஆகும்.

**சவால்கள்**

பெரிய நிக்கோபார்தீவு ஒரு யுனெஸ்கோ(UNESCO) உயிர்க்கோளக் காப்பகமாகும். இங்குள்ள அரிய வகை உயிரினங்கள், குறிப்பாக பெரிய தோல்முதுகு ஆமைகள் (Leatherback Turtles) முட்டையிடும் இடமாக கலாத்தியா விரிகுடா உள்ளது. கட்டுமானப் பணிகளால் இவற்றின் வாழ்விடம் பாதிக்கப்படலாம் என்ற அச்சம் உள்ளது.

இங்கு தொன்றுதொட்டு வாழும் 'ஷோம்பென்' (Shompen) மற்றும் 'நிக்கோபாரிஸ்' போன்ற வனவாசி மக்களின் கலாச்சாரம் மற்றும் வாழ்விடங்கள் மாற்றங்களுக்கு உள்ளாகலாம்.

அந்தமான் நிக்கோபார் தீவுகள் நிலநடுக்கம் அதிகம் ஏற்படக்கூடிய (Seismic Zone V) பகுதியில் உள்ளன. 2004 சுனாமி போன்ற இயற்கைச் சீற்றங்களின்போது இத்திட்டம் பெரும் பாதிப்புகளைச் சந்திக்க வாய்ப்புள்ளது.

இயற்கைச் சூழலுக்கும் வனவாசி மக்களின் நலனுக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் இத்திட்டத்தைச் செயல்படுத்துவதே இதன்





உண்மையான வெற்றியாக அமையும்.

**தற்போதைய நிலை**

நிலம் கையகப்படுத்தும் பணிகள் முடிந்துள்ள நிலையில், இத்திட்டம் தற்போது கட்டுமானத்திற்கு முந்தைய கட்டத்தில் முன்னேறி வருகிறது;

**இண்டி கூட்டணியின் எதிர்ப்பு**

காங்கிரஸ் கட்சித் தலைவர்கள் சோனியா காந்தி, ராகுல் காந்தி, ஜெயராம் ரமேஷ், ராஷ்ட்ரிய ஜனதா தளம் செயலாளர் தேஜஸ்வி யாதவ் மற்றும் திமுக தலைவர் ஸ்டாலின் ஆகியோர் இத் திட்டம் குறித்து தங்கள் கவலைகளை வெளிப்படுத்தினர். அவர்கள் அனைவரும் இதை "திட்டமிட்ட அத்துமீறல் மற்றும் ஒரு சூழலியல் பேரழிவு" என்று குறிப்பிட்டனர். என். ராம் நடத்தும் 'தி இந்து' நாளிதழில் திருமதி சோனியா காந்தி, செப்டம்பர் 8, 2025 அன்று இதை எதிர்த்து கட்டுரை எழுதினார். மலேசியாவில் ராகுல் காந்தி அலெக்சாண்டர் சோரோஸ் ஐ சந்தித்த பிறகு இந்தக் கட்டுரை வெளிவந்தது வெறும் தற்செயல் நிகழ்வு அல்ல.

தேசிய பசுமைத் தீர்ப்பாயம் (NGT), சுற்றுச்சூழல் அமைச்சகத்தின் உயர் அதிகாரக் குழு, மற்றும் தேசிய நிலையான கடலோர மேலாண்மை மையம் (NCSCM) உள்ளிட்ட பல ஒழுங்குமுறை அடுக்குகளை இந்தத் திட்டம் கடந்துவிட்டது என்பதை சோனியா குறிப்பிடவில்லை. இந்தியாவின் 75 சதவீத சரக்குகள் வெளிநாட்டுத் துறைமுகங்கள் வழியாகவே கையாளப்படுகின்றன என்பதையும், அதில் 40 சதவீதத்தை கொழும்புத் துறைமுகம் மட்டுமே கையாளுகிறது என்பதையும் அவர் தனது கட்டுரையில் எங்கும் குறிப்பிடவில்லை. கொழும்புத் துறைமுகத்தில் சீனா ஒரு முனையத்தை இயக்குகிறது மற்றும், அது இந்தியாவின் கடல்வழி உயிர்நாடிகளில் பெய்ஜிங்கிற்கு நேரடி ஆதிக்கத்தை அளிக்கிறது என்பதையும் அவர் எங்கும் சுட்டிக்காட்டவில்லை. மேலும், 20 மீட்டர் இயற்கையான ஆழத்தையும், கிழக்கு-மேற்கு கப்பல் போக்குவரத்துப் பாதையில் ஒரு முக்கிய இடத்தையும் கொண்டுள்ள கலத்தியா வளைகுடா, இந்தியாவில் ஆழமான சரக்கு மாற்று மையம் ஒன்றை அமைக்கக்கூடிய ஒன்றாகும் என்பதையும் அவர் கூறவில்லை. இந்தத் துறைமுகம், சிங்கப்பூருக்குப் போட்டியாக விளங்கவும், சீனாவுடன் தொடர்புடைய வசதிகளைச் சார்ந்திருக்கும் நிலையிலிருந்து விடுபடவும் ஒரு வாய்ப்பை வழங்குகிறது.

சுற்றுச்சூழல் பாதிப்பு என்ற சாக்கில், காங்கிரஸ் அரசுகள் அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகளில் விமான ஓடுபாதைகள், ரேடார் வசதிகள் மற்றும் துறைமுக விரிவாக்கங்களை மீண்டும் மீண்டும் தடுத்து வருகின்றன. கலாத்தியா வளைகுடா துறைமுகத்தை சோனியா எதிர்ப்பது சுற்றுச்சூழல் பாதுகாப்பைக் காட்டிலும் அரசியல் ஆதாயத்தையே பிரதிபலிக்கிறது.

**பாதுகாப்பு வலுப்படும்**

கிரேட் நிக்கோபார் தீவை மேம்படுத்துவதன் மூலம், இந்தியா தனது கடல் எல்லைகளைப் பாதுகாக்கும் திறனை இரட்டிப்பாக்க முடியும். மேலும், ஜப்பான், ஆஸ்திரேலியா மற்றும் அமெரிக்கா செய்து வருவதைப் போல, குவாட் (QUAD) அமைப்பிற்கு தனது பங்களிப்பை சமன் செய்ய முடியும். இதன் மூலம் இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தை (IOR) திறம்பட கண்காணிக்க முடியும்.

**நன்மைகள்**

இயற்கையாவே அதிகமான ஆழம் உள்ளதால் உலகின் மிகப்பெரிய சரக்குக் கப்பல்கள் (உட்ட்ச் Maersk போன்ற ராட்சதக் கப்பல்கள்) தூர்வார வேண்டிய அவசியமின்றி இங்கு வந்து செல்ல முடியும். சரக்குகளை மாற்றுவதற்காக வெளிநாட்டுத் துறைமுகங்களுக்கு இந்தியா செலுத்தும் பெரும் தொகை மிச்சமாகும். இதன் மூலம் ஆண்டுக்கு ÷200 - ÷220 மில்லியன் வரை சேமிக்க முடியும்.

ஆசியா-ஆப்பிரிக்கா மற்றும் ஆசியா-அமெரிக்கா/ஐரோப்பிய கொள்கலன் போக்குவரத்து வர்த்தகத்திற்கான ஒரு முக்கிய மையமாக இந்தியாவை மாற்றும்.

திருப்பூர், கோவை போன்ற தொழில் நகரங்களிலிருந்து கிழக்கு நாடுகளுக்குச் செல்லும் சரக்குகளின் பயண நேரம் மற்றும் போக்குவரத்துச் செலவு பெருமளவு குறையும். இது உலக சந்தையில் இந்தியப் பொருட்களின் விலையைச் சாதகமாக்கும்.

அந்தமான் நிக்கோபார் பகுதியில் பல்லாயிரக்கணக்கானோருக்கு வேலைவாய்ப்புகள் உருவாவதோடு, அந்தத் தீவுகளின் உள்கட்டமைப்பு மற்றும் சுற்றுலாத் துறையும் வளர்ச்சி பெறும். இத்திட்டம், பொருளாதார ரீதியாகவும், பாதுகாப்பு ரீதியாகவும் இந்தியாவிற்கு ஒரு மிகப் பெரிய வெற்றியாக அமையும்.

**செய்தி:**

**திண்டுக்கல் கோணப்பட்டியில் அரசு அகற்றிய முருகன் சிலை, மீண்டும் நிறுவ ஐகோர்ட் உத்தரவு**

**சிந்தனை**

திண்டுக்கல் மாவட்டம் பெருமாள்கோவில்பட்டியில் கார்த்திகை தீபம் ஏற்ற நீதிமன்ற உத்தரவு இருந்தும் நிறைவேற்றாத ஆட்சியர் தான் இந்த சட்டவிரோத செயலையும் செய்துள்ளார். ஹிந்து இன அழிப்பை தன் அதிகார வரம்பையும் மீறி செயல்படுத்தும் மாவட்ட கலெக்டர் தண்டிக்கப்படவேண்டும்.

# செய்
# சிந்த

**செய்தி:**

**கிருஷ்ணகிரியில் மீண்டும் 'லவ் ஜிகாத்', 17 வயது சிறுமியை கடத்தியதாக முஸ்லீம் வாலிபர் மீது புகார்**

**சிந்தனை**

ஏற்கனவே இதே பகுதியில் நடந்த லவ்ஜிகாத் சம்பவத்தில் போக்சோ சட்ட குற்றவாளி விரைவாக விடுதலை செய்யப்பட்டார். பல ஊர்களிலிருந்து வேலை வாய்ப்புத் தேடி வரும் மக்கள் வசிக்கும் மூன்று மாநிலங்களின் சந்திப்பாக இருப்பதால் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு சுலபம். அரசு ஆதரவுடன் நடக்கும் திட்டமிட்ட சதி.

**செய்தி:**

**கிருஷ்ணகிரியில் பாஜகவுக்கா**
**முஸ்லீம் வாக்குச்சாவடி முகவ**

**சிந்தனை**

ஜனநாயகத்தை அழிக்கும்
ஓட்டுப்போடும் சுதந்திரத்தைக்
அடிப்படைவாத சித்தாந்தம். ஜ
அடிப்படைவாதம் தடுக்கும்.

**செய்தி:**

**ஈரோடு, கவுந்தப்பாடி அரசு மருத்துவமனை ஆம்புலன்ஸ் ஓட்டுநர் ஸ்ரீ ராமபிரான் குறித்து அருவருக்கதக்க வகையில் ஸ்டேடஸ் - விஹெச்பி புகார்**

**சிந்தனை**

ஹிந்து தெய்வங்களை இழிவுபடுத்தும் திட்டமிட்ட சதி. இஸ்லாமிய மதமாற்றத்திற்கு துணைப் போகும் தமிழ் புலிகள் அமைப்பினரின் திட்டமிட்ட விஷமச் செயல். ஹிந்து விரோத அரசின் செயல்பாடுகளால் ஊக்கம் பெறும் ஹிந்து வெறுப்பு பிரச்சாரம்.

**செய்தி:**

**NIAவை விலக்க வே**
**மன்றத்தில் கஊஜ வ**

**சிந்தனை**

தேச விரோத அமை
பயங்கரவாதத்தைய
தடுக்கும் பணியில்
முடக்கினால் தா
பெறும். ஷரியா ச
சட்டத்தை ஒழிக்க

# திகள்
# னைகள்

**செய்தி:**

**FCRA நிதி சீர்திருத்தத்திற்கு எதிராக நிற்பதால் திமுகவுக்கு ஆதரவு - ஸ்டாலினை சந்தித்த ஆயர்கள்**

**சிந்தனை**

பொதுச் சேவைக்காக வசூல் செய்யும் நிதியில் வெளிப்படைத்தன்மையுடன் நடந்து கொள்ள மாட்டோம் என்று முறைகேடுகளை உரிமையாக்க கோரும் அயோக்கியத்தனம். தேசவிரோத செயல்களை முன்னெடுக்க எதிரி நாடுகளுக்கு உதவும் சதி. ஆதரித்தால் முதல்வர் தேசதுரோகி

**க வேலை செய்வாயா என அதிமுக**
**ரை கத்தியால் குத்திய முஸ்லீம்கள்**

அடிப்படைவாத இஸ்லாம்.
கூட முஸ்லீம்களிடமிருந்து பறிக்கும்
ஜனநாயகம் கொடுக்கும் உரிமையை

**செய்தி:**

**விஷு நாளில் அசைவ உணவுக்கு கிருஷ்ணர் படம் போட்டு விளம்பரம் - கேரளாவில் சர்ச்சை**

**சிந்தனை**

ஹிந்துக்கள் மனதை புண்படுத்த திட்டமிட்டே செய்யப்பட்ட விளம்பரம். ரம்ஜான் காலங்களில் பன்றி கறியுடன் விளம்பரம் செய்வார்களா? பீப் திருவிழா, பிரியாணி திருவிழா என்ற பெயரில் உணவு பழக்கவழக்கங்களை மாற்றுவதுடன் சமய நம்பிக்கையை சிதைக்கும் சதி. ஹிந்து இன அழிப்பை முன்னெடுக்கும் அரசுகளின் ஆசியுடன் நடக்கும் அவதூறுப் பிரச்சாரம்.

**ண்டும் என உச்சநீதி**
**வழக்கறிஞர் மனு**

மைப்பின் இயல்பான நடவடிக்கை.
யும், பிரிவினைவாதத்தையும்
ல் ஈடுபடும் அரசுத் துறையை
னே இவர்களது சதி வெற்றி
ட்டத்தை கொண்டு வர இந்திய
வழக்கு.

**செய்தி:**

**வடவர் படையெடுப்பை முறியடிப்போம் - கமலஹாஸனின் பிரிவினைப் பேச்சு**

**சிந்தனை**

பிரிவினைவாத தேசதுரோக பேச்சு; இத்தகைய பேச்சுக்கள் தேர்தல் விதிமுறைகளுக்கு எதிரானது. இவர் மீது எந்த நடவடிக்கையும் எடுக்காதது தேர்தல் கமிஷனின் கையாலாகத்தனத்தைக் காட்டுகிறது.

# ஆப்புக்கட்சிக்கு ஆப்பு - கேஜரிவால் கட்சி இடியாப்பச் சிக்கலில்

*மீனாட்சி சுந்தர பாண்டியன்*

சமீபகாலமாக ஆம் ஆத்மி பார்ட்டி எனப்படும் (AAP) ஆப்புக் கட்சியில் சலசலப்பு அதிகமாகவே உள்ளது. கேசரிவாலின் மாடமாளிகை தொடங்கி அவர் வீட்டுக்கு வரவழைத்துக் கட்சியின் பெண் எம்பியை அடித்தது, தில்லியில் தோற்ற பிறகு பஞ்சாபில் போய் மன்மோகனுக்கு சோனியா போல உட்கார்ந்து கொண்டது என்று பல பஞ்சாயத்துகள் கட்சியில் ஓடிக்கொண்டிருந்தன. இதனிடையே ராகவ் சட்டா என்ற ஆப்புக்கட்சி எம்பி சில பல சர்ச்சைகளில் சிக்கினார். அவை என்ன என்று பார்ப்போம்.

பஞ்சாபில் இருந்து ராஜ்யசபைக்குப் போன சட்டா வெளியாள் பஞ்சாப் அரசைக் கட்டுப்படுத்த முயல்கிறார் என்ற குற்றச்சாட்டுக்கு ஆளாகி கேசரிவால் குரூப்பால் ஓரங்கட்டப்பட்டார்.

2024ல் கேசரிவால் கைதான போது லண்டனில் தனக்குக் கண் ஆபரேஷன் என்று வெளிநாடு போய்விட்டார்.

விமான நிலையத்தில் சமோசா விலை பற்றிக் கவலையோடு பாராளுமன்றத்தில் பேசும் சட்டா பஞ்சாபுக்கு நிதி வராதது பற்றிப் பேச மறுக்கிறார் என்று பஞ்சாப் முதல்வரும் ஆப்புக்கட்சித் தலைவருமான பகவந்த் மன் குற்றம் சாட்டினார். சட்டா கண்டுகொள்ளவில்லை.

ஏப்ரல் 2026ல் ஆப்புக்கட்சி பாராளுமன்றக் குழு துணைத்தலைவர் பதவியில் இருந்து நீக்கப்பட்டார் சட்டா. தான் வேண்டுமென்றே கட்டம் கட்டப்படுவதாக அவர் குற்றம் சாட்டினார்.

சில தினங்கள் கழித்து பஞ்சாப் முதல்வர் பகவந்த் மன்னும் சஞ்சய் சிங்கும் ராகவ் சட்டா கட்சியின் பாஜகவுக்கு எதிரான நிலைப்பாட்டுக்கு வர மறுப்பதாகவும், பிரதமர் மோடிக்குப் பயந்து அவர் செயல்படுவதாகவும் சொன்னார்கள். பதிலடி கொடுத்த சட்டா தான் மத்திய தர வர்க்கத்துக்காகப் பேசுவதை இவர்கள் கொச்சைப்படுத்துகிறார்கள் என்றார்.

தலைமைத் தேர்தல் கமிஷனருக்கு எதிரான பதவி நீக்கத் தீர்மானத்தில் கையெழுத்திடவே சட்டா மறுத்துவிட்டார் என்று சஞ்சய் சிங் குற்றம் சாட்டினார். தன்னிடம் கையெழுத்தே கேட்கவில்லை என்றார் சட்டா.

கடந்த ஏப்ரல் 24 அன்று கட்சியை விட்டு வெளியேறிய சட்டா தன்னுடன் 7 எம்பிக்களைச் சேர்த்துக் கொண்டு பாஜகவில் சேர்ந்தார்.

இது கேசரிவாலுக்கு மிகப்பெரிய அதிர்ச்சி. அவர் ஏற்கனவே நீதிமன்றத்தில் சாராயக் கொள்கை வழக்கில் வக்கீல் வைத்தாலும் அதிவக்தா பரிஷத் கூட்டத்தில் பேசிய நீதிபதி விசாரிக்கக்கூடாது என்று கட்சிப் பொதுக்கூட்டத்தில் பேசுவது போலப் பேசினார். சட்டம் என்ன சொல்கிறது என்று பேசச் சொன்னால் தெரியவில்லை பாவம். இதில் வக்கீல் வைத்து வாதாடினால் லட்சக்கணக்கில் ஃபீஸ் கொடுப்பது யார் என்ற கேள்வி எழுந்தது. மடியவிழ்க்க மனமில்லை. பஞ்சாப் கவர்மண்டில் போய் என் கேசுக்கு வக்கீல் வைத்துச் செலவை அரசுக் கணக்கில் எழுது என்று சொல்லிக் கேட்டுள்ளார். ஏற்கனவே ஒவ்வொரு காசுக்கும் நிர்மலா அம்மையார் கணக்குக் கேட்கிறார். உங்கள் கேசுக்கு வக்கீல் வைத்து கவர்மண்ட் காசு என்று கொடுத்தால் அடுத்த வேளைக்கு அம்மஞ்சல்லி தரமாட்டார். இங்கே காசு பணம் துட்டு என்று கேட்டு வராதீர்கள் என்று பகவந்த் மன் சொல்லிவிட்டார் என்று தகவலறிந்த வட்டாரங்கள் சொல்கின்றன. கேசரிவாலுக்காக ஓசியில் ஆஜராக ஒரு வக்கீலும் தயாரில்லை. இளிச்சவாயன் எவனாவது ஃபீஸ் கொடுப்பானா என்று அயல்நாடுகளில் வலைகளை வீசிவிட்டு சத்தியாகிரகம், சந்தியாராகம் என்று பேசிக் காராகிரகம் செல்வதைத் தள்ளிப்போட பெருமுயற்சியில் இருக்கிறார் என்கிறார்கள் ஆப்புக்கட்சி அடியவர்கள். சத்தியாகிரகத்துக்கு முன்பு அண்ணா ஹசாரே கிடைத்தது போல ஒரு தம்பி ஹசாரே கிடைத்தாலும் பிடித்துக்கொண்டு வரவேண்டும் என்று கேட்டதாகவும் பட்சி



**ஆப்புக்கட்சி மக்களிடையே பழைய செல்வாக்கு இல்லை என்றும் இவர்களும் ஊழல்தான் செய்கிறார்கள், நமக்கு பைசாவுக்குப் பயனில்லை என்று மக்கள் வெறுப்பில் இருக்கிறார்கள் என்றும் களமறிந்த காரியஸ்தர்கள் சொல்கிறார்கள்.**

சொன்னதாக ஒரு ஆப்புக்கட்சி முக்கியஸ்தர் சொல்லியிருக்கிறார். மேலும் மனீஷ் சிசோடியாவை "காசுக்கு சீட்டு வித்தவனே உன்னால் தானடா இந்த நிலைமை" என்று போதையில் அறைந்துவிட்டார் கேசரிவால் என்று உறுதிப்படுத்தப்படாத தகவல் ஒன்று சமூக வலைத்தளங்களில் உலவுகிறது.

இப்போது ராஜ்ய சபைத் தலைவர் இந்த 7 எம்பிக்கள் பாஜகவில் சேர்ந்ததை அங்கீகரித்துவிட்டார். அது நியாயமா என்று கேட்டால் சட்டப்படி அவருக்கு அதைத் தவிர வேறு வழியில்லை என்பதே பதில். கட்சித் தாவல் தடைச் சட்டம் 3ல் 2 பங்கு எம்எல்ஏக்கள் அல்லது எம்பிக்கள் கட்சி மாறினால் செல்லும் என்று சொல்கிறது. 2023ல் ராகவ் சட்டாவே ஒரு திருத்தம் கொண்டு வர முயன்றார் 3ல் 2 பங்கு என்பது போதாது 4ல் 3 அதாவது 75% என்று இருந்தால் மட்டுமே கட்சி மாறுவது செல்லும் என்று திருத்தம் கொண்டு வந்தார். அந்தத் திருத்தம் ஏற்கப்படவில்லை. நிறைவேறியிருந்தால் தனக்குத் தானே ஆப்பு வைத்துக்கொண்ட ஆப்புக்கட்சித் தலைவராகியிருப்பார் சட்டா. தப்பித்தார். இதில் புலம்பல்கள் வழக்கம்போல அதிகம் கேட்கின்றன. நீதி, நேர்மை, நியாயம் என்றெல்லாம் பேசி சிரிப்பு மூட்டுகிறார்கள் இதற்கெல்லாம் சம்பந்தமே இல்லாத ராஜ்தீப் சர்தேசாய் உள்ளிட்ட ப(ர)த்திரிகையாளர்கள்.

ஆடிய ஆட்டம் என்ன? பேசிய வார்த்தை என்ன? போட்ட கணக்கு என்ன? திரண்டதோர் கூட்டமென்ன? பதவியது கைவிட்டுப் போனால் கூடவே வருவதென்ன? என்று விரக்தியில் பாடிக்கொண்டிருந்த கேசரிவாலுக்கு அடுத்த அடி ஒன்று விழுந்துள்ளது. அண்ணன் வெலவெலத்துப் போய் ஏப்ரல் 29 அன்று பஞ்சாப் எம்எல்ஏக்கள் கூட்டத்தைக் கூட்டியிருக்கிறார். என்ன சங்கதி? 43 எம்எல்ஏக்கள் சட்டா வசம் என்கிறது பஞ்சாப் கோதுமை தின்றுவிட்டு வந்த சிட்டுக்குருவி ஒன்று. கொஞ்சம் விசாரித்தால் தகவல் உறுதி தானாம். கேசரிவால் மீது கடுப்பில் இருக்கிறார்களாம் அவர்கள். மேலும் 20 பேர் சட்டா மூலம் நேரடியாக அமித்ஷா அல்லது வேறு பெரிய தலைவர்களிடம் பேசுவதற்குத் தயாராம். 61 எம்எல்ஏக்கள் இருந்தால் ஆட்சி அமைக்கத் தாராளம் என்ற நிலையில் 63 பேர் போவார்கள் என்ற தகவல் கேசரிவாலை வாலறுந்த நரி போலத் துள்ளத் துடிக்க வைத்திருக்கிறது. 29ல் தெரியும் 63 நிலை என்ன என்று.

**மாற்றம் வருமா என்றால் வாய்ப்புகள் அதிகம். காரணங்கள்:**

ஆப்புக்கட்சி தோற்றுவிக்கப்பட்ட நெறிகளில் இருந்து பிறழ்ந்துவிட்டது என்று பலரும் அதிருப்தியில் உள்ளனர்.

ஆப்புக்கட்சி ஆட்களே பாஜக விலைக்கு வாங்கப் பார்க்கிறது, மிரட்டுகிறது என்றெல்லாம் கிளப்பிவிடுவதால் எம்எல்ஏக்கள் ஒருவர் மீது மற்றொருவர் சந்தேகம் கொண்டு பார்க்கின்றனர்.

ஆப்புக்கட்சி எம்எல்ஏக்கள் அடுத்த தேர்தல் வெற்றி, கள நிலவரம், குற்றங்கள்/விசாரணைகள் என்று யோசிக்கத் தொடங்கினால் ஆப்புக்கட்சியில் இருந்து போவது கோடி புண்ணியம் என்று முடிவெடுப்பர் என்று பஞ்சாபை நன்கறிந்த பத்திரிகையாள நண்பர் சொல்கிறார்.

ஆப்புக்கட்சி மக்களிடையே பழைய செல்வாக்கில் இல்லை என்றும் இவர்களும் ஊழல்தான் செய்கிறார்கள், நமக்கு பைசாவுக்குப் பயனில்லை என்று மக்கள் வெறுப்பில் இருக்கிறார்கள் என்றும் களமறிந்த காரியஸ்தர்கள் சொல்கிறார்கள்.

அப்படி மாற்றம் வந்தால் பஞ்சாப் உருப்படும். ஏற்கனவே பாகிஸ்தான் ட்ரோன், சுரங்கப்பாதை என்று போதை, ஆயுதங்கள் என்று அனுப்புவதும் நம் படைகள் பிடிப்பதுமாக இருக்கும் நிலைமை கவலைக்கிடமானது. மேலும் வளர்ச்சி என்பதே இல்லாமல் வெளிநாட்டுப் பணத்தில் ஜம்பம் காட்டிக்கொண்டிருப்பது எத்தனை நாட்களுக்கு இயலும்? காலிஸ்தான் என்று கூவினாலும் கடைசியில் பாகிஸ்தான்காரனிடம் சிக்கித் துண்டுபடவேண்டும். பிரதமரைச் சிறைவைக்கும் அளவுக்குப் போனதெல்லாம் இன்னும் மறக்கப்படாத மறக்கக்கூடாத பயங்கரவாதச் செயல்கள். காங்கிரஸ் செய்த கோலம் அது. அப்புக் கட்சி உடந்தை. இதெல்லாம் இல்லாமல் நிம்மதியான வாழ்வுக்கு அங்கே காங்கிரஸ் / ஆப்புக்கட்சி அல்லாத ஒரு நல்ல அரசு அமைவது அவசியம். நல்லதே நடக்கட்டும். வந்தே மாதரம்.

# பொருளாதாரம்

கோ. ரமேஷ், பொருளாதார நிபுணர்.

இடைவெளி வர்த்தகத்தில் (கேப் டிரேடிங்) வகைகள்..!

இடைவெளி வர்த்தகத்தில் (கேப் டிரேடிங்) பல வகைகள் இருக்கின்றன.

அவை பற்றி விளக்கப்படங்களுடன் விளக்கமாக பார்ப்போம்.

தொடக்க விலை, முன் தினத்தின் அதிகபட்ச விலையை விட அதிகமாக இருந்தால் ‘ஃபுல் கேப் அப்’ (full gap up) உருவாகும்.

தொடக்க விலை, முன் தினத்தின் குறைந்தபட்ச விலையை விட குறைவாக இருந்தால் ‘ஃபுல் கேப் டவுண்’ (Full Gap Down) உருவாகும்.

தொடக்க விலை, முன் தினத்தின் முடிவு விலையை விட அதிகமாக இருந்தால் ‘பார்ஷியல் கேப் அப்’ (Partial Gap Up) உருவாகும்.

தொடக்க விலை, முன் தினத்தின் முடிவு விலையை விட குறைவாக இருந்தால் ‘பார்ஷியல் கேப் டவுண்’ (Partial Gap Down) உருவாகும்.

**ஃபுல் கேப்ஸ்**

**அ. ஃபுல் கேப் அப்: வாங்கும் நிலை**

கேப் அப் உருவான உடன், அடுத்த நாள் அந்த பங்கின் தொடக்க விலை முந்தைய தினத்தின் அதிகபட்ச விலையை விட அதிகமாக போகும் போது அந்தப் பங்கை வாங்கலாம். அப்போது, முந்தைய தினத்தின் குறைந்தபட்ச விலையை இழப்புத் தடுப்பாக (ஸ்டாப் லாஸ்) நிர்ணயித்துக் கொள்ளலாம்.

**ஆ. ஃபுல் கேப் டவுண்: வாங்கும் நிலை**

நிறுவனத்தின் வருமானம் மற்றும் லாபம் குறைந்து போவது, மோசமான தகவல்கள், அமைப்பு ரீதியான மாற்றங்கள், பங்குச் சந்தையின் ஏற்ற இறக்கம் போன்றவற்றால் ஒரு நிறுவனப் பங்கின் தடாலடியாக குறையக் கூடும்.

ஒரு பங்கின் தொடக்க விலை, முன் தினத்தின் முடிவு விலை மற்றும் முன் தினத்தின் குறைந்தபட்ச விலையை விட குறைவாக இருக்கும் போது ஃபுல் கேப் டவுண் பேட்டர்ன் உருவாகும்.

இந்த நிலையில், அந்த பங்கின் விலை உடனடியாக மேலேறத் தொடங்கும். இதை டெட் கேட் பவுன்ஸ் (Dead Cat Bounce) என்றும் அழைக்கிறார்கள். அதாவது, பூனை சுண்டெலியை பிடிக்க பதுங்கி பாய்வது போல், பங்கின் விலை கீழ் இறங்கி வேகமாக மேலேறும்.

கேப் டவுண் உருவான உடன், அடுத்த நாள் அந்த பங்கின் தொடக்க விலை முந்தைய தினத்தின் அதிகபட்ச விலையை விட அதிகமாக போகும் போது அந்தப் பங்கை வாங்கலாம். அப்போது, முந்தைய தினத்தின் குறைந்தபட்ச விலையை இழப்புத் தடுப்பாக (ஸ்டாப் லாஸ்) நிர்ணயித்துக் கொள்ளலாம்.

**பார்ஷியல் கேப்ஸ்**

ஃபுல் கேப் மற்றும் பார்ஷியல் கேப் இடைப்பட்ட நிலையில் இடர்பாடு (ரிஸ்க்) இருக்கிறது. மேலும் பங்கின் விலை ஏறுவதற்கு அதிக வாய்ப்பு இருக்கிறது.

பொதுவாக, முன் தினத்தின் அதிகபட்ச விலையை விட, அன்றைய வர்த்தகத்தின் முதல் ஒரு மணி நேரத்தில் பங்கின் விலை வித்தியாசம் அதிகமாக இருந்தால் பங்கின் விலையில் குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்படக் கூடும். அப்போது பங்குகளை விற்றுவிட வேண்டும் அல்லது சொந்தமாக்கிக் கொள்ள வேண்டும். அதிக டிமாண்ட் விலையில் அதிக மாற்றத்தை ஏற்படுத்தக் கூடும்.


பொதுவாக, ஃபுல் கேப்பிங் பங்குகள் ஒரு திசையில் செல்லும். அது பார்ஷியல் கேப் ஆக இருக்கும். அதே நேரத்தில், சிறிய அளவிலான டிமாண்ட் உருவாகி பங்கின் விலை, முன்தினத்தின் முடிவு விலைக்கு கீழே அல்லது அதற்கு மேலே செல்லக் கூடும், அப்போது கைவசம் இருக்கும் ஆர்டர்களை விற்று விட வேண்டும் அல்லது வாங்க வேண்டும். பங்குகளில் ஃபுல் கேப்பிங் பல வாரங்களுக்குத் தொடர்ந்தால், லாபம் பார்க்க சிறந்த வாய்ப்பு உருவாகும்.


ஆரம்ப கட்ட ஆர்டர்கள் போடப்பட்ட பிறகு பங்கில் விற்பதற்கு அல்லது வாங்குவதற்கு போதிய ஆதரவு இல்லை என்கிற போது, அந்தப் பங்கு மீதான வர்த்தகம் குறைந்து, விலை ஏற்ற இறக்கத்தின் அளவு வேகமாக குறைந்துவிடும்.

**அ. பார்ஷியல் கேப் அப் : வாங்கும் நிலை**

ஒரு பங்கின் தொடக்க விலை, முன் தினத்தின் முடிவு விலை மற்றும் முன் தினத்தின் அதிகபட்ச விலையை விட அதிகமாக இருக்கும் போது பார்ஷியல் கேப் அப் பேட்டர்ன் உருவாகும்.

பார்ஷியல் கேப் அப் உருவான உடன், அடுத்த






நாள் அந்த பங்கின் தொடக்க விலை முந்தைய தினத்தின் அதிகபட்ச விலையை விட அதிகமாக போகும் போது அந்தப் பங்கை வாங்கலாம். அப்போது, முந்தைய தினத்தின் குறைந்தபட்ச விலையை இழப்புத் தடுப்பாக (ஸ்டாப் லாஸ்) நிர்ணயித்துக் கொள்ளலாம்.

**ஆ. பார்ஷியல் கேப் டவுண்: வாங்கும் நிலை**

பார்ஷியல் கேப் டவுண் உருவான உடன், அடுத்த நாள் அந்த பங்கின் தொடக்க விலை முந்தைய தினத்தின் அதிகபட்ச விலையை விட அதிகமாக போகும் போது அந்தப் பங்கை வாங்கலாம். அப்போது, முந்தைய தினத்தின் குறைந்தபட்ச விலையை இழப்பு தடுப்பாக (ஸ்டாப் லாஸ்) நிர்ணயித்துக் கொள்ளலாம்.

தேவையான அளவுக்கு வர்த்தக அளவு (வால்யூம்) இல்லை என்றால் பார்ஷியல் கேப் அமைப்பில் எச்சரிக்கையாக பாதுகாப்பாக வர்த்தகம் செய்யவும். அப்போது முந்தைய அதிகபட்ச விலையை உடைத்துக் கொண்டு செல்ல (வாங்கும் நிலை) வேண்டும் அல்லது குறைய வேண்டும் (விற்கும் நிலை)

மேலே விளக்கி சொல்லப்பட்ட இடைவெளி வர்த்தக உத்திகளை நாளின் வர்த்தக முடிவிலும் பயன்படுத்த முடியும். இடைவெளி அதிகமுள்ள பங்கில், வர்த்தக அளவு அதிகரித்தால் அல்லது குறைந்தால் பங்கு எந்த திசையில் செல்கிறோ அதே திசையில் செல்ல வாய்ப்பு இருக்கிறது. இடைவெளி அதிகமுள்ள பங்கு, தடுப்பு (ரெசிஸ்டென்ஸ்) நிலையைத் தாண்டிச் செல்லும் போது அதை வாங்குவதற்கான குறியீடாக எடுத்துக் கொள்ளலாம். இதே போல், அதிக இடைவெளியுள்ள பங்கு, ஆதரவு (சப்போர்ட்) நிலையை உடைத்துக் கொண்டு கீழ் இறங்கும் போது அதை விற்பதற்கான குறியீடாக எடுத்துக் கொள்ளலாம்.

**ஹெட் அண்ட் சோல்டர் பேட்டர்ன்**

பங்குச் சந்தையின் புள்ளி அல்லது பங்கின் விலை ஏறப் போகிறது அல்லது இறங்கப் போகிறது என்கிற இரு நிலைகளையும் சுட்டிக் காட்டும் ஒரு குறியீடு தான், ஹெட் அண்ட் சோல்டர் பேட்டர்ன். இது, நான்கு முக்கிய பாகங்களை கொண்டிருக்கிறது. அவை,

1. இடது தோள்பட்டை (Left Shoulder)
2. வலது தோள்பட்டை (Right Shoulder)
3. கழுத்து (Neck)
4. தலை (Head)

**இடது தோள்பட்டை**

இடது தோள்பட்டை, குறிப்பிட்ட பங்கின் விலை வேகமாக நேர்கோட்டில் (அப் டிரெண்ட் லைன்) அதிகரித்து, அதன் பிறகு அதிக வால்யூம் உடன் கீழ் இறங்கும் போது உருவாகும். இந்த இடத்தில் உயர் விலை புள்ளியில் வர்த்தக அளவு (வால்யூம்) அதிகரித்து வாங்குபவர்களின் எண்ணிக்கை உயர்ந்து மேலேறுவது தொடரும்.

**வலது தோள்பட்டை**

வலது தோள்பட்டை, குறிப்பிட்ட பங்கின் விலை வேகமாக கீழ் நோக்கி நேர்கோட்டில் (டவுண் டிரெண்ட் லைன்) இறங்கத் தொடங்கி, அதன் பிறகு அதிக வால்யூம் உடன் ஏறத் தொடங்கும் போது உருவாகும். இந்த இடத்தில் குறைந்த விலை புள்ளியில் வர்த்தக அளவு குறைந்து வாங்குபவர்களின் எண்ணிக்கை குறைந்து கீழ் இறங்குவது தொடரும்.

**கழுத்து**

தோள்பட்டைகளின் மிகக் குறைந்த புள்ளிகள் கழுத்து (நெக்) எனப்படுகிறது. இந்த கழுத்து புள்ளிகளை இணைத்தால் கிடைப்பது 'நெக் லைன்' (neck line)

**தலை**

பங்கின் விலை மேலே ஏறத் தொடங்கி குறுகிய காலத்தில் அதிகபட்ச புள்ளியை அடையும் போது தலை (ஹெட்) உருவாகும். அதன் பிறகு பங்கின் விலை இறங்கத் தொடங்கும்.

**மிக முக்கியமானது**

ஹெட் அண்ட் சோல்டர் பேட்டர்ன் உருவாகும் போது, நெக் லைன் என்பது ஆதரவு (சப்போர்ட்) நிலையாக இருக்கும். பொதுவாக இந்த பேட்டர்ன் உருவாக பல மாதங்கள் அல்லது ஆண்டுகள் எடுத்துக் கொள்ளும்.

**ஹெட் அண்ட் ஷோல்டர்ஸ் பேட்டர்ன் எப்படி உறுதிப்படுத்துவது?**

ஏறும் டிரெண்டில் இருக்கும் சந்தையில் உண்டாகும் டிரெண்ட் மாற்றங்களை (ரிவர்ஸல்) கண்டுபிடித்துச் சொல்லும் அமைப்பாக 'ஹெட் அண்ட் ஷோல்டர்ஸ் பேட்டர்ன்' இருக்கிறது.

இந்த அமைப்பு உருவாக இரு தோள்கள் (இடது மற்றும் வலது தோள்கள்) மற்றும் ஒரு தலை (ஹெட்) சார்ட்டில் உருவாக வேண்டும் என்று தொடக்கத்தில் பார்த்திருக்கிறோம்.

இந்த அமைப்பு உருவான பின்னால் முக்கியமாகப் பார்க்க வேண்டியது வர்த்தக எண்ணிக்கை மற்றும் அளவு (வால்யூம்) மாற்றங்கள், நெக்லைன் அல்லது டிரெண்ட் லைனின் விலை வரம்புகள் மற்றும் சப்போர்ட் ஆக இருந்து ரெசிஸ்டன்ஸ் ஆக மாறும் நிலைகள் போன்றவையாகும்.

# வெற்றியும் தோல்வியும்

- வெங்கட் பிரசாத், D.
அரசியல் மற்றும் விளையாட்டு ஆய்வாளர்

**எல்லை தாண்டும் உறுதி:**



17 வயதான பார்வையற்ற நீச்சல் வீராங்கனை ஐஸ்வர்யா பாண்டே., அற்புதமான சாதனை படைத்து இந்தியாவிற்கு பெருமை சேர்த்துள்ளார்.

இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையேயான பார்க் நீரிணை 29 கிமீ நேர் நீளம் கொண்டது, இதை வெறும் 11 மணி நேரத்தில் தொடர் நீச்சல் அடித்து, கடந்து வரலாறு படைத்துள்ளார். காலை 4 மணிக்கு, இலங்கையில் உள்ள தலைமன்னூர் பகுதியில் இருந்து நீச்சலை தொடங்கிய ஐஸ்வர்யா, திட்டமிட்டதற்கும் மாறாக வந்த கடும் மழை, புயல், ஆபத்தான எழுதுமின்களைக் கடந்து, அவரது பயிற்சியாளர் சஞ்சய் பத்வே ஒலிபெருக்கியின் மூலம் கொடுத்த கட்டளைகளை மட்டுமே தனது வழிகாட்டியாக கொண்டு சரியாக 11 மணி நேரம் 15 நிமிடத்தில் தனுஷ்கோடி கரையை வந்தடைந்தார்.

இவரது இந்த சாதனை, எவ்வித மாற்று திறனாளியாக இருந்தாலும் பயிற்சியும் மன உறுதியும் இருந்தால் கடுமையான நீர் நிலைகளையும் கடக்க முடியும் என்பதை இந்த உலகிற்கு நிரூபித்துள்ளார். பல மாதங்களாக தினமும் 6 மணி நேரம் கடும் பயிற்சி எடுத்ததன் விளைவே இந்த சாதனை என்று அவரது பெற்றோரும் பயிற்சியாளரும் கூறுகின்றனர். சென்ற கட்டுரையில் நாம் பாயல் நாகை பற்றி பார்த்தோம். இன்று ஐஸ்வர்யா பாண்டே. மாற்றுத்திறனாளி என்ற நிலையிலும், சாதிக்க எவ்வளவோ உள்ளது என்று, இன்றைய பெண்களுக்காக அவர்கள் பெற்றோர்கள் துணை புரிந்து நிரூபிப்பது மனநிறைவை தருகிறது.

**ரன் கடல்**

2026-க்கன ஐபில், மார்ச் 28 முதல் நடந்து வருகிறது , பஞ்சாப் கிங்ஸ், ராஜஸ்தான் ராயல்ஸ், ஆர் சி பி, எஸ் ஆர் எச் ஆகிய அணிகள் கடும் ஆதிக்கம் செலுத்தி வருகின்றன. ஏப்ரல் 25 அன்று இந்த அணிகளின் அதிரடி உச்சமாக விளங்கியது.

பஞ்சாப் கிங்ஸ் டெல்லிக்கு இடையான ஆட்டம் மற்றும் எஸ் ஆர் எச் ராஜஸ்தான் ராயல்ஸ் அணிகளுக்கு இடையான இரண்டு ஆட்டங்களும் இந்த நாளில் நடைபெற்றது.

பேட்ஸ்மேன்களுக்கான சிறந்த ஆடுகளத்தில் ஆடிய நான்கு அணிகளுமே அதீத அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தி ஒரே நாளில் 986 ரன் குவிக்கப்பட்டு, இதுவரை நடந்த 19 ஐபிஎல் தொடர்களிலேயே அதிக ரன்களைக் கண்ட நாள் என்ற சாதனை படைக்கப்பட்டது. இதற்கு முன்பு ஏப்ரல் 27, 2024 இல் 899 ரன்கள் குவித்ததே அதிகபட்சமாக இருந்தது.

அதை முறியடிக்கும் அளவிற்கு இரண்டு போட்டிகளும் இருந்தன. அதில் முதல் போட்டியில் முதலில் பேட்டிங் செய்த டெல்லி கேபிட்டல்ஸ் அணி , பஞ்சாப் கிங்ஸ் அணிக்கு எதிராக 264 ரன்களை குவித்தது. இதில் கே எல் ராகுல் அடித்த 157 ரன்கள் அதிகபட்ச தனிநபருக்கான ஐபிஎல் ஸ்கோரில் மூன்றாவது இடத்தை பிடிக்கும் அளவிற்கு மிகச் சிறந்த ஆட்டமாக இருந்தது.

9 சிக்ஸர்களையும் 16 பவுரிகளையும் அடித்த கே எல் ராகுலுக்கு துணையாக மறுமுனையில் நித்திஷ்ரானா 91 ரன்கள் வெறும் 44 பந்துகளில், நான்கு சிக்ஸர்கள் 11 பவுண்டர்களுடன் கூடிய அதிரடி ஆட்டத்தில் எடுத்திருந்தார்.

நிச்சய வெற்றி என்ற நம்பிக்கையுடன் பந்துவீச்சை தொடங்கிய டெல்லி கேப்பிட்டல்ஸ் அணிக்கு பெரும் அதிர்ச்சியை தந்தது பஞ்சாப் கிங்ஸ் அணியின் துவக்க ஆட்டம். பவர் பிளேவில்





இருந்த 6 ஓவர்களில் மட்டுமே விக்கெட் ஏதும் இழக்காமல் 116 ரன்களை அடித்து காண்போரையும் எதிரணியையும் உறைய வைத்தனர் பஞ்சாப் கிங்சின் துவக்காட்டக்காரர்கள். முகேஷ் குமார் வீசிய பவர் பிளேவின் கடைசி ஓவரில் 6 பௌண்டரிகள் அடித்து 24 ரன்கள் எடுத்து , ஆட்டத்தில் உயிர் உள்ளது என்பதை நிரூபித்தார்.

பிறகு வந்த காணொளி பெரிதாக மிளிர வில்லை என்றாலும், அணியின் தலைவர் ஸ்ரேயாஸ் ஐயர் 36 பந்துகளில் 71 ரன்களும் ப்ரப்சிம்ரன் 26 பந்துகளில் 76 ரன்களும் எடுத்து மைதானத்தை அதிரவிட்டனர். இறுதியாக வெறும் 18.5 ஓவர்களில் ஏதோ எளிதான இலக்கை அடைவது போன்று இமாலய இலக்கினை 6 விக்கெட் வித்தியாசத்தில் அடைந்து, வெற்றி பெற்றது பஞ்சாப் கிங்ஸ். இதற்கு முன்பு அதிகபட்ச இலக்கை அடைந்த சாதனையையும் பஞ்சாப் கிங்ஸ் அணியே கொல்கத்தா நைட் ரைட்ஸ்(கே கே ஆர் ) அணிக்கு எதிராக 2024 இல் நிகழ்த்தியது. ஆனால் அப்போது அவர் கே கே ஆர் அணியின் கேப்டன்.

**எஸ்.ஆர்.எச் மற்றும் ராஜஸ்தான் ராயல்ஸ் :**

எஸ்.ஆர்.எச் மற்றும் ராஜஸ்தான் ராயல்ஸ் அணிகளுக்கு இடையேயான அன்றைய தினத்தின் இரண்டாவது ஆட்டமும் ரன் வேட்டையாகவே அமைந்தது. முதலில் பேட்டிங் செய்த எஸ்.ஆர்.எச் அணியின் துவக்க அதிரடி வீரர் வைபவ் சூரியவன்சி வெறும் 37 பந்துகளில் 103 ரன்கள் அடித்த விலாச, ஆர்.ஆர் அணியின் விக்கெட் கீப்பர் துரேவ் ஜுரல் நிதானமாக விளையாடி 50 ரன்கள் எடுக்க, 229




என்கிற ஒரு அற்புதமான இலக்கினை நிர்ணயித்தனர். இமாலய இலக்கு என்று எண்ணாமல் நம்பிக்கையுடன் அதிரடியாக விளையாடிய ஹைதராபாத் அணியின் துவக்க ஆட்டக்காரர் அபிஷேக் ஷர்மா, மற்றது இந்திய துவக்காட்டக்காரரான இஷான் கிஷனுடன் ஜோடி சேர்ந்து வெறும் ஒன்பது ஓவர்களில் 132 ரன்கள் குவித்து பந்துவீச்சாளர்களை அதிர்ச்சியில் ஆழ்த்தினார்.

பிறகு இணைந்த கிளாஸனும் , நிதிஷ் குமாரும் பொறுப்புடன் திவிளையாடியதால் 18.3 ஓவர்களிலேயே எஸ்.ஆர்.எச் இலக்கை எட்டி வெற்றி பெற்றது.

மொத்தத்தில் ரசிகர்களை கவரும் வண்ணம் 900 ரன்களுக்கு மேல் குவிக்கப்பட்டு இருந்தாலும், பந்துவீச்சாளர்களுக்கும் இந்திய கிரிக்கெட்டின் நீடித்த எதிர்காலத்திற்கும் இதுபோன்ற ஆடுகளங்கள் ஏதுவானதா என்பதை பரிசீலிக்க வேண்டும்.

**கவனத்திற்குரிய நாயகர்கள் :**

ராஜஸ்தான் ராயல்ஸ்-இன் துவக்க ஆட்டக்காரரான 15 வயதே ஆன வைபவ் சூரியவன்ஷி, இதுவரை ஆடிய 9 ஆட்டங்களில் 400 ரன்கள் குவித்து, தொடரின் அதிக ரன்கள் குவித்த பேட்ஸ்மேன்களுக்கு வழங்கப்படும் ஆரஞ்சு கேப்பை தன்வசப்படுத்தி உள்ளார். சில குழந்தைகள் அரசியலே தெரியாமல் நடிகர்களுக்கு வாக்களிக்க வேண்டும் என்று வீடியோ பதிவிடுவதை பெற்றோர்களே ஊக்குவிக்கும் சூழலில் தனது லட்சியத்திலும் விளையாட்டிலும் கவனம் செலுத்தி சூரியவன்ஷிசாதிப்பது ஒரு எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

பஞ்சாப் கிங்ஸ் அணியின் தலைவர் ஸ்ரேயாஸ் ஐயர்சூழலுக்கு ஏற்ப பொறுப்பாக விளையாடுவதிலும், அணியை வழி நடத்துவதிலும், விளையாடிய ஏழு ஆட்டங்களிலும் ஒரே ஒரு தோல்வி என்ற நிலையில் சிறந்த அணியாக விளங்க வைப்பதிலும் அனைவரின் கவனத்தையும் ஈர்த்துள்ளார். இவரை இந்தியாவின் ஒருநாள் போட்டிகளுக்கான தலைவராக்க வேண்டும் என்பதே பலரின் கோரிக்கையாக உள்ளது.

முன்னாளில் இந்தியாவிற்காக துவக்க ஓவர்களை வீசிய புவனேஸ்வர் குமார், இந்தத் தொடரின் அதிசிறந்த பந்துவீச்சாளராக விளங்கி வருகிறார். வேகமாற்றம், பந்து வீச்சின் திசை மாற்றம், வியப்பூட்டும் பவுசர்கள் மூலம் இந்திய அணிக்கு தன்னை தேர்வு செய்யாமல் இருப்பதை கேள்வி கேட்டு வருகிறார்.

இந்த ஐபிஎல் தொடரை சர்வ வல்லமை பெற்ற பஞ்சாப் கிங்ஸ் அணியே வெல்லும் என்பதே நமது கணிப்பு. ஆயினும் நடப்புச் சாம்பியன் ஆர்.சி.பி, அதிரடி காட்டும் எஸ்.ஆர்.எச் மற்றும் ஆர்.ஆர் அணிகளை, குறைத்து மதிப்பிடுவதற்கு இல்லை. தொடர்ந்து ரசிப்போம்.



# சங்கத் தமிழில் சனாதனம்

— பத்மன்

## அத்தியாயம் 8 : வேள்வி சிறந்த தமிழ்நாடு

(விடுபட்ட காரணத்தினால் எட்டாம் அத்தியாயத்தை இந்த இதழில் வெளியிடுகிறோம்)

பழந்தமிழர்களது வாழ்வில் வேள்வி ஓர் அங்கமாக இருந்தது என்பதற்குச் சங்க இலக்கியங்களில் ஏராளமான சான்றுகள் உள்ளன. வேள்வி என்ற தூய தமிழ்ச் சொல்லேகூட இதற்கான அகச்சான்றாக விளங்குகிறது. வேண்டியது நிறைவேற வேண்டும் என்பதற்காக விழைந்து செய்வதே யாகம் எனப்படும் வேள்வி என்பதைச் சென்ற அத்தியாயத்திலேயே கண்டுள்ளோம். இந்த யாகங்கள் இயற்கை ஆற்றலோடு ஒன்றி நிற்பவை. இவற்றை வடக்கில் இமயமலையில் வாழ்ந்த முனிவர்கள், தவசீலர்கள், அந்தணர்களைப் போல் தெற்கில் பொதிகை மலையில் வாழ்ந்த அந்தணர்கள் உள்ளிட்டோரும் செய்துள்ளனர் என்பதற்கு, முரஞ்சியூர் முடிநாகராயர் என்ற புலவர் இயற்றியுள்ள புறநானூற்றின் 2-ஆவது செய்யுள் சான்று தருகிறது.

**சிறுதலை நவ்விப் பெருங்கண் மாப்பிணை,**
**அந்தி அந்தணர் அருங்கடன் இறுக்கும்**
**முத்தீ விளக்கில் துஞ்சும்**
**பொற்கோட்டு இமயமும், பொதியமும், போன்றே!**
**(புற. 2. 21–24)**

“பொன் போன்று மின்னும் மலையான வடக்கில் உள்ள இமயத்திலும், தெற்கே உள்ள பொதிகை மலையிலும் அந்தணர்கள் அந்தி வேளையிலே முத்தீ வளர்ப்பார்கள். இந்த இரு மலைகளின் அடுக்கங்களில் வாழும் சிறிய தலை கொண்ட நவ்வி என்ற மான்கள், அந்தணர்கள் வளர்க்கும் முத்தீயின் வெளிச்சத்திலே, தனது சுற்றத்துடன் அச்சமின்றி நிம்மதியாக உறங்கும்” என்று இதற்குப் பொருள்.

ஆகவனீயம், தக்ஷிணாக்கினி, காருஹஸ்பத்யம் என்பவையே அந்த முத்தீ. இவற்றுள் ஆகவனீயம் என்பது, இயற்கை ஆற்றல்களின் உருவகங்களான தேவர்களுக்காக அவிர் பாகம் என்றும் அவிஷ் என்றும் சொல்லப்படும் படையலுடன் நடத்தப்படும் வேள்வி. அவிர் என்ற வடமொழிச் சொல், அவிதல் அதாவது தீயில் வேகுதல் என்ற தூய தமிழ்ச் சொல்லை ஒத்திருப்பது நோக்கத்தக்கது. தக்ஷிணாக்கினி என்பது தெற்குத் திசையில் வாழ்வதாக மதிக்கப்படும் பித்ருக்கள் எனப்படும் முன்னோர்களை நினைத்துச் செய்வது. மூன்றாவதான காருஹஸ்பத்யம் என்பது கிருஹஸ்தர்கள் எனப்படும் இல்லறத்தார் பேணுவது.

வேள்விகளால் பேணப்படும் இந்த முத்தீ, தமிழர்களுக்குப் புறம்பானது அல்ல, தமிழர் தம் வாழ்வோடு கலந்திருப்பது என்பதற்கு, புறநானூற்றின் 367-ஆவது பாடலில் ஔவையார் ஆதாரம் தருகின்றார். மூவேந்தர்களான சேர, சோழ, பாண்டியர்களை, அந்தணர்கள் ஓம்புகின்ற முத்தீக்கு இணையாக ஔவையார் வர்ணித்துள்ளார். சேரமான் மாரி வெண்கோ, பாண்டியன் கானப்பேர் தந்த உக்கிரப் பெருவழுதி, சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி ஆகிய மூவேந்தர்களும் ஒருங்கே வீற்றிருந்ததைப் பார்த்து, ஔவையார் வாழ்த்தியபோது இந்த அரிய உவமை வெளிப்படுகிறது.

**வாழச் செய்த நல்வினை அல்லது,**
**ஆழுங் காலைப் புணைபிறிது இல்லை;**
**ஒன்றுபுரிந்து அடங்கிய இருபிறப் பாளர்**
**முத்தீப் புரையக் காண்தக இருந்த**
**கொற்ற வெண்குடைக் கொடித்தேர் வேந்திர்;**
**(புற. 367. 10–14)**

“வாழுங்காலத்தில் நாம் செய்த நல்வினைகள் அன்றி, இறக்குங்காலத்தில் நமக்குத் துணையாவது வேறொன்றும் இல்லை. முக்தி எனப்படும் வீடுபேறு ஒன்றையே நோக்கமாகக் கொண்டு, புலன்கள் வழியாக ஏற்படுகின்ற ஆசைகளை அடக்கி, ஒழுக்கத்தோடு வாழ்கின்ற இருபிறப்பாளர்கள் எனப்படும் அந்தணர்கள் வளர்க்கின்ற முத்தீயைப்போல, காண்பதற்கு அழகாக வீற்றிருக்கும், வெண்கொற்றக் குடையையும், உயரே கொடி பறக்கும் தேரையும் உடைய மூவேந்தர்களே!” என்று இந்தப் பாடல் வரிகளுக்குப் பொருள். தமிழகத்தின் அடையாளங்களான மூவேந்தர்களையும் ஒட்டுமொத்த பாரதத்தின் அடையாளமான வேதவழி முத்தீயுடன் ஒப்பிட்டு ஔவையார் பாடியிருப்பது பண்பாட்டு ஒற்றுமையைப் பறைசாற்றுகிறது.

இந்தப் பாடலில் இடம்பெற்றுள்ள “ஒன்று புரிந்து அடங்கிய இருபிறப்பாளர்” என்ற வரி முக்கியத்துவம் வாய்ந்தது. பிராமணர் என்றால், இறுதிப் பெருநிலையும் எல்லாம்வல்ல இறையாற்றலுமான பிரும்மத்தை அணுகி நிற்பவர்கள் என்று பொருள். எவ்வாறு பிரும்மத்தை அணங்கியவர்கள் பிராமணர்கள் என்று வடமொழியின் வாயிலாகப் பெயர் அமைந்ததோ, அதேபோன்று தூய தமிழில் அந்தத்தை (இறுதியை) அணங்கியவர்கள் (அண்டி நிற்பவர்கள்) என்ற பொருளில் அந்தணர் என்ற பெயர் உருவானது.

இந்த அந்தணர்கள் இருபிறப்பாளர்கள் என்றும் அழைக்கப்பட்டனர். மண்ணுலகில் பிறக்கும்போது ஒரு முறையும், பின்னர் வேதத்தைக் கற்றறிந்து ஓதுவதற்கான தகுதியைப் பெறுவதற்காக மேற்கொள்ளப்படும் உபநயனம் எனப்படும் பூணூல் அணிவிப்புச் சடங்கின்போது மற்றொரு முறையும் என இரண்டு முறை அந்தணர்கள் பிறப்பெடுக்கிறார்கள். ஆகையால் இருபிறப்பாளர்கள். இதுவே வடமொழியில் துவிஜனர் என்று பெயர் பெற்றுள்ளது. மேலும் இந்த இருபிறப்பாளர் என்ற சொல்லானது - மண்ணில் குறிப்பிட்ட ஜாதியில் பிறக்கும் பிறப்பால் அல்ல, குறிப்பிட்ட கடமையை அதாவது வேதநெறியைப் பேணிப் பராமரிக்கும் கடமையை வரித்துக்கொள்ளும் புதிய பிறப்பால் உருவாக்கப்பட்டதே பண்டைய பிராமண வருணம் என்ற உண்மையையும் உணர்த்துகிறது.

பழந்தமிழகத்தில் அந்தணர்களின் வேள்வித்தீ புனிதமானது என்று போற்றப்பட்டிருப்பதற்கு, சோழன் கிள்ளி வளவனைப் புகழ்ந்து, புலவர் எருக்காட்டூர்த் தாயங்கண்ணனார் பாடியிருக்கும் புறநானூற்றின் 397-ஆவது பாடலும் சான்று பகர்கிறது:

**செறுவிற் பூத்த சேயிதழ்த் தாமரை,**
**அறுதொழில் அந்தணர் அறம்புரிந்து எடுத்த**
**தீயொடு விளங்கும் நாடன்**
***(புற. 397. 19-21)***

"வயல்களில் சிவந்த இதழ்களைக் கொண்ட தாமரைப் பூக்களும், அறுதொழில் புரிகின்ற அந்தணர்கள் அறத்தோடு நடத்துகின்ற வேள்வித் தீயும் நன்கு விளங்குகின்ற நாட்டை உடையவன் சோழன் கிள்ளி வளவன்" என்று இதற்குப் பொருள். வேதம் கற்றல், பிறருக்குக் கற்பித்தல், வேள்விகள் செய்தல், பிறரைக் கொண்டு வேள்விகளைச் செய்வித்தல், தானம் ஏற்றல், பிறருக்குத் தானம் வழங்குதல் என்பவையே அந்தணர்களின் ஆறு தொழில்கள் ஆகும்.

பழந்தமிழர்களின் வாழ்வில் வேள்விச் சடங்குகள், பிறப்பின்போதே தொடங்கிவிடுகின்றன என்பதற்கு, தொன்மை வாய்ந்த இலக்கண நூலான தொல்காப்பியத்தின் பொருளதிகாரம் கற்பியல் சூத்திரப் பாக்கள் கனமான ஆதாரம் தருகின்றன. இந்தச் சூத்திரப் பாவில் 27 முதல் 30 வரையாக அமைந்துள்ள அடிகள், மகப்பேறு முடிவடைந்த பெண்ணுக்கு நடத்தப்படும் புண்ணியாவாசனம் என்ற பாரம்பரியச் சடங்கு முறையை எடுத்துரைப்பதுபோல் அமைந்துள்ளன.

**புதல்வற் பயந்த புனிறுதீர் பொழுதின்**
**நெய்யணி மயக்கம் புரிந்தோள் நோக்கி**
**ஐயர் பாங்கினும் அமரர்ச் சுட்டியுஞ்**
**செய்பெருஞ் சிறப்பொடு சேர்தற் கண்ணும்**
**(தொல். பொரு. கற்)**

"சுமகப்பேற்றினால் ஏற்பட்ட ஓதுங்கியிருக்கும் புனிறுக் காலம் முடிவடைந்த நிலையில், அத்தீட்டு நீங்கும் வகையில் எண்ணெய்ப் பூசிக் குளித்து, மங்கலகரமாக வந்த தலைவி குறித்து, ஐயர் வழிகாட்டலிலும், தேவர்களைக் கருதியும் பெரிய சிறப்போடு செய்கின்ற நிகழ்விலே, தலைவன் அத்தலைவியோடு சேர்கின்ற போது" என்று இதற்குப் பொருள்.

தற்காலத்திலும் கடைபிடிக்கப்படும் எண்ணெய்த் தேய்த்துத் தலைமுழுகுதல் என்ற தூய்மைச் சடங்கே, நெய்யணி மயக்கம் என்று கூறப்பட்டுள்ளது. பிள்ளை பெற்றதால் ஏற்பட்ட புனிறு முடிவடைகின்ற பொழுதில் இந்த நெய்யணிச் சடங்கு நடைபெறுகிறது. புனிறு என்பதற்கு அண்மையில் ஈன்ற, ஈன்றதன் அண்மைக் காலத்தில் ஆகிய பொருள்களோடு கசடு, புன்மை ஆகிய பொருள்களும் உள்ளன. ஈன்றதன் அண்மைக் காலத்தில் ஏற்பட்ட கசடுகள் நீங்கும் பொழுதில் நெய்யணி நடைபெறுகிறது. அப்போது ஐயர் இடத்தும், தேவர்களைக் கருதியும் சிறப்பான சடங்கு செய்யப்படுகிறது. அந்தச் சடங்கின்போது மகப்பேற்றை அடுத்து சிறிது காலம் தனித்திருந்த தலைவியோடு, தலைவன் மீண்டும் சேர்கிறான். இதைத்தான், "ஐயர்பாங்கினும்அமரர்ச்சுட்டியும் செய்பெரும் சிறப்பொடு சேர்தல்" என்று தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார். ஆகையால் அந்தணர்களைக் கொண்டு, வேள்வி முதலியன நடத்தி தெய்வத்தைத் தொழுகின்ற புண்ணியாவாசனச் சடங்கு இது என்று ஊகிக்க முடிகிறது.

முத்தீ பேணுகின்ற அந்தணர்கள் அறநெறியோடு வாழ்தல், நாட்டின் வளத்துக்கான காரணங்களில் ஒன்று என பதினெண்கீழ்க்கணக்கு நூலான திரிகடுகம் இயம்புகிறது.

**செந்தீ முதல்வர் அறம்நினைந்து வாழ்தலும்,**
**வெஞ்சின வேந்தன் முறைநெறியால் சேர்தலும்,**
**பெண்பால் கொழுநன் வழிச்செலவும் - இம்மூன்றும்**
**திங்கள் மும்மாரிக்கு வித்து.**

***(திரி. 98)***

"செம்மையான தீயை (வேள்வித் தீயை) வளர்க்கும் அந்தணர்கள் அறக்கோட்பாடுகளை மறவாமல் அவற்றைக் கடைபிடித்து வாழ்தலும், கடுமையான கோபம் கொள்ளக்கூடிய வேந்தன் முறையான அரசாட்சி நெறிப்படி ஆட்சி செய்தலும், பெண்ணுக்குரிய குணங்களைப் படைத்தவள் தனது கணவனுடைய குறிப்பின் வழிநடத்தலும் ஆகிய மூன்றும் மாதம் மூன்று முறை மழை பொழிவதற்குக் காரணங்களாகும்" என்று இதற்குப் பொருள்.

சங்க கால மன்னர்கள் அறநெறிமுறைப்படி அரசாட்சி நடத்தியதில், வேதநெறிப்படியான பெரிய வேள்விகளைச் செய்தலும் அடங்கும் என்பதற்கான பல்வேறு ஆதாரங்களை அடுத்துக் காண்போம்.

(தொடரும்)

# நமக்கான USER MANUAL



இரா. முகுந்த கிருஷ்ணன்,
Wellness Centre for Yoga & Holistic Yogic Healing.



நாம் எல்லோருமே ஒரு முறையாவது பரதப் போருக்கு முன்பாக பகவான் கண்ணன் அர்ஜுனனுக்கு உபதேசம் செய்யும் படத்தைப் பார்த்திருப்போம். இன்றைய இளைஞர்கள் இதுவரை பார்த்ததில்லை என்றால் இனிமேலாவது பார்த்து மனதில் நிறுத்திக்கொள்வது அவசியம். அது ஒரு சாதாரண போர்க்களப் படமல்ல. மனித வாழ்வின் முழு உண்மையும் அதில் அடங்கியுள்ளது என்பதுதான் அந்த படத்தின் ரகசியம். அர்ஜுனன் மனம் குழப்பமடைந்த நிலையில் போர்வீரனாக தேரில் அமர்ந்திருக்க, கண்ணன் அந்தத் தேரின் தேரோட்டியாக அவனுக்கு முன்பு அமர்ந்திருப்பார். கண்ணனின் ஒரு கையில் ஐந்து குதிரைகளின் கடிவாளங்களும் அவற்றை கட்டுப்படுத்த சாட்டையும் இருக்கும். மற்றொரு கையால் அர்ஜுனனுடைய மனக்குழப்பத்தை சாந்தப்படுத்தும் வகையில் சின்முத்திரை காட்டியபடி உபதேசம் செய்வதுபோல் அந்த காட்சி இருக்கும்.

ஐந்து குதிரைகளோடும், நான்கு சக்கரங்களோடும் கூடிய அந்தத் தேர்தான் நமது உடல். இந்தத் தொடர்களில் இதுவரை நாம் படித்துவந்த, கண், காது முதலிய ஐந்து ஞானேந்திரியங்கள் தான் இந்தத் தேரின் ஐந்து குதிரைகள். உயிராகிய நாம்தான் தேரில் அமர்ந்து வாழ்க்கைப் பயணத்தைச் செய்யும் பிரயாணி. இது எப்படியென்றால், வாடகைக் காரில் உட்கார்ந்தவுடன் டிரைவர் நம்மிடம் எங்குபோக வேண்டும் என்று கேட்க, நாம் சொல்லுகின்ற இடத்திற்கெல்லாம் அவர் நம்மை அழைத்துச் செல்வதுபோல்தான் இதுவும். அதாவது குதிரைகளை இயக்குவதற்கான கடிவாளங்களை கையில் பிடித்துக்கொண்டு தேரை செலுத்த வேண்டிய பொறுப்பு நமக்கு இல்லை. எங்கு போக வேண்டும் என்று தேரோட்டியிடம் கட்டளையிட வேண்டியது மட்டும்தான் நமது வேலை. நமக்கான தேரோட்டி நாம் விரும்புகின்ற விதத்தில் நமது வாழ்க்கை என்னும் தேரை ஓட்டிக்கொண்டிருக்கிறார். நமக்கு மிகப் பெரிய ஒரு சலுகை உள்ளது. அது என்னவென்றால், இறைவனே நமக்குள் இருந்துகொண்டு நமது தேரோட்டியாக இயங்கிக்கொண்டிருக்கிறார் என்பதுதான். சாதாரண டிரைவர் நாம் சொல்வதை மட்டும்தான் செய்வார். ஆனால் இந்த இறைவனான தேரோட்டியோ நம்மைவிட நமக்காக அனைத்தையும் யோசித்து செய்வார்.

நமது இந்திரியங்களான இந்த ஐந்து குதிரைகளும் எந்த நிமிடமும் வெளியே பாய்ந்து ஓடத் தயாராக இருக்கின்றன. அவை ஒவ்வொன்றும் வெவ்வேறு திசைகளில் இஷ்டம்போல் பிடுங்கிக்கொண்டு தறிகெட்டு ஓடிவிடாமல், நமக்கு கட்டுப்பட்டு, நாம் விரும்பும்போது வேகமாகவும், மற்றும் மெதுவாகவும், வேண்டும்போது நிறுத்தப்பட்டும் இயங்கும் விதமாக அவற்றின் கட்டுப்பாட்டை வைத்திருப்பது நமது சாரதிதான். இவ்வாறு நமது குறிப்பறிந்து இயங்குவதற்கு விசேஷ திறமையும், ஆற்றலும், உள்ளுணர்வும், சமயோசித புத்தியும், விவேகமும், சரியாக முடிவெடுத்து தீர்மானிக்கும் ஆற்றலும் தேவைப்படுகிறது. எனவே இந்த அனைத்து குணங்களும் உள்ள இறைவன் நமக்குள் கண்ணுக்குத் தெரியாமல் இருந்துகொண்டு அதேநேரம் நமது அறிவோடு அறிவாக ஊடுருவி நின்றுகொண்டு அறிவின் மூலமாக நமக்காக வாழ்க்கையை நடத்தும் செயலை செய்துகொண்டிருக்கிறார். எனவே இறைவனிடம் ஒப்படைப்பக்கட்ட அறிவு அல்லது புத்திதான் நமது சாரதி.

# பயனுள்ள வாழ்க்கை

**வ ரங்கநாதன்,**
**ஆளுமைத் திறன் பயிற்றுநர்**

மனநிறைவுக்கான சிறந்த வழி தனக்கும் பிறருக்கும் ஏதோ ஒரு வகையில் பயன் தரும்படியான செயல்களில் ஈடுபடுவதே ஆகும்.

அதற்காக சமுதாயத்துக்கு சேவை செய்வது தன்னையே பிறருக்காக அர்பணித்துக் கொள்வது என்ற அர்த்தமில்லை.

நமது அன்றாட வாழ்க்கையை பயனுள்ளதாக ஆக்கிக்கொண்டால் மனநிறைவு கிடைக்கும். மகிழ்ச்சி நிலைக்கும். உடலும் உள்ளமும் சுறுசுறுப்புடன் இருக்கும். தெய்வ அனுக்ரஹம் விரைவில் வரும்.

**தனக்குத் தானே பயனுள்ளபடி வாழ்க்கையை அமைத்துக் கொள்ள சில யோசனைகள்**

1. பயனுள்ள வாழ்க்கை என்பதற்காக வாழ்க்கைப் பாதையையே மாற்றிக் கொள்ள வேண்டும் என்பதல்ல. சிந்தனை சொல் செயலை செம்மைப்படுத்திக் கொள்ளும் படிப்படியாக பயனுள்ளபடி அமைக்கும் முயற்சியைத் தொடங்கணும்.

2. முதலில் அன்றாட செயல்களில் பயனற்றவைகளை நிறுத்தணும். பயனற்ற செயல்கள் என்பது நபருக்கு நபர் மாறுபடும். அதனால் பொதுப்பட்டியல் தருவது பொருத்தமாக இருக்காது. பயனுள்ள செயல்களை முறைப்படி குறித்த நேரத்தில் செய்யும் பழக்கத்தை கொண்டு வரணும்.

3. செய்ய வேண்டிய செயல்களுக்கு சாக்கு போக்கு சொல்லித் தள்ளிப் போடும் பழக்கத்தை நிறுத்தணும். சொகுசாக இருக்கணும் என்ற நினைப்பிலிருந்து பயனுள்ளதாக இருக்கணும் என்ற முனைப்பு வேண்டும்.

4. புலம்பல், குற்றம் சொல்லுதல், புறங்கூறுதல் போன்ற சிறுமைத்தனமான காரியங்களில் ஈடுபடக்கூடாது

5. வளர்ச்சிக்கு மகிழ்ச்சிக்கு பொறுப்பு எடுத்து கடமைகளை காரியங்களை செய்ய வேண்டும்.

6. சின்னச் சின்ன விஷயங்களில் கவனமாக இருக்கணும். நித்யகடமைகளான உடலை சுத்தம் செய்தல் மனதை சுத்தம் செய்தல் உடலைப் பேணுதல் ஆகிய காரியங்களை ஒழுங்கோடும் கவனத்தோடும் செய்ய வேண்டும்.

7. பொருட்களை ஒரு ஒழுங்கில் வைக்க வேண்டும். மனதை குப்பையாக்காமல் ஒழுங்கில் வைக்கும் வழிகளை அறிந்து முறையாக வைத்துக் கொள்ள வேண்டும், மனம் போல் மாங்கல்யம் என்பார்கள், மனம் தான் மனிதன் என்கிறார் கௌதம புத்தர். மனம் சுத்தமாக இருந்தாலே முக்கால்வாசிப் பிரச்சனை தீரும் அல்லது பிரச்சனைகளே வராது.



8. சுயக்கட்டுபாட்டில் கவனம் செலுத்தினால் வாழ்க்கை சுலபமாக இருக்கும். அதற்கு சத் சங்கம், ராஷ்ட்ரீய ஸ்வயம் சேவக் சங்கம் போன்ற அமைப்புகளில் பங்கெடுக்கலாம். ஸ்ரீடீவி முன்னெடுக்கும் சமுதாய காரியங்களில் பங்கெடுக்கலாம்.

9. இதிகாச புராணங்களை தினமும் வாசிப்பது என்ற பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டு குடும்பத்தினர் நண்பர்கள் என பேசி கருத்தை பகிரலாம். சிறுவர்களுக்கு சொல்லிக் கொடுக்கலாம்

10. அருகில் உள்ள கோவிலுக்குச் சென்று சிறிய சிறிய பணிகளை செய்யலாம். அப்படி செய்யும்போது பொதுமக்கள் பழக்கம் ஏற்பட்டு உங்களது செல்வாக்கு கூடும். அதன்மூலம் உங்கள் சொல்வாக்கு வலிமை பெறும். ஹிந்து சமுதாயம் பாதிப்படையும்போது அதை பக்தர்களுக்கு எடுத்துச் சொல்லி புரிய வைக்க முடியும். அவர்களும் உங்கள் வார்த்தைகளை கேட்பார்கள்.

11. குடும்பத்தில் அமைதி நிலவ இறைபக்தியை வளர்த்தல். குடும்ப உறவினர்களோடு இணக்கமாக பேசுதல். ஒன்றாக அமர்ந்து சந்தோஷமாக சாப்பிடுதல், போன்றவை வாழ்க்கைக்கு பலம் தரும்

12. தவறுகள் நேர்ந்தால் மன்னித்து புரிந்து கொள்ளுதல். அடுத்த முறை தவறு நேராதவாறு வழிகளை அமைத்தல்

இப்படி கவனமாகவும் மகிழ்ச்சியாகவும் வாழ்ந்தாலே வாழ்க்கை பயனுள்ளதாக அமையும்

# ஆர்.எஸ்.எஸ். 100
# இந்த நாடு ஹிந்து நாடு (பகுதி 9)

இராம . வெங்கடாத்ரி

**வேற்றுமையில் ஒற்றுமை ஹிந்துதர்ம சாதனை**

நூற்றாண்டு விழா காணும் ஆர்.எஸ்.எஸ்.- ன் அடிப்படை சித்தாந்தம் இந்த நாடு ஒரு ஹிந்து ராஷ்ட்ரம் என்பதே. இமயம் முதல் குமரி வரை இந்த நாடு கலாச்சார அடிப்படையில், ஆன்மிக மரபுகளால் ஒன்றாகப் பிணைக்கப்பட்டுள்ளது.

**இந்தியாவை இணைக்கும் இதிகாசங்கள்**

ராமாயணமும் மகாபாரதமும் இந்த நாட்டை இணைக்கும் இதிகாசங்கள். இதிகாசம் என்றாலே "இப்படி நடந்தது" என்று பொருள். இந்த பகுதியில் ராமாயணம் எப்படி இந்த நாட்டை ஒருமைப்படுத்தி வருகிறது என்று பார்க்கலாம்.

**வால்மீகி காட்டும் பாரதம்**

வால்மீகி இராமாயணத்தில், ஸ்ரீஇராமரின் உன்னத குணநலன்களைப் பற்றிக் குறிப்பிடும்போது, மகரிஷி வால்மீகி பின்வருமாறு கூறுகிறார்:

**'சமுத்திர இவ காம்பீர்யே தைர்யே ச ஹிமவானிவ'**

(வால்மீகி இராமாயணம் - பாலகாண்டம் 1.17)

"இக்ஷ்வாகு குலத் தோன்றலான இராமபிரான், ஆழ்ந்த கம்பீரத்தில் கடலைப் போன்றும், பொறுமையில் இமயமலையைப் போன்றும் திகழ்கிறார்" இமயமலை முதல் ஹிந்து மகா சமுத்திரம் வரை பரந்து விரிந்திருந்த ஒரு பாரத தேசத்தில் உள்ள அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு குறியீடாக ராமன் திகழ்கிறார் என்பதாலேயே வால்மீகி இப்படிக் கூறி இருக்கிறார்.

சீதையைத் தேடி ஸ்ரீராமரும் லட்சுமணரும் ரிஷ்யமுக மலையின் அடிவாரத்தை அடைந்தபோது அனுமன் கூறியதாவது:

**"உபௌ யோக்யௌ அஹம் மன்யே ரக்ஷிதும் ப்ருத்விம் இமாம் ஸஸாகரவனாம் க்ருத்ஸ்னாம் விந்த்யமேரு விபூஷிதாம்"**

(வால்மீகி ராமாயணம் - கிஷ்கிந்தா காண்டம் - 3.15).

இதன் பொருள்: "(தெற்கே) கடல்கள் வரை விரிந்துள்ளதும், காடுகள் செறிந்ததும், வடக்கே இமய மலையாலும், நடுவில் விந்திய மலையாலும் அலங்கரிக்கப்பட்டிருப்பதுமான இந்த முழுப் பூமியையும் காப்பதற்கு, நீங்கள் இருவரும் இணைந்தே தகுதியுடையவர்கள் ஆவீர்கள்" என்பதாகும். இமய மலைத் தொடர் முதல் கடல்கள் வரை பரந்து விரிந்திருந்த பாரத தேசத்தையே வால்மீகி இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

**தமிழில் ராமாயணம்**

இராமாயணக் கதை தமிழ் நாட்டில் சங்க காலத்திலேயே அறியப்பட்டிருந்தது என்பதை புறநானூறு 378ஆம் பாடலும், அகநானூறு 70ஆம் பாடலும் நினைவூட்டுகின்றன. வால்மீகியின் இராமாயணக் கதையை கவிச்சக்கரவர்த்தி கம்பன் சுமார் 22,000 பாடல்களில் இராமகாதை என்ற பெயரில் எழுதினார். இது தவிர 40 க்கும் மேற்பட்ட ராமாயண இலக்கியங்கள் கவிதைகள், பாடல்கள், உரைநடைகள், கீர்த்தனைகள், கும்மிப்பாடல்கள் எனப் பல்வேறு வடிவங்களில் தமிழில் கொட்டிக் கிடக்கின்றன.

**பாரத மொழிகளில் ராமாயணம்**

தெலுங்கு மொழியில்: கோனா புத்த ரெட்டி எழுதிய 'ஸ்ரீ ரங்கநாத ராமாயணம்', விஸ்வநாத சத்யநாராயணாவால் எழுதப்பட்ட 'ஸ்ரீமத் ராமாயண கல்பவிருட்சமு', அஸ்ஸாமி மொழியில்: மாதவ கந்தலியால் எழுதப்பட்ட 'சப்தகாண்ட ராமாயணம்', துர்காபர் காயஸ்தரால் எழுதப்பட்ட 'துர்காபரி-ராமாயணம்'. வங்காள மொழியில்: கிருத்திவாஸ் ஓஜாவால் எழுதப்பட்ட 'கிருத்திவாசி ராமாயணம்', நித்யானந்த ஆச்சார்யாவால் எழுதப்பட்ட 'அற்புத ஆச்சார்யரின் ராமாயணம்', பீகாரின் மைதிலி மொழியில்: சந்தா ஜா எழுதிய மிதிலா பாஷா ராமாயணம், லால் தாஸ் எழுதிய ராமேஷ்வர் சரித் மிதிலா ராமாயணம், குஜராத்தி மொழியில் பிரேமானந்த் சுவாமியின் துளசி கிருத ராமாயணம், கிராதர கோஸ்வாமியின் கிராதர ராமாயணம், காஷ்மீரி மொழியில்: காஷ்மீரி ராமாவதார சரிதம், கன்னட மொழியில்: குமுதேந்து ராமாயணம், குமார-வால்மீகி தொரவே ராமாயணம், முத்தண்ணா எழுதிய அத்பூத ராமாயணம் மலையாளத்தில்: நிரணம் ராம பணிக்கர் எழுதிய கண்ணாச்சா ராமாயணம், துஞ்சத்து எழுத்தச்சன் எழுதிய அத்யாத்ம ராமாயணம் கிளிப்பாட்டு, மராத்தி மொழியில்: சந்த் ஏக்நாத் எழுதிய மராத்தி பவர்த்த ராமாயணம், ஒரிய மொழியில்: பலராம தாசாவால் இயற்றப்பட்ட ஜகமோகன ராமாயணம், பிஸ்வநாத் குந்தியா எழுதிய பிசித்ரா ராமாயணம், உத்தரப்பிரதேசத்து அவாத் மொழியில்: கோஸ்வாமி துளசிதாஸால் எழுதப்பட்ட ராம்சரித்மானஸ் - இப்படி எல்லா இந்திய மொழிகளில் உள்ள ராமாயணத்தின் ஒரு மிகச்சிறிய சாம்பில் மட்டுமே இது வரை சொன்னது. இது போக நாடு முழுவதும் உள்ள கணக்கில் அடங்காத நாட்டுப்புறப் பாடல்களிலும், ராம லீலா போன்ற நாட்டியப் பாடல் மரபுகளிலும் ராமன் இந்த நாடு முழுவதையும் இணைத்துக் கொண்டிருக்கின்றார்.

**இந்த மண் ராமன் நடந்த மண்**

ராமன் நேபாளம் முதல் இலங்கை வரை நடந்ததால் பாரதம் முழுவதும் புண்ணிய பூமியாக போற்றப்படுகிறது. ராமாயணத்தில் வரும் சம்பவங்கள் தங்கள் ஊரில் நடந்ததாக சொல்லி பல ஊர்கள் ஒரே சம்பவத்துடன் தொடர்பு படுத்தப்படுகின்றன. ஸ்ரீராமர் கடவுள் மட்டுமல்ல, அவர் நம் பாரதத்தின் அடையாளம். தமிழகத்தில் ராமனோடும் ராமாயணத்தோடும் தொடர்புடைய ஊர்கள் ஏராளமாக உள்ளன.

**திருவான்மியூர்:** சென்னையின் ஒரு பகுதி. இராமாயணத்தை எழுதிய வால்மீகி தவம் புரிந்து இறைவன் காட்சியளித்த தலமே திருவான்மிகியூர்

**தாடகைமலை:** கன்னியாகுமரி மாவட்டம் தோவாளை வட்டத்தில் தெரிசனம்கோப்பில் உள்ள மலை. நாகர்கோவிலில் இருந்து 12 கி.மீ. தொலைவில் உள்ளது.

**வில்லுக்குறி:** இவ்வூர் நாகர்கோயில்-திருவனந்தபுரம் சாலையில் தக்கலைக்கு தெற்காக நான்கு மைல் தூரத்தில் உள்ளது. இராமன் தன் வில்லை தரையில் கீறிய இடம்.

**விஜயாபதி:** கூடங்குளத்தில் இருந்து தெற்காக கடலோரத்தில் ஐந்து கி.மீ. தொலைவில் உள்ள இங்கேதான் தாடகையைக் கொன்றபாவம் நீங்கிட யாகம் செய்தார்.

**திருமலை:** சிவகங்கை அருகேயுள்ள இந்த மலையில் இராமனும் சீதையும் தங்கி ஓய்வு எடுத்தனர்.

**கழுகத்தூர்:** ஜடாயு குண்டம்: மன்னார்குடி - பெருகவாழ்ந்தான் சாலையில் 15 கி.மீ. தொலைவில் உள்ளது ஜடாயுவின் இறகுகளை ராவணன் வெட்டி வீழ்த்திய இடம்.

**கழுகுமலை:** கோவில்பட்டியில் இருந்து, 20 கி.மீ. தூரத்தில் உள்ளது. ராமனால் ஜடாயுவுக்கு இறுதி காரியங்கள் செய்யப்பட்ட இடம்.

**ராமர் பாதம்:** வேதாரண்யம் - கோடியக்கரை ச ாலையில் 3-வது கிலோமீட்டரில் உள்ளது.

**கோதண்டராமர் கோயில்:** விபீஷணனுக்கு ராமன் இலங்கை வேந்தனாக பட்டாபிஷேகம் செய்து வைத்த இடம். ராமேஸ்வரத்தில் இருந்து தனுஷ்கோடி செல்லும் வழியில் 12 கி.மீ. தூரத்தில் உள்ளது.

**தேவிப்பட்டினம்:** ராமநாதபுரத்திலிருந்து வடகிழக்காக 10 கி.மீ. தொலைவில் உள்ளது. ராமர் இலங்கை செல்ல பாலம் அமைப்பதற்குமுன், நவபாஷாணத்தால் உருவாக்கப்பட்ட நவக்கிரகங்களை கடலில் பிரதிஷ்டை செய்து வழிபட்ட பின்சீதாதேவியைத் தேடி ராமன் புறப்பட்டுச் சென்றமையால் தேவிப்பட்டினம் ஆகியது.

**திருப்புல்லாணி:** ராமநாதபுரத்துக்குத் தென்கிழக்கே 8 கி.மீ. தூரத்தில் உள்ளது. ராமபிரான் புல்லையே தலையணையாகக் கொண்டு படுத்து உறங்கியதால் திருப்புல்லணை.

**சேதுக்கரை:** திருப்புல்லாணியில் இருந்து 4 கி.மீ. தூரத்தில் உள்ளது. ராமன் இங்கிருந்துதான் இலங்கை செல்ல பாலம் அமைத்தார்.

**சஞ்சீவி மலை:** ராஜபாளையத்திற்குக் கிழக்கே உள்ள மலை. அனுமன் கொண்டு வந்த சஞ்சீவி மலையின் சிதறிய ஒரு பகுதி இது.

**கூந்தலூர்:** கும்பகோணம் பூந்தோட்டம் சாலையில் நாச்சியார்கோயிலுக்கு கிழக்காக பத்து கி.மீ. தொலைவில் அரிசிலாற்றின் தென் கரையில் அமைந்துள்ள கிராமம். இங்குள்ள குளத்தில், சீதா தேவி நீராடியபோது ஏழு முடிகள் உதிர்ந்த்தால், "கூந்தல் உதிர்ந்த ஊர்" மருவி கூந்தலூர் ஆகியது. கோயிலின் வடகிழக்கு முலையில் சீதா தீர்த்தம் உள்ளது.

**வனவாசி:** சேலம் மாவட்டம் ஓமலூர் வட்டத்தில் அமைந்துள்ள கிராமம். இராமன் வனவாசியாக அலைந்து திரிந்த இடமாதலால் இப்பெயர்.

**பொய்மான் கரடு:** சேலம் - நாமக்கல் தேசிய நெடுஞ்சாலையில் சேலத்தில் இருந்து 9 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள கிராமம். பொய்மான் வடிவெடுத்த மாரீசன் ஓடிய இடம்.

**வலங்கைமான்:** கும்பகோணம் - மன்னார்குடி சாலையில் கும்பகோணத்தில் இருந்து பத்து கி.மீ. தொலைவில் குடமுருட்டி ஆற்றின் கரையில் அமைந்துள்ள ஊர். மாரீசன் பொன்மானாக வடிவெடுத்து இவ்வூரின் வலப்புறமாக திரும்பி வளைந்து ஓடியதால் வலங்கைமான் ஆனது.

**துடையூர்:** திருச்சி-நாமக்கல் சாலையில் கொள்ளிடக்கரையில் அமைந்துள்ளது. மாரீசன் எனும் மாயமானை, ராமன் இவ்வூரில் அதனின் தொடைப்பகுதியில் அம்பு தொடுத்துச் சாய்த்த இடம்.

**பாடகச்சேரி:** கும்பகோணம் அருகே உள்ளது. இராவணனால் கவர்ந்து செல்லப்பட்டபோது சீதையால் வீசப்பெற்ற அணிகலன்களுள் பாடகம் (கொலுசு) வீழ்ந்த இடம்.

**இறகு சேரி:** தேவகோட்டை அருகில் உள்ள கிராமம். சடாயுவின் இறகு வீழ்ந்த இடம்.

**திருப்புள்ள பூதங்குடி:** சுவாமி மலையிலிருந்து திருவையாறு செல்லும் வழியில் 4 கி.மீ., தொலைவில் உள்ளது. சடாயுவாகிய புள்ளிற்கு இராமன் ஈமக்கிரியை செய்த இடம்.

**கழுகத்தூர்:** மன்னார்குடி பெருகவாழ்ந்தான் சாலையில் 15 கி.மீ.தொலைவில் அமைந்துள்ளது, சடாயுவின் இறுதிச் சடங்குகளை இராமன் மேற்கொண்ட இடம்.

**சடாயு குண்டம்:** வைத்தீஸ்வரன் கோயிலில் சடாயு குண்டம் உள்ளது.

**சடாயு தீர்த்தம்:** திருநெல்வேலியில் தாமிரபரணி ஆற்றங்கரையில் வெள்ளைக் கோவில் அருகில் உள்ளது.

**கழுகுமலை:** மதுரை திருநெல்வேலி தேசிய

நெடுஞ்சாலையில், கோவில்பட்டியில் இருந்து, 20 கி.மீ., தூரத்தில் உள்ளது. சடாயுவின் சகோதரன் சம்பாதி இராமன் சொல்படி, முருகனை வழிபட்டு மோட்சம் அடைந்த இடம்.

**திருப்புட்குழி:** காஞ்சியிலிருந்து தென்மேற்காக ஏழு கல் தொலைவில் அமைந்துள்ளது. இராமபிரான் சடாயுக்கு முக்திபேறு அளித்த தலம்.

**இராமரோடை:** திருவிடைமருதூர் அருகேயுள்ள திருலோக்கிதைலிக்கி என்ற ஊரில் பாயும் ஓடை. இராமன் தனது கையால் கிழித்து இவ்வோடையை உருவாக்கினார்

**திருஉசாத்தானம்:** தஞ்சை மாவட்டம் முத்துப்பேட்டைக்கு வடக்காக காவிரியின் தென்கரையில் அமைந்துள்ள தலம். கடலில் அணை கட்டுவதற்கான வழிமுறைகளை இராமன் இத்தலத்துப் பெருமானிடம் உசாவினர் (கேட்டறிந்தார்). இவ்வூருக்கு அருகில், ஜாம்பவான் ஓடை, அனுமான் காடு, சுக்ரீவன் பேட்டை முதலிய ஊர்கள் உள்ளன.

**சடாயு பெருந்தோட்டம்:** வைத்தீஸ்வரன் கோயிலுக்கு கிழக்காக 16 கி.மீ. தொலைவில் சீர்காழி அருகே உள்ளது.

**ஜலகண்டபுரம்:** ஓமலூர் வட்டத்தில் அமைந்துள்ள இத்தலத்தில் குடிப்பதற்கு ராமன் தன் வில்லை நிலத்தில் ஊன்றி நீர் எடுத்ததால், ராமன் ஜலம்கண்டபுரம், ஜலகண்டபுரம் ஆயிற்று.

**இராமநாதபுரம்:** இராமன் இங்கு வந்து இறைவனை வழிபட்டதால் இந்த ஊரின் பெயர், மற்றும் மாவட்டத்தின் பெயர் இராமநாதபுரம் ஆயிற்று.

**கெந்தமாதன பர்வதம்:** இராமேஸ்வரம் இராமநாதசுவாமி கோவிலில் இருந்து வடக்கே 4 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. சீதையை தேடிவந்த இராமன் இக்குன்றின்மேல் நின்று இலங்கையை நோக்கினான்.

**மருந்து வாழ் மலை:** இம்மலையானது மேற்குத் தொடர்ச்சி மலையின் தென்முனையில், கன்னியாகுமரியில் இருந்து 7 கி.மீ தொலைவில் பொற்றையடி கிராமத்திற்கு வடக்கே அமைந்துள்ளது. அனுமன் எடுத்து வந்த சஞ்சீவி மலையிலிருந்து விழுந்த சிறிய பகுதி இது.

**வில்லூரன்றி:** இராமேஸ்வரம் செல்லும் முன்பு அக்கா மடம், தங்கச்சி மடத்துக்கு இடதுபுறம் 2 கி.மீ. தூரத்தில், ராமபிரான் தனது வில்லை ஊன்றி ஏற்படுத்திய நன்னீர் ஊற்று.

**திலதைப்பதி:** மயிலாடுதுறை - திருவாரூர்ச் சாலையில் உள்ள பூந்தோட்டம் அருகே அமைந்துள்ள தலம். இராமன் தம் தந்தைக்கும் சடாயுவுக்கும் தில தர்ப்பணம் (திலம் - எள்) இறைத்த தலம்.

**கண்டதேவி:** சிவகங்கை மாவட்டம் தேவகோட்டைக்கு அருகில் உள்ள கிராமம். இலங்கையில் சீதையை சந்தித்துத் திரும்பிய அனுமன் ராமனிடம் "கண்டேன் தேவியை" என்று கூறிய இடம்.

**அனுமன் தீர்த்தம்:** தர்மபுரி மாவட்டத்தில் ஊத்தங்கரையில் உள்ள ஊற்று.

**கபிஸ்தலம்:** கும்பகோணம்-திருவையாறு சாலையில் கும்பகோணத்திலிருந்து 15 கிமீ தொலைவில் அமைந்துள்ள ஊர். வாலியும் சுக்ரீவனும் இங்கு பெருமாளை வழிபட்டதால் இவ்வூர் கபிஸ்தலம் (கபி = வானரம்) ஆகிறது.

**சேந்தமங்கலம்:** நாமக்கல்லில் இருந்து 11 கி.மீ.வட கிழக்காக உள்ள கிராமம். இலங்கையில் இருந்து திரும்பியதும் சீதையும் ராமனும் மீண்டும் சேர்ந்த இடம், "சேர்ந்த மங்கலம்" மருவி சேந்தமங்கலம் ஆகியது.

**ஸ்ரீரங்கம்:** விபிஷணன் இலங்கை செல்லும் வழியில் விட்டுச் சென்ற பெருமாள்.

**வாலிகண்டபுரம்:** பெரம்பலூர்க்கு வடகிழக்கே 15 கி.மீ. தொலைவில் உள்ளது.

**தாரமங்கலம்:** சேலம் நகரிலிருந்து சுமார் 27 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. வாலியின் மனைவி தாரை வழிபட்டதால், "தாரைமங்கலம்" பின்னர் தாரமங்கலம் ஆகியது.

**வாலிநோக்கம்:** இராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூரிலிருந்து தென்கிழக்காக 26 மைல் தொலைவில் இவ்வூர் அமைந்துள்ளது.

**அயோத்தியாபட்டணம்:** சேலத்தில் இருந்து கிழக்கே 6 கிமீ தொலைவில் உள்ளது. ராமன் அயோத்தி செல்லும் வழியில் தங்கிய தலம்.

**பாபநாசம்:** தஞ்சாவூர் கும்பகோணம் சாலையில் அமைந்துள்ள தலம். கர, தூசணர்களைக் கொன்ற பாவம் நீங்க, இராமன் சிவனை வழிபட்டு தன் பாபத்தை நாசம் செய்த இடம்.

**இராம நதி:** திருநெல்வேலி மாவட்டம் கடையம் பகுதியில் உள்ள இதில் இராமன் நீராடினார்.

**கோயம்பேடு:** இராமனின் அஸ்வமேத யாக குதிரையை லவன், குசன் இருவரும் சேர்ந்து கட்டிப் போட்ட இடம். (கோ- அரசன், அயம்- குதிரை, பேடு- கட்டுதல்). சின்னம்பேடு: சிறுவாபுரி என்றழைக்கப்படும் தலம். பொன்னேரிக்கு மேற்கே 10 கி.மீ. தொலவில் உள்ளது. இங்கு லவன், குசன் இருவரும் இராமனோடு போர் செய்து இராமனை வெற்றி கொண்டனர். அதலால் இவ்வூர், சிறுவர்புரி, சிறுவாபுரி என்று ஆனது.. சிறுவர்+அம்பு+எடு என்பது சின்னம்பேடு ஆனது. பேடு என்பது அம்பு வைக்கும் கூடு ஆகும்.

இராமாயணத்தில் இடம் பெற்ற கதை மாந்தர்கள் தங்கள் ஊரில்தான் பயணித்தார்கள்; இராமாயண நிகழ்வுகள் தங்கள் பகுதியில்தான் நடைபெற்றது என்று எல்லோரும் அடையாளப்படுத்திக் கொள்வதைக் காண்கிறோம். **(தொடரும்)**

# இரண்டாம் பாரதியின் எழுச்சி கீதங்கள் - பகுதி 12




- ஏழுமலை

**இரண்டாவது பாரதியார்**

"மகாகவி சுப்ரமணிய பாரதியாருக்குப் பிறகு, சுதந்திர பாரதத்திலே தமிழிலே அதிகமான தேசபக்திப் பாடல்களை எழுதிய தேசியக் கவி, இரண்டாவது பாரதி என்று அழைக்கப்படுபவர் இந்து முன்னணி நிறுவனர் வீரத்துறவி இராம.கோபாலன்ஜி அவர்கள்.

**இரவு கழிந்தது இரவி எழுந்தான்**

அவர் எழுதிய பாடல்களிலே இரவு கழிந்தது இரவி எழுந்தான் என்ற பாடல் வரிகளைப் பற்றி கடந்த சில தொடர்களில் பார்த்து வருகிறோம். நமது நாடு சுதந்திரம் அடைந்த காலகட்டத்தில் அவர் எழுதியது இந்தப் பாடல். அந்நிய ஆட்சிக் காலமாகிய இருண்ட காலம் (இரவு) முடிந்து, புதிய விடியலாகச் சூரியன் (இரவி) எழுந்துவிட்டான் என்பதை சொல்லுவதன் மூலமாக பாரத தேசத்தின் எழுச்சி யையும், அறியாமை நீங்கி ஞானம் பிறப்பதையும் இந்தப் பாடல் ஒரு குறியீடாகச் சொல்கிறது. அந்தப் பாடலில் வரும்

**ரஜபுத்ரர் வீரம் சோழர் சீராட்சி**

ஆகிய பாடல் வரிகளைப் பற்றி இன்று விரிவாகக் காண்போம்.

**ரஜபுத்திரர் வீரம்**

நமது நாட்டின் மேற்குப் பகுதியில் உள்ள ராஜஸ்தான் பகுதியை ஆண்ட ராஜபுதன மன்னர்கள் பாரத நாட்டின் மேற்குப் பகுதியில் இருந்து நம் நாட்டிற்குள் படையெடுத்த இஸ்லாமிய ஆக்ரமிப்பாளர்களிடம் இருந்து நம் நாட்டைத் தொடர்ந்து காத்து வந்தாலேயே நமது நாடு இன்றும் ஹிந்துப் பெரும்பான்மை நாடாக இருக்கிறது. சில ராஜபுத்திர மன்னர்களின் வீர் வரலாற்றினை சற்று காண்போம்.

**ராணா பிரதாப் சிம்மன்**

கடைசி வரை அக்பரால் வெல்லவே முடியாத மேவார் மன்னன் ராணா பிரதாப் சிம்மன். லட்சம் பேர் கொண்ட அக்பரின் படைகளை சில ஆயிரம் வீரர்களுடன் எதிர்த்த இவரை கடைசி வரை அக்பரால் பிடிக்க முடியவில்லை. செல்வம் இல்லாத, அரண்மனை இல்லாத, படைகள் கூட இல்லாத இந்த ராணாவிடம் இருந்தது உண்மையான வீரம். தன் நாட்டை ஒருநாளும் கைவிடாத உறுதி! அதனால் அக்பருக்கு இறுதி வரை சிம்ம சொப்பனமாக விளங்கியவர் ராணா பிரதாப்.

**ராணா சாங்கா**

டெல்லியை ஆண்ட இப்ராஹிம் லோடியை எதிர்த்து 1518ல் நடந்த போரில், வெற்றி பெற்றவர் ராணா சாங்கா. அந்தப் போரில் தன்னுடைய கண்ணையும் ஒரு கையையும் இழந்தார் சாங்கா. அதன் பிறகும் இப்ராஹிம் லோடி சாங்காவுடன் பலமுறை போரிட்டார், ஆனால் எல்லா போர்களிலும் (ஊனமுற்ற) சாங்காவே லோடியை வெற்றி கொண்டார். பாபருக்கு எதிரான போரில் சாங்காவின் படையில் இருந்த சில்ஹடி 30000 வீரர்களைக் கொண்ட தனது படையுடன், போரின் முக்கியமான தருணத்தில் பாபரின் அணிக்குத் தாவி, நம்பிக்கைத் துரோகம் செய்து ராணா சாங்காவைத் தாக்கினார். காயமடைந்து தனது குதிரையிலிருந்து மயங்கி சாங்கா கீழே விழுந்ததால் பாபர் அப்போரில் வெற்றி பெற்றார். சிறிது காலம் கழித்து பாபரை வெல்ல மீண்டும் படை திரட்டிச் சென்ற ராணா சாங்கா செல்லும் வழியிலே நோய்வாய்ப்பட்டு இறந்து விட்டார். ராஜபுதனத்து நாட்டுப்புறப் பாடல்களில் இன்றும் ராணா சாங்காவின் வீரம் இசைக்கப்படுகிறது.

**பிருத்விராஜ்**

1191ம் ஆண்டு, ஆப்கனை வென்று இந்தியா மேல் படையெடுத்த கோரி முகமதுவை வென்ற 20 வயது வீரன் பிருத்விராஜ் சௌஹான், உயிர் பிச்சை அளித்து அவனை ஆப்கனுக்கு விரட்டினார். இரண்டாவது முறை படையெடுத்து வந்த போதும் பிரித்வியினை கோரியினால் வெல்ல முடியவில்லை. யுத்த நெறிகளை மீறி நள்ளிரவில் தூங்கும்போது, பிரித்வியினை சிறை பிடித்த கோரி அவரது கண்களைக் குருடாக்கி, கைதியாக தன் சபைக்கு அழைத்துச் சென்றார். கண் குருடான நிலையிலும், தன் கையில் கொடுக்கப்பட்ட வில்லினைப் பூட்டி கோரியின் மேல் அம்பைச் செலுத்தி அவனைக் கொன்றார் பிரித்வி. இந்தியா தன் ஏவுகணைக்கு "பிரித்வி" என அந்த மாவீரரின் பெயரைச் சூட்டியுள்ளது. சீனாவிடமிருந்து ஏவுகணை வாங்கிய பாகிஸ்தான் அதற்கு "கோரி" என பெயரிட்டு இருக்கின்றது. 900 ஆண்டுகளை கடந்தாலும் கோரியை எதிர்த்து பிரித்வி இப்போதும் இந்தியாவின் பாதுகாப்பாக நிற்கின்றார்.

**மகாராணா கும்பா**

அலாவுதின் கில்ஜிக்குப் பிறகு, சுல்தானியப் படைகளை முழுவதும் நிர்மூலமாக்கி, 1433 முதல் 1468 வரை ஆண்ட மகாராணா கும்பா "ஹிந்து சூரத்னா" என்று போற்றப்பட்டார். இஸ்லாமிய சுல்தான்களை வெற்றி கொண்டதன் அடையாளமாக அவர் 9 அடுக்கு மாடிகளுடன் 121 அடி உயரத்தில்

நிர்மாணித்த "விஜய ஸ்தம்பம்" சித்தோர்கட் என்ற இடத்தில் அவரது வீரத்தின் சாட்சியாக இன்றும் வீற்றிருக்கிறது.

**பப்பா ராவல்**

கி.பி. 8-ஆம் நூற்றாண்டில் சிந்துவைக் கைப்பற்றிய முகமது பின் காசிமைத் தோற்கடித்து பலுசிஸ்தான் வரை அவனை விரட்டிச் சென்றார் பப்பாராவல். கஜினி மீது படையெடுத்து அதனை வென்றார். சித்தூரின் மன்னராக தன்னை முடிசூட்டிய பிறகு கொராசான், துரான், இஸ்பஹான், (இன்றைய பாகிஸ்தான், ஈரான், உஸ்பெக்கிஸ்தான், துருக்மெனிஸ்தான், ஆப்கன்) ஆகியவற்றை வென்று அவற்றைத் தனது ராஜ்ஜியத்தின் சிற்றரசுகளாக ஆக்கினர். சுல்தானிய படைகள் வந்துவிடாமல் தடுக்க பெரும் கோட்டையும் காவலும் கொண்ட அரண்மிக்க புதிய ஊரை நிர்மாணித்தார். அதுதான் ராவல்பிண்டி, பப்பா ராவலின் பெயரில் அமைக்கபட்ட ராவல் பிண்டி இன்றும் பாகிஸ்தானில் இருந்தபடி அவரது வீரத்தைப் பறை சாற்றிக் கொண்டிருக்கிறது.



**சோழர் சீராட்சி**

உலக வரலாற்றில் மிக அதிகமான ஆண்டுகள் ஆண்ட அரச வம்சம் சோழர்களின் ஆட்சியே ஆகும். தமிழகம், கேரளம், ஆந்திரம், ஒரிசா, இலங்கை, இந்தோனேஷியா, மலேஷியா, பிலிப்பைன்ஸ், உள்ளிட்ட தென் கிழக்கு ஆசியக் கடல் பிராந்தியம் முழுவதையும் ஆண்டது சோழர்களின் சாம்ராஜ்யம்.

உத்திரமேரூர் கல்வெட்டுகள் சோழர் நிர்வாகம் குறித்த தெளிவான தகவல்களை வழங்குகின்றன. சோழர் நிர்வாகம் மூன்று முக்கியப் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. மத்திய அரசு, மாகாண அரசு மற்றும் உள்ளாட்சி அரசு. மத்திய நிர்வாகத்தில் உயர்நிலை அதிகாரிகள் 'பெருந்தரம்' என்றும், கீழ்நிலை அதிகாரிகள் 'சிறுந்தரம்' என்றும் பிரிக்கப்பட்டனர். சோழப் பேரரசு ஒன்பது மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. இம்மாகாணங்கள் 'மண்டலங்கள்' என்றும் அழைக்கப்பட்டன. மாகாணத்தின் ஆட்சியாளராக ஒரு 'துணைவேந்தர்' நியமிக்கப்பட்டார். துணைவேந்தர்கள் குறிப்பிட்ட கால இடைவெளிகளில் மன்னருக்குத் தங்கள் நிர்வாக அறிக்கைகளைச் சமர்ப்பித்தனர். துணைவேந்தர்களின் நிர்வாகப் பணிகளுக்கு உதவ, ஏராளமான அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருந்தனர். ஒவ்வொரு மண்டலமும் கோட்டங்கள் அல்லது வளநாடுகளாகப் பிரிக்கப்பட்டது. ஒவ்வொரு கோட்டமும் மேலும் நாடுகளாகப் பிரிக்கப்பட்டது. ஒவ்வொரு நாடும் கிராமங்களாகப் பிரிக்கப்பட்டு, அவையே இறுதி நிர்வாக அலகாக அமைந்தன. மாவட்டம், நகரம் மற்றும் கிராம அளவிலான உள்ளாட்சி நிர்வாகமே சோழ நிர்வாகத்தின் மிக முக்கியமான அம்சமாக இருந்தது.

சோழ நிர்வாக முறையின் மிகத் தனித்துவமான அம்சம் கிராம சுயாட்சி ஆகும். நாடுகள் ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட சபைகளைக் கொண்டிருந்தன. கிராம சபை கிராம நிர்வாகத்திற்கு முழுப் பொறுப்பாக இருந்தது. அமைதியைப் பேணுதல், குளங்கள், சாலைகள், பொதுக் குளங்கள், வருவாய் வசூல், நீதித்துறை, கல்வி மற்றும் கோயில்கள் ஆகியவற்றுக்கு கிராம சபைகள் பொறுப்பாக இருந்தன. அவை ஒவ்வொரு கிராமத்திலும் சட்டம் ஒழுங்கைப் பராமரித்தன.

கிராம சபைகள் வாரியங்களின் உதவியுடன் கிராம நிர்வாகத்தைத் திறம்பட நிர்வகித்தன. 'தோட்டவாரியம்', 'நியாயவாரியம்' (நீதி நிர்வாகம்), 'தர்மவாரியம்' (கோவில்கள்), 'ஏரிவாரியம்' (நீர் விநியோகம்), 'பொன்வாரியம்' (நிதி நிர்வாகம்) என பல வாரியங்கள் செயல்பட்டன. அனைத்து வாரியங்களின் செயல்பாடுகளையும் மேற்பார்வையிடும் பொறுப்பு 'கிராமகாரிய வாரியத்திடம்' இருந்தது. இந்த வாரியங்களின் உறுப்பினர்கள் "வாரியப் பெருமக்கள்" என்று அழைக்கப்பட்டனர். உள்ளாட்சி நிர்வாகம் குடவோலை முறை எனப்படும் தேர்தல் முறைப்படி நடைபெற்றது. தேர்தல் நடத்தை விதிமுறைகள், வேட்பாளருக்கான தகுதிகள் வரையறுக்கப்பட்டு ஆண்டுக்கு ஒரு முறை தேர்தல் நடத்தப்பட்டது.

ரஜபுத்திரர்களின் வீரமும், சோழர்களின் சீராட்சியும் இரு கண்களைப் போல பாரத நாட்டில் நிலவ வேண்டும் என்பதே வீரத்துறவியின் அவா. அதனாலேயே தனது பாடல் வரிகளில் இதற்கு முக்கியத்துவம் தந்திருக்கிறார்.

**இந்தப் பாடலின் இசை வடிவத்திற்கு இந்த QRCODE SCAN செய்யவும்.**

# தமிழகத்தில் மறக்கப்பட்ட ஒரு வீர வரலாறு

# புரட்சி வீரர் பாஷ்யம் என்கிற ஆர்யா

யா.சு. கண்ணன்



இந்திய விடுதலைப் போர் வரலாற்றில், ஆயுதம் ஏந்திப் போராடிய புரட்சியாளர்களுக்கும், அறவழியில் நின்ற வீரர்களுக்கும் இடையே ஒரு பாலமாகத் திகழ்ந்தவர் பாஷ்யம் என்கிற ஆர்யா. ஒரு கையில் தூரிகையையும், மறு கையில் புரட்சித் தீயையும் ஏந்திய அவரது வாழ்க்கை, வரும் தலைமுறையினருக்கு ஒரு பெரும் உத்வேகமாகும்.

பாஷ்யம் 1907 ஆம் ஆண்டு ஜனவரி 26 அன்று, தஞ்சாவூர் மாவட்டம் மன்னார்க்குடிக்கு அருகிலுள்ள சேரங்குளம் கிராமத்தில் ஸ்ரீ குப்புசாமி ஐயங்கார் மற்றும் ஸ்ரீமதி செண்பக லட்சுமி அம்மாள் தம்பதியினருக்கு ஐந்தாவது மகனாகப் பிறந்தார். பிரபல 'சுதேசமித்திரன்' இதழின் ஆசிரியராக இருந்த தேசபக்தர் ஏ. ரங்கசாமி ஐயங்கார் இவரது நெருங்கிய உறவினர் ஆவார்.

தனது ஆரம்பக் கல்வியை மன்னார்க்குடியில் பயின்று, அங்கேயே உயர்நிலைப் பள்ளிப் படிப்பை முடித்தார். உயர்கல்விக்காகத் திருச்சிக்குச் சென்ற இவர், அங்குள்ள தேசியக் கல்லூரியில் (National College, Trichy) பி.ஏ. (B.A.) பயின்றார். கல்லூரியில் படிக்கும் போதே பாடப்புத்தகங்களை விட, தேசபக்தி மற்றும் புரட்சிகரமான நூல்களைப் படிப்பதில் அதிக ஆர்வம் காட்டினார். குறிப்பாக வீர சாவர்க்கர், விவேகானந்தர் மற்றும் அரவிந்தர் போன்றோரின் வாழ்க்கை வரலாறுகள் இவரைப் பெரிதும் கவர்ந்தன.

1919-ல்தனது 12-வது வயதில்ஜாலியன்வாலாபாக் படுகொலை குறித்துக் கேள்விப்பட்டபோது மிகுந்த வேதனையும் ஆவேசமும் அடைந்தார். அதன் விளைவாக, 1928 ஆம் ஆண்டு சைமன் குழு திருச்சிக்கு வந்தபோது, அதற்கு எதிராகத் தனது கல்லூரி மாணவர்களுடன் இணைந்து கறுப்புக் கொடி ஏந்திப் போராடினார். இந்தப் போராட்டத்திற்காகக் கல்லூரி முதல்வர் இவருக்கு 5 ரூபாய் அபராதம் விதித்தார். அந்த அபராதத்தைச் செலுத்த மறுத்த பாஷ்யம், தனது தேசபக்திக்கு ஏற்பட்ட அவமானமாகக் கருதி பாதியிலேயே கல்லூரியை விட்டு வெளியேறினார்.

இதற்குப் பிறகு அவர் முழுமையாகச் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டார்.

பாரதியாரின் கவிதைகள் மீதும், சமூக சீர்திருத்தக் கொள்கைகள் மீதும் ஈடுபாடு கொண்ட அவர், ஆரிய சமாஜத்தின் கொள்கைகளால் கவரப்பட்டு தனது பெயருடன் 'ஆர்யா' என்ற பெயரைச் சூட்டிக்கொண்டார். ஆங்கிலேய ஆட்சிக்கு எதிரான போராட்டங்களில் தனது அடையாளத்தை மறைப்பதற்கும், ஒரு வீரமிக்க அடையாளத்தைப் பேணுவதற்கும் இந்தப் பெயர் அவருக்கு உதவியது.

**வரலாற்றுச் சிறப்புமிக்க கோட்டைச் சாகசம் (1932)**

1930 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 26ந் தேதியன்று "பூர்ண ஸ்வராஜ்" பிரகடனத்தை காங்கிரஸ் வெளிப்படையாக செய்தது. அந்நாள் முதல் சுதந்திர நாளாக அனுஷ்டிக்கப்பட்டது.

காங்கிரஸ் அறிவித்த முழு சுதந்திர தினத்தை (பூர்ண ஸ்வராஜ்), ஆங்கிலேயர்களின் கோட்டையான சென்னை புனித ஜார்ஜ் கோட்டையிலேயே கொண்டாட பாஷ்யம் ஆர்யா துணிச்சலான திட்டத்தைத் தீட்டினார்.

இந்த ஆபத்தான பயணத்தில் அவருக்குத் துணையாக நின்றவர் அவரது உயிர் நண்பரான வேணுகோபால். இவர் புகழ்பெற்ற விடுதலைப் போராட்ட வீரர் சுப்பிரமணிய சிவாவின் மருமகன் (அவரது சகோதரியின் மகன்) ஆவார். தனது மாமாவின் புரட்சிகரப் பாதையில் வளர்ந்த வேணுகோபால், பாஷ்யத்தின் இந்தத் திட்டத்திற்குத் தண்டுவடம் போலச் செயல்பட்டார்.

**1932 ஆம் ஆண்டு ஜனவரி 25 நள்ளிரவும.**

மவுண்ட்ரோடில் (இன்றைய அண்ணாசாலை), தற்போது அண்ணா சிலை அமைந்திருக்கும் இடத்திற்கு நேர் எதிரில் ELPHINSTONE THEATRE

( இது பின்னாளில் NEW ELPHINSTONE என்று பெயர் மாற்றம் பெற்றது.பின்னர் இது இடிக்கப்பட்டு விட்டது ) அமைந்திருந்தது.

இரவு நேர காட்சியைப் பார்த்து விட்டு வெளியே வந்த கூட்டத்தோடு கலந்துக் கொண்டார்.

அந்த நள்ளிரவு 12 மணி வாக்கில் பாஷ்யம் ஆர்யா தான் கைப்படத் தைத்த மூவர்ணக் கொடியை இடுப்பில் கட்டிக்கொண்டு, கோட்டைப் பகுதிக்குச் சென்றார்.

காவலர்களின் கண்களில் மண்ணைத் தூவிவிட்டு, சுமார் 140 அடி உயரமுள்ள தேக்கு மரக் கொடிமரத்தில் எவ்விதப் பாதுகாப்பு உபகரணங்களும் இன்றி ஏறினார். உச்சியில் பறந்து கொண்டிருந்த ஆங்கிலேயர்களின் 'யூனியன் ஜாக்' கொடியை அகற்றிவிட்டு, இந்தியக் கொடியை அங்கே பறக்கவிட்டார். கொடியில் "இன்று பாரதம் சுதந்திரம் அடைந்து விட்டது"என்ற வாசகத்தை பாஷ்யம் ஆர்யா பெயிண்டில் எழுதியிருந்தார். மறுநாள் காலை கோட்டையின் உச்சியில் இந்தியக் கொடி பறப்பதைக் கண்டு சென்னை நகரமே சிலிர்த்துப் போனது.

3 அடி விட்டம் கொண்ட கொடி மரத்தில். அவ்வப்போது ஒளியைப் பாய்ச்சி வந்த கலங்கரை விளக்கின் ஒளியையும் மீறி, காவலர்களின் கண்ணில் மண்ணைத் தூவி, பாஷ்யம் ஆர்யா அந்த 140 அடி உயர கொடி மரத்தில் எப்படி ஏறினார் என்பது ஆச்சரியத்திலும் ஆச்சரியம்.

இது பிரிட்டிஷ் ஆட்சிக்கு விடுக்கப்பட்ட மிகப்பெரிய சவாலாக அமைந்தது. பின் பாஷ்யம் ஆர்யா கைது செய்யப்பட்டார்.

பாஷ்யம்,சென்னை மத்திய சிறையில் அடைக்கப்பட்டார்.

அங்கு அவர் நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் அவர்களை சந்தித்தார். சட்ட மறுப்பு போராட்டத்தில் கைது செய்யப்பட்ட நேதாஜி சுபாஷ் சந்திர போஸ், கொல்கத்தாவிலிருந்து அந்தமான் செல்லுலார் சிறைக்கு கொண்டு செல்லப்படும் வழியில் ஒரு இடைக்காலக் கைதியாக (transit prisoner) சென்னை மத்திய சிறையில் அடைக்கப்பட்டிருந்தார்.

சிறையில் சுதந்திரப்போராட்ட வீரர்களை வாரத்திற்கு ஒரு நாளாவது ஒன்றாகச் சந்திக்க அனுமதிக்கக்கோரி ஆர்யா போராடினார்.நேதாஜி அவருக்கு உதவும் விதத்தில் ஆங்கிலேய சிறை அதிகாரிகளிடம் பேசி அனுமதியும் பெற்றுத் தந்தார்.

பின்னர் பாஷ்யம் ஆர்யா ஆந்திராவின் பெல்லாரி சிறையில் அடைக்கப்பட்டார். அங்குதான் அவரது புரட்சிகரமான குணம் உலகிற்குத் தெரிந்தது. சிறையில் அரசியல் கைதிகளை மேஜர் இன்ஸ் (Major Innes) என்ற அதிகாரி மிகவும் கொடுமையாக நடத்தி வந்தார். லாகூர் வழக்கில் கைது செய்யப்பட்டிருந்த சீக்கிய புரட்சியாளர் மஹாவீர் சிங் ( இவர் பகத் சிங், சுகதேவ் மற்றும் ராஜ்குரு ஆகியோரின் நெருங்கிய சகா) தன் மதக் கோட்பாடுகளுக்கு எதிராக இருப்பதாகக்கூறி சிறை விதிகளின்படி தொப்பி அணிய மறுத்ததற்காக மேஜர் இன்ஸால் 30 கசையடிகளுக்கு உள்ளாக்கப்பட்டார்.

தன் சக வீரருக்கு இழைக்கப்பட்ட இந்த அநீதியைக் கண்டு பாஷ்யம் கொதித்தெழுந்தார். அடுத்த நாள் காலை, "வயிறு சரியில்லை மலஜலம் கழிக்கச் செல்ல வேண்டும்" என்றுக் கூறி சிறைக்காவலர்களால் கால்விலங்குகளை கழற்றும்படி செய்தவர்,கைதிகள் சரி பார்ப்பிற்காக வரிசையில் அமர்ந்திருந்த போது, ஆய்வுச் செய்துக்கொண்டே தன் அருகில் மேஜர் இன்ஸ் வந்த போது அனைவரும் பார்த்திருக்க,தனது செருப்பைக் கழற்றி மேஜர் இன்ஸின் முகத்திலேயே அடி அடியென்று அடித்தார். ஒரு வெள்ளையின அதிகாரியை ஓர் இந்தியர் அடித்தது அந்த காலத்தில் நினைத்துப் பார்க்க முடியாதச் செயல். அடித்து விட்டு, சிறை வளாகத்தில் இங்கும் அங்குமாக "அச்சமில்லை அச்சமில்லை" என்று பாரதியின் பாடலைப் பாடிக்கொண்டே ஓடினார். பின்னர் பிடிக்கப்பட்டார்.

இதற்காக பாஷ்யத்திற்கு மிகக் கொடூரமான கசையடித் தண்டனை வழங்கப்பட்டது. முதுகில் தோல் கிழிந்து இரத்தம் வழியும்போதும், அவர் "வந்தே மாதரம்" என்று முழங்கியது சிறையிலிருந்த மற்ற கைதிகளுக்குப் பெரும் உத்வேகத்தைத் தந்தது..

சுதந்திரத்திற்குப் பிறகு பாஷ்யம் ஆர்யா ஒரு முழுநேரக் கலைஞராக மாறினார். இன்று நாம் காண்கின்ற முறுக்கு மீசை மற்றும் தலைப்பாகையுடனான மகாகவி பாரதியாரின் புகழ்பெற்ற ஓவியம் பாஷ்யம் வரைந்ததுதான். பாரதியாரின் மனைவி செல்லம்மாள் அவர்களிடம் பாரதியாரின் தோற்றம் குறித்துக் கேட்டு, அவரது நினைவாற்றலைக் கொண்டு இந்தத் தத்ரூபமான ஓவியத்தை அவர் உருவாக்கினார். மேலும், சென்னை ரிப்பன் மாளிகையில் உள்ள தியாகி சத்தியமூர்த்தியின் சிலை மற்றும் பல தேசத் தலைவர்களின் சிலைகளை அவர் வடித்தார்.

**தன்னலமற்ற இறுதிக்காலம்**

விடுதலைக்குப் பின் அரசு வழங்க முன்வந்த தியாகிகள் ஓய்வூதியத்தை,"நாட்டின் விடுதலைக்காகப் போராடுவது எனது கடமை; அதற்கு விலை பேசக் கூடாது" என்று கூறி மறுத்துவிட்டார். மிகவும் எளிமையான வாழ்க்கை வாழ்ந்த அவர், 1999-ம் ஆண்டு ஆகஸ்ட் 7-ம் தேதி காலமானார்.

பாஷ்யம் ஆர்யா மற்றும் வேணுகோபால் போன்ற வீரர்களின் வரலாறு, வெறும் காகிதங்களில் மட்டுமல்லாது, ஒவ்வொரு தமிழரின் மனதிலும் ஒரு வீரக் காவியமாக நிலைத்து நிற்க வேண்டிய ஒன்றாகும். ஒரு கலைஞனாக அழகையும், ஒரு வீரனாக அறத்தையும் போற்றிய அவரது வாழ்வு தமிழகத்தின் பெருமை.

மஹான்களின் தரிசனம்

# ஞானத் தமிழ்க் கடல்– நம்மாழ்வார்

- நிதீஸ்வரன்

வைணவ நெறியின் தூண்களாகத் திகழும் பன்னிரு ஆழ்வார்களில் 'தலைவர்' என்று போற்றப்படுபவர் நம்மாழ்வார். மற்ற ஆழ்வார்களை அவயவங்களாகவும் (உறுப்புகள்), நம்மாழ்வாரை அவயவியாகவும் (முழு உருவம்) கருதுவது மரபு. பாண்டிய நாட்டில், தாமிரபரணி ஆற்றின் கரையில் அமைந்த திருக்குருகூர் என்னும் திருத்தலத்தில், வேளாளர் குலத்தில் தோன்றிய பொற்காரியாரின் புதல்வர் காரியாருக்கும், உடைய நங்கைக்கும் மகனாக இவர் அவதரித்தார். நீண்ட காலம் மகப்பேறு இல்லாத நிலையில், திருக்குறுங்குடி நம்பியை வேண்டியதன் பயனாக, துவாபர யுகம் முடிந்து கலியுகம் தொடங்கிய 43-வது நாளில், விசாக நட்சத்திரத்தில் எம்பெருமானின் அம்சமாகவே இவர் பிறந்தார்.

பிறந்தவுடன் மற்ற குழந்தைகளைப் போல அழாமலும், தாய்ப்பால் உண்ணாமலும், மலஜலம் கழிக்காமலும் ஒரு தெய்வீக ஒளியுடன் இக்குழந்தை விளங்கியது. உலகியல் காற்றான 'சடம்' தீண்டாததால் இவருக்கு 'சடகோபன்' என்றும், மற்ற பிள்ளைகளிடம் இருந்து மாறுபட்டிருந்ததால் 'மாறன்' என்றும் பெயர் ஏற்பட்டது. பெற்றோர் குழந்தையைத் திருக்குருகூர் பொலிந்து நின்ற பிரான் கோவிலில் உள்ள 'உறங்காப்புளி' மரத்தின் அடியில் ஒரு தொட்டிலில் இட்டனர். அங்கு பதினாறு ஆண்டுகள் எவ்வித உலக உணர்வுமின்றி, யோக நித்திரையில் ஆழ்ந்து இறைவனையே சிந்தித்துக் கொண்டிருந்தார்.

திருக்கோளூரில் பிறந்த மதுரகவியார் வடநாட்டிற்குத் தீர்த்த யாத்திரை சென்றிருந்தபோது, தெற்கே ஒரு பேரொளியைக் கண்டு அதனைத் தொடர்ந்து வந்து திருக்குருகூரை அடைந்தார். புளியமரத்தடியில் அமர்ந்திருந்த மாறனின் தெய்வீகத் தோற்றத்தைக் கண்டு வியந்த அவர், ஆழ்வாரின் ஞானத்தை சோதிக்க ஒரு வினாவை முன்வைத்தார்: செத்ததின் வயிற்றில் சிறியது பிறந்தால் எத்தைத் தின்று எங்கே கிடக்கும்?.அதற்கு ஆழ்வார், "அத்தைத் தின்று அங்கே கிடக்கும்" என்று அருளினார். அதாவது, அறிவற்ற ஜடமான உடம்பில் புகுந்துள்ள சிறிய ஆன்மா, அவ்வுடலின் தொடர்பால் ஏற்படும் சுக துக்கங்களை அனுபவித்து அங்கேயே உழலும் என்பதே இதன் நுட்பமான கருத்தாகும். இப்பதிலைக் கேட்ட மதுரகவியார் வியந்து, நம்மாழ்வாரைத் தனது ஆசாரியனாக ஏற்றுக்கொண்டார்.

நம்மாழ்வார் தன் ஞானக்கண்ணால் இறைவனைத் தரிசித்து, நான்கு வேதங்களின் சாரத்தைத் தமிழில் நான்கு நூல்களாக வழங்கினார்:

1.ரிக் வேதத்தின் சாரமாக திருவிருத்தம்.

2.யஜுர் வேதத்தின் சாரமாக திருவாசிரியம்.

3.அதர்வண வேதத்தின் சாரமாக பெரிய திருவந்தாதி.

4.சாம வேதத்தின் சாரமாக திருவாய்மொழி.

இதில் திருவாய்மொழி 1102 பாசுரங்களைக் கொண்டு, 'திராவிட வேதம்' என்று சிறப்பிக்கப்படுகிறது.

ஆழ்வாரின் மறைவுக்குப் பிறகு, மதுரகவியார் திருவாய்மொழியை மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் அரங்கேற்ற முயன்றார். அங்கிருந்த 300 புலவர்கள், "ஒரு வேளாளர் பாடிய பாசுரங்களைச் சங்கப் பலகை ஏற்குமா?" என்று எள்ளி நகையாடினர். அப்போது மதுரகவியார், "கண்ணன் கழலிணை" என்று தொடங்கும் ஒரு சிறிய ஓலையை மட்டும் பலகையில் வைத்தார். உடனே அந்தச் சிறிய ஓலையைத் தாங்கிய பலகை, அதன் மேல் அமர்ந்திருந்த 300 புலவர்களையும் குளத்தில் தள்ளிவிட்டு, ஆழ்வாரின் பெருமையை நிலைநாட்டியது.

**ஆழ்வாரின் பாசுரச் சிறப்பும் முடிவுரையும்**

நம்மாழ்வார் தனது பாசுரங்களில் இறைவனைத் தலைவனாகவும், தன்னைத் தலைவியாகவும் (பராங்குச நாயகி) உருவகித்துப் பாடியது மிக அழகு. "உயர்வற உயர்நலம் உடையவன் எவன் அவன்" என்று தொடங்கி, பரம்பொருளின் எளிமையையும் மேன்மையையும் அவர் விளக்கிய விதம் ஈடு இணையற்றது.முப்பத்தைந்து ஆண்டுகள் மட்டுமே இந்த மண்ணுலகில் வாழ்ந்த அவர், தனது கடமை முடிந்ததும் எம்பெருமானால் வைகுண்டத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார். இன்றும் திருநகரி கோவிலில் அவர் அமர்ந்திருந்த புளியமரம் 'திருப்புளி' என்று போற்றப்படுகிறது. "ஞானத் தமிழ்க்கடலே" என்று பின்னாளில் வந்த புலவர்கள் அவரைப் போற்றியது, தமிழ் மொழிக்கு அவர் சேர்த்த வேதப் பெருமைக்குச் சான்றாகும். இவரது பாசுரங்கள் வெறும் பாடல்கள் அல்ல; அவை மனிதன் இறைவனை அடையும் பாதையை விளக்கும் ஒளிவிளக்குகள்.

**வேதம் தமிழ் செய்த மாறன் ஸ்ரீ நம்மாழ்வார்.**

ஆழ்வார்களின் அங்கியாகத் திகழும் மாறன். வைணவத் திருநெறியில் பன்னிரு ஆழ்வார்களில் 'தலைவர்' என்று போற்றப்படுபவர் நம்மாழ்வார். மற்ற ஆழ்வார்களை அவயவங்களாகவும் (உறுப்புகள்), நம்மாழ்வாரை அவயவியாகவும் (முழு உருவம்/ அங்கி) கருதுவது ஸம்ப்ரதாயமாகும். அதாவது மற்ற

ஆழ்வார்கள் அனைவரும் இவரது அங்கங்களைப் போன்றவர்கள் என்பது இதன் பொருளாகும். தாம்ரபர்ணி நதிக்கரையில் அமைந்துள்ள திருக்குருகூர் என்னும் திவ்ய தேசத்தில், உலகை உய்விக்க வந்த பேரொளியாக இவர் அவதரித்தார்.

"பாண்டியா, நின்னாடுடைத்து நல்ல தமிழ்" என்று ஔவையாரால் போற்றப்பட்ட பாண்டிய நாட்டில், தாமிரபரணி நதிக்கரையில் அமைந்துள்ள திருக்குருகூர் என்னும் திவ்ய தேசத்தில் இவ்வாழ்வார் அவதரித்தார். சூடிக்குலம் என்னும் வேளாளர் குலத்தில் காரியார் - உடையநங்கை தம்பதியினருக்கு மகனாக இவர் பிறந்தார். நீண்ட காலம் பிள்ளைப்பேறு இல்லாத காரியார், திருக்குறுங்குடி நம்பியைச் சரணடைந்து வேண்டினார். எம்பெருமான் அவர் கனவில் தோன்றி, "உலகை நல்வழிப்படுத்த நாமே உமக்கு மகனாகப் பிறப்போம்" என்று அருளினார். அதன்படி, கலியுகம் தொடங்கி 43-வது நாளில், ப்ரமாதி வருடம், வைகாசி மாதம், விசாக நக்ஷத்ரம் கூடிய வெள்ளிக்கிழமை அன்று நம்மாழ்வார் அவதரித்தார்.

பிறந்த அக்குழந்தை மற்ற குழந்தைகளைப் போல அழவில்லை, பால் அருந்தவில்லை, கண்கள் திறக்கவில்லை. உலகியல் உணர்வுகள் ஏதுமின்றித் தெய்வீகப் பரவசத்தில் இருந்ததால், அக்குழந்தைக்கு 'மாறன்' (உலக ஸ்வபாவத்திற்கு மாறானவர்) என்று பெயரிட்டனர். பிறக்கும்போதே உயிர்களைப் பற்றி அறிவை மயக்கும் 'சடம்' என்னும் காற்றைக் கோபித்து விரட்டியதால் இவருக்கு 'சடகோபன்' என்ற திருநாமம் ஏற்பட்டது. பெற்றோர் குழந்தையைத் திருக்குருகூர் பொலிந்து நின்ற பிரான் கோவிலில் உள்ள, ஆதிசேஷனின் அம்சமான 'உறங்காப்புளி' மரத்தின் பொந்தில் கிடத்தினர். அந்த புளிய மரத்தின் அடியிலே பதினாறு ஆண்டுகள் வரையிலும் யோகத்தில் எழுந்தருளியிருந்தார்.

பாண்டிய நாட்டில் அமைந்த திருக்கோளூர் என்னும் பதியில் அந்தணர் குலத்தில் தோன்றிய மதுரகவியார் அயோத்தி, மதுரை, கயை, காசி, காஞ்சி, அவந்தி, துவாரகை என்று கூறப்படும் புண்ணிய நகரங்கள் ஏழினையும் சேவிக்கும் உள்ளத்தராய்ச் சென்று சேவித்து வரும் வழியில் அயோத்தியிலிருந்து தெற்கே ஒரு பேரொளியைக் கண்டு, அதைத் தொடர்ந்து வந்து திருக்குருகூரை அடைந்தார். புளியமரத்தடியில் அமர்ந்திருந்த மாறனின் ஞானத்தை அறிய, "செத்ததின் வயிற்றில் சிறியது பிறந்தால் எத்தைத் தின்று எங்கே கிடக்கும்?" என்று வினவினார். அதற்கு ஆழ்வார், "அத்தைத் தின்று அங்கே கிடக்கும்" என்று ஆழமான தத்துவப் பதிலளித்தார். அதாவது, அறிவற்ற ஜடமான உடம்பில் (செத்தது) புகுந்துள்ள சிறிய ஆன்மா, அவ்வுடலின் இன்ப துன்பங்களை (அத்தை) அனுபவித்துக் கொண்டே அங்கேயே உழலும் என்பதே இதன் நுட்பமான கருத்தாகும். இதைக் கேட்டு மதுரகவியார் வியந்து அவரைத் தன் ஆசார்யனாக ஏற்றுக்கொண்டார்.

நம்மாழ்வார் தன் ஞானக்கண்ணால் இறைவனைத் தரிசித்து, நான்கு வேதங்களின் ஸாரத்தைத் தமிழில் நான்கு நூல்களாக வழங்கினார்:

1. ரிக் வேதத்தின் ஸாரமாக திருவிருத்தம்.
2. யஜுர் வேதத்தின் ஸாரமாக திருவாசிரியம்.
3. ஸாம வேதத்தின் ஸாரமாக திருவாய்மொழி.
4. அதர்வண வேதத்தின் ஸாரமாக பெரிய திருவந்தாதி.

திருவாய்மொழியில் 1102 பாசுரங்களும், திருவிருத்தம் நூலில் 100 பாசுரங்களும், திருவாசிரியம் நூலில் 8 பாசுரங்களும் பெரிய திருவந்தாதி நூலில் 87 பாசுரங்களும் என நான்கு பிரபந்தங்களில் ஆயிரத்து இருநூற்றுத் தொண்ணூற்றாறு பாசுரங்களை அருளியுள்ளார். வேதங்கள் எப்படிச் செவிவழியாகக் கேட்கப்பட்டுப் பேணப்படுகின்றனவோ (ச்ருதி), அதுபோலவே நம்மாழ்வாரின் பாடல்களும் இறையருளால் பாடப்பட்டு மதுரகவியாரால் கேட்டு எழுதப்பட்டதால் இவை 'த்ராவிட ச்ருதி' என்று போற்றப்படுகின்றன.

ஆழ்வாரின் மறைவுக்குப் பின் மதுரகவியார் 'திருவாய்மொழி'யைக் கொண்டு மதுரைத் தமிழ்ச் சங்கத்திற்குச் சென்றார். அங்கிருந்த முந்நூறு சங்கப் புலவர்கள் இது சங்கப் புலவரால் பாடப்படவில்லை என்று கூறி ஏற்க மறுத்தனர். அப்போது மதுரகவியார், "கண்ணன் கழலிணை" என்று தொடங்கும் ஒரு பாசுர வரியை மட்டும் ஒரு சிறிய ஓலையில் எழுதிச் சங்கப் பலகையில் வைத்தார். உடனே அந்தச் சங்கப் பலகை அந்தச் சிறிய ஓலையை மட்டும் தாங்கிக்கொண்டு, அகந்தை கொண்ட முந்நூறு புலவர்களையும் பொற்றாமரைக் குளத்தில் தள்ளிவிட்டு ஆழ்வாரின் பெருமையை நிலைநாட்டியது. பின்னர் அப்புலவர்கள் கரையேறி, "ஈந்தமிழ் பாடிய தேசிகன்" என்று ஆழ்வாரைப் போற்றித் துதித்தனர்.

நம்மாழ்வார் தனது பாசுரங்களில், "உயர்வற உயர்நலம் உடையவன் எவன் அவன்சு என்று தொடங்கி, பரம்பொருளின் எளிமையையும் மேன்மையையும் மிக அழகாக விளக்குகிறார். இறைவனைத் தலைவனாகவும், தன்னைத் தலைவியாகவும் (பராங்குச நாயகி) பாவித்து அவர் பாடிய பாசுரங்கள் பக்தி ரஸத்தின் உச்சாணிக் கிளைகளாகும். முப்பத்தைந்து ஆண்டுகள் மட்டுமே இந்த மண்ணுலகில் வாழ்ந்த அவர், தனது கடமை முடிந்ததும் எம்பெருமானால் கருட வாகனத்தில் வைகுண்டத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

நம்மாழ்வாரது திருவாய்மொழி இன்றும் திருவரங்கம் போன்ற திருத்தலங்களில் வேதங்களுக்கு இணையாக ஓதப்படுகிறது. "வேதம் தமிழ் செய்த மாறன்" என்று போற்றப்படும் அவரது பாசுரங்கள், மனிதன் இறைவனை அடையும் பாதையை விளக்கும் நித்ய ஒளிவிளக்குகளாக இன்றும் திகழ்கின்றன.

# விழாக்களும் விரதங்களும்

-செல்வம்

***மே 1 - மதுரை அழகர் திருவிழா :***

சுதபஸ் என்ற முனிவர், நூபுரகங்கையில் தீர்த்தமாடி, பெருமாளைநோக்கித்தவமிருந்தார். அந்தச் சமயத்தில் துர்வாச மகரிஷி, தன் பரிவாரங்களோடு அவ்வழியாக வந்தார். பெருமாளையே நினைத்துக் கொண்டிருந்த முனிவர், ரிஷி வந்ததைக் கவனிக்காமலிருக்கவே ஆத்திரமடைந்த துர்வாசர் ‘மண்டுகோ பவ’ (தவளையாக போகக் கடவாய்!) என சாபமிட்டார். உடனே தவளையாகிப் போன சுதபஸ், சாபவிமோசனத்துக்கு வழிகேட்டபோது, “வேகவதி தீர்த்தக்கரையில் (வைகை) நீ தவம் பண்ணிக்கொண்டிரு. சித்ரா பௌர்ணமிக்கு மறுநாள் அழகர் அங்கு வந்து உனக்கு சாபவிமோசனம் கொடுப்பார்” என சொல்லியிருக்கிறார் துர்வாசர். அதன்படி வைகைக் கரையில் தவம் பண்ணிக் கொண்டிருந்த சுதபஸ் முனிவருக்கு, விமோசனம் கொடுக்க அழகர் மதுரைக்கு வந்து போனதாகப் புராணங்கள் விவரிக்கின்றன.

சித்ரா பௌர்ணமிக்கு நான்கு நாள் முன்னதாகச் சித்திரைத் திருவிழா தொடங்கிவிடுகிறது. முதல் இரண்டு நாட்கள் கோயிலில் இருப்பார் அழகர். மூன்றாம் நாள் மாலை மதுரையை நோக்கிப் புறப்படுகிறார். ஆரம்ப காலத்தில் கோயிலைவிட்டு கிளம்பும் அழகர், அலங்காநல்லூர் போய்ச் சேருவார். அங்கு அழகரை குதிரை வாகனத்தில் தூக்கிவைத்து (ஆற்றில் இறங்குவதற்காக) அலங்காரம் செய்வார்கள். அழகருக்கு அலங்காரம் செய்யும் ஊர் என்பதால், அலங்காரநல்லூராக இருந்து, பின்பு அலங்காநல்லூராக மாறிப்போனதாகச் செ ால்கிறார்கள். அலங்காநல்லூரில் இருந்து தேனூருக்கு வந்து வைகை ஆற்றில் இறங்கும் அழகர், அதன் பிறகு வண்டியூருக்கு வந்து மண்டூக முனிவருக்கு (சுதபஸ்) சாபவிமோசனம் கொடுப்பார். இதனால் மண்டூர் என அழைக்கப்பட்டு அதுவே மண்டியூராகிப் பிறகு வண்டியூராகிப் போனதாம்.

கள்ளர் கொண்டை, கொண்டையில் குத்தீட்டி, கையில் வலைதடி (பூமராங்), இடுப்பில் ஜமதாடு (ஒருவகை கத்தி) என விதவிதமான ஆயுதங்களுடன் மதுரை நோக்கிப் புறப்படுகிறார் கள்ளழகர். அழகர் மலையிலிருந்து தங்கப்பல்லக்கில் புறப்பட்டுவரும் அவர், வழிநெடுக பக்தர்களால் ஏற்பாடு செய்யப்படுகிற ஐந்நூற்றுக்கும் மேற்பட்ட மண்டகப்படிகளில் ஆசி வழங்கிவிட்டு, நான்காம் நாள் இரவு தல்லாகுளம் பெருமாள் கோயிலுக்கு வந்து சேருகிறார். அதற்கு முன்னதாக மதுரை எல்லையான மூன்றுமாவடியில் அழகரை மக்கள் எதிர்கொண்டு அழைக்கும் எதிர்சேவை நிகழ்ச்சி களைகட்டுகிறது.



நான்காம் நாள் இரவு தல்லாகுளம் பெருமாள் கோயிலில் கள்ளழகருக்கு அபிஷேகம் நடக்கும். இந்த அபிஷேகத்துக்கும் நூபுரகங்கையிலிருந்து தீர்த்த நீர் தலைச்சுமையாகக் கொண்டு வரப்படுகிறது. அபிஷேகம் முடிந்ததும் அழகருக்கு அலங்காரம். இதிலும்கூட ஒரு நம்பிக்கை. அழகருக்கான ஆடைகள், அலங்காரப் பொருட்கள் அனைத்தும் ஒரு பெரிய மரப்பெட்டியில் இருக்கும். இந்தப் பெட்டிக்குள் சிவப்பு, வெள்ளை, பச்சை, மஞ்சள், ஊதா...என பல வண்ணங்களில் பட்டுப்புடவைகள் இருக்கும். கோயிலின் தலைமைப் பட்டர் அந்தப் பெட்டிக்குள் கைவிட்டு ஏதாவதொரு புடவையை எடுப்பார். அவர் கையில் எந்த வண்ணப் புடவை சிக்குகிறதோ, அது அன்றைய தினம் அழகருக்கு அணிவிக்கப்படும். அழகர் எந்த வண்ணப் புடவை கட்டி ஆற்றில் இறங்குகிறாரோ அதற்கேற்ப அந்த வருடத்தில் நல்லது - கெட்டது நடக்கும் என்பது பக்தர்களின் நம்பிக்கை. பச்சைப்பட்டு கட்டி வந்தால் நாடு செழிப்பாக இருக்கும்.

சிவப்புப் பட்டு கட்டிவந்தால் அந்த வருடம் போதிய விளைச்சலுமிருக்காது. நாட்டில் அமைதியும் இருக்காது. பேரழிவு ஏற்படும்.

வெள்ளை மற்றும் ஊதாப்பட்டு கட்டி வந்தால் நாடு இடைப்பட்ட நிலையில் இருக்கும். மஞ்ச ள்பட்டு கட்டிவந்தால், அந்த வருடத்தில் மங்களகர நிகழ்வுகள் நடக்கும். இப்படி நம்பிக்கை இருப்பதால் ‘ஆற்றில் இறங்க வரும்போது அழகர் என்ன கலர் பட்டுடுத்தி வரப் போறாரோ?’ எனப் பக்தர்கள் எதிர்பார்த்துக் கொண்டிருப்பார்கள்.

ஐந்தாம் நாள் பௌர்ணமியன்று, அழகர் ஆற்றில் இறங்கும் வைபவம். இதற்கு தல்லாகுளத்தை விட்டு கள்ளழகர் கிளம்பியதுமே தண்ணீர் பீய்ச்சும் வைபவம் தொடங்குகிறது. அழகர் ஆற்றில் இறங்கி வண்டியூர் போய்ச் சேரும் வரை இந்த வைபவம் கலகலப்பாக நடக்கிறது. ஆற்றிலிறங்கும்

அழகரை மதுரையில் உள்ள வீரராகவப் பெருமாள் எதிர்கொண்டு அழைப்பார். ஆற்றுக்குள் இருவரும் மாலை மாற்றி மரியாதை பண்ணிக் கொள்வார்கள். அதன்பிறகு மண்டூக முனிவருக்கு சாபவிமோசனம் தருவதற்காக வண்டியூரை நோக்கிக் கிளம்புவார் அழகர். வழிநெடுக வரவேற்பு பெற்றுக்கொண்டு ஐந்தாம் நாள் இரவு வண்டியூர் போய்ச் சேருகிறார் அழகர். ஆறாம் நாள் அதிகாலையில் அழகருக்கு ஏகாந்த சேவை. பயணக்களைப்பு நீங்குவதற்காக சந்தன அலங்காரம் பண்ணிக்கொள்ளும் கள்ளழகர், வண்டியூர் பெருமாள் கோயிலை வலம் வருவார். அதன்பிறகு சர்ப்பவாகனத்தில் புறப்பட்டு தேனூர் மண்டபம் வந்து சேருகிறார் அழகர்.

தேனூர் மண்டபத்தில் தங்க கருட வாகனத்துக்கு மாறும் அழகர், அங்கிருந்து மண்டூக முனிவருக்கு சாபவிமோசனம் தருகிறார். பிறகு தேனூர் மண்டபத்திலிருந்து மதுரை நோக்கிவரும் அழகர், ராமராயர் மண்டகப்படி மண்டபத்துக்கு ஆறாம்நாள் இரவு வந்து சேருகிறார். அன்றிரவு அங்கு தங்குகிறார். இரவு முழுவதும் தசாவதார அலங்காரங்களில் தோன்றி பக்தர்களைப் பரவசப்படுத்தும் அழகர், ஏழாம் நாள் காலையில் அங்கிருந்து அனந்தராயர் பல்லக்கில் தல்லாகுளத்திலுள்ள சேதுபதிராஜா மண்டபம் வரைக்கும் வருவார். அன்றிரவு அங்கு அழகருக்கு அலங்காரம் கலைக்கப்பட்டு பூப்பல்லக்கில் ஜோடனை நடக்கும்.

எட்டாம்நாள் அதிகாலையில் பூப்பல்லக்கில் மலைநோக்கிக் கிளம்பும் அழகர் வழிநெடுக பூஜை புனஸ்காரங்களை ஏற்றுக்கொண்டு ஒன்பதாம் நாள் காலையில் அழகர் கோயிலைச் சென்றடைவார். பத்தாம் நாள் பயணக்களைப்பு நீக்குவதற்காக உற்சவசாந்தி அபிஷேகம் நடக்கிறது. அத்துடன் சித்திரைத் திருவிழாவின் பத்து நாள் கொண்டாட்டங்கள் சுபமாக நிறைவுற்று மீண்டும் பழைய நிலைக்குத் திரும்புகிறது மதுரை.

**மே 2- நாரத ஜெயந்தி:**

நாரத ஜெயந்தி என்பது 'தேவரிஷி நாரதர்' அவதரித்த தினமாகக் கொண்டாடப்படுகிறது. தேவரிஷி நாரதர், பிரஜாபதிகளில் ஒருவராகவும், சப்த ரிஷிகள் ஒருவராகவும் போற்றப்படுகிறார். ரிக்வேதத்தில் இடம்பெற்றுள்ள சில மந்திரங்கள் நாரத மகரிஷியால் இயற்றப்பட்டவை என்று கருதப்படுகிறது. நாரத முனிவர், பிரம்மதேவனின் நெற்றியில் இருந்து தோன்றியவர் என்று நம்பப்படுகிறது. விஷ்ணு புராணம் போன்ற சில புராணங்கள், இவர் காசியப முனிவரின் மகன் என்று குறிப்பிடுகின்றன.

எப்போதும் அலைந்து திரியும் இயல்புடைய நாரத முனிவர், தேவருலக இசைக்கலைஞர்களான கந்தர்வர்களின் தலைவராகவும் இவர் திகழ்கிறார் என்றும் நம்பப்படுகிறது. இவர் கடும் தவங்களை



மேற்கொண்டு, 'பிரம்மரிஷி' எனும் உயரிய பட்டத்தைப் பெற்றார். மேலும், இவர் மரணமில்லாப் பெருவாழ்வு பெறும் வரத்தையும் பெற்றுள்ளார்.


ஸ்ரீ நாரத மஹரிஷியின் சிறப்புகளாக, மஹாபாரதம் சாந்தி பர்வம் - மோக்ஷ தர்மத்தில், பீஷ்மர் யுதிஷ்டிரருக்குக் கூறியவை மற்றும் பகவான் ஸ்ரீகிருஷ்ணர் உக்ரசேன மஹாராஜாவிடம் கூறியவை. நாரதர் அஹங்காரமற்றவர், மனப்பக்குவம், செயல்திறன், வாக்குத் தூய்மை, இந்திரிய அடக்கம், உறுதியான பக்தி, நன்னடத்தை, நலன் விரும்பி, ஆசிரியர், சமநோக்கு, பேரறிவாளர், தற்புகழ்ச்சியின்மை, உலகறிவு, பற்றற்ற அன்பு. ஆகிய நற்குணங்களை உடையவர் நாரதர் என்று விவரிக்கிறார்.

'நாரத பக்தி சூத்திரம்', 'நாரத புராணம்', 'நாரத பஞ்சராத்திரம்' மற்றும் 'நாரதீய தர்மசாஸ்திரம்' ஆகியவை நாரத முனிவருடன் தொடர்புடைய சில புனித நூல்களாகும்.

ஸ்ரீ நாரத மகரிஷி அவர்கள் வழங்கிய நாரத பக்தி சூத்திரத்தில், பக்தியின் ஸ்வரூபம், மஹிமை, பக்தியை அடைவதற்கான வழிமுறைகள், பக்தியின் அடையாளங்கள், பக்தனின் பெருமைகள் என்று பலவாறாக பக்தியின் பெருமைகளை விவரிக்கிறார் .

எத்தகைய அன்பை அடைந்த (அறிந்த பிறகு), அவன் புறநோக்கு அற்றவனாக இருக்கிறான், செயலற்றவனாக இருக்கிறான், தன்னில் தான் இன்புற்றிருக்கிறான். அந்த பக்தியானது, ஆசைகள், எதிர்பார்ப்புகள், ப்ரார்த்தனைகள் ஆகியவை இல்லாதது. (தன்னையே இறைவனுக்கு அர்ப்பணித்துவிட்டதால்)

அத்தகைய அந்த அன்பினால் இறைவனிடம் தொடக்கத்திலும், இடையிலும், இறுதியிலும் இடைவிடாத பேரன்பு (பக்தி) இருக்க வேண்டும் என்றும், அந்த அன்புக்கடலில் ஒரு துளியாகத் தான் இருக்க வேண்டும் என்றும் பிரார்த்தனை செய்து, நம்மை அர்ப்பணிப்போமாக.



# கொன்றை வேந்தன் கதைகள்

## வாய்மை காத்த மாறன்

கலாவதி

முன்னொரு காலத்தில் ஒரு அடர்ந்த காட்டின் ஓரத்தில் சிறிய கிராமம் ஒன்று இருந்தது. அங்கு மாறன் என்ற சிறுவன் தன் ஆடுகளுடன் வசித்து வந்தான். மாறன் எப்போதுமே சொன்ன சொல்லைக் காப்பாற்றுவதில் உறுதியாக இருப்பான்.

ஒரு நாள், மாறன் தன் ஆடுகளை மேய்த்துக்கொண்டிருந்தபோது, புதருக்குள் இருந்து ஒரு புலி பாய்ந்து வந்தது. மாறன் பயந்து நடுங்கினான். ஆனால் ஓடாமல், புலியிடம் ஒரு வேண்டுகோள் வைத்தான்.

"புலி அரசே! இன்று மாலை என் ஆட்டுக்குட்டிகளை அதன் தாயிடம் சேர்த்துவிட்டு, என் அம்மாவிடம் விடைபெற்று வருகிறேன். அதன் பிறகு என்னை நீங்கள் உணவாக்கிக் கொள்ளலாம். இது என் சத்தியம்!"

புலிக்கு ஆச்சரியமாக இருந்தது. "யாராவது சாக வருவார்களா? சரி, இவன் சொல்வது உண்மையாக இருந்தால் இவன் சிறந்தவன். இவனை நம்பி விடுவோம்" என்று நினைத்து புலியை அவனைப் போகவிட்டது.

வீட்டிற்குச் சென்ற மாறன், ஆடுகளைப் பத்திரமாகப் பட்டியில் அடைத்தான். அம்மாவிடம் விடைபெற்றான். அம்மா அழுதார், தடுத்தார். ஆனால் மாறன், "அம்மா, உயிரை விட மானமும், கொடுத்த வாக்கும் பெரியது. நான் இன்று போகவில்லை என்றால், அந்தப் புலி மனிதர்களையே நம்பாது" என்று கூறிவிட்டு காட்டை நோக்கிச் சென்றான்.

மாறன் சொன்னபடியே மாலையில் புலியின் முன் வந்து நின்றான். "புலி அரசே! நான் வந்துவிட்டேன், என்னைச் சாப்பிடுங்கள்" என்றான்.

மாறனின் நேர்மையைக் கண்ட புலி வியந்தது. "சிறுவனே! நீ ஓடிப் போய்விடுவாய் என்று நினைத்தேன். ஆனால், சொன்ன சொல்லைக் காப்பாற்ற உன் உயிரையே துச்சமாக நினைத்து வந்திருக்கிறாய். உன்னைப் போன்ற ஒரு நேர்மையானவனை உண்பது பாவம். நீ உன் கிராமத்திற்குத் திரும்பு. உன்னால் மனித இனத்திற்கே பெருமை" என்று கூறிவிட்டு நகர்ந்தது.

வாழ்க்கையில் பல இக்கட்டான சூழ்நிலைகள் வரும். அப்போது பொய் சொல்லித் தப்பிக்கலாம் என்று தோன்றலாம். ஆனால், கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவதே உண்மையான வீரம் மற்றும் ஒழுக்கம்

இதைத்தான் ஔவைப் பாட்டி கற்பு எனப்படுவது சொல் திறம்பாமை என்று கூறியிருக்கிறார். அதாவது

கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவதே ஒருவருக்கு மிகச்சிறந்த ஒழுக்கம் (கற்பு) ஆகும்



## சினிமா சாரல்

- சேஷு

### The Girl from Oslo: Netflix

சுருக்கமாக இந்த வெப் சீரிஸ் கதையை சொல்ல வேண்டுமென்றால், இஸ்ரேலி தந்தை, நார்வே பெண்ணுக்கும் பிறந்த பெண் பியா, ஆஸ்லோவிலிருந்து தனது பயலாஜிக்கல் தந்தையை தேடி சினாய் என்ற பகுதிக்கு தனது நண்பர்களான இஸ்ரேலிய சகோதர, சகோதரிகளுடன் வருகிறார். கடற்கரையில் ஜாலியாக விளையாடி கொண்டிருக்கும் போது மூவரையும் ISIS பயங்கரவாதிகள் கடத்துகின்றனர்.

மூவரையும் பணயக் கைதிகளாக வைத்துக் கொண்டு அபு சலிம் உள்ளிட்ட 12 ஐகுஐகு பயங்கரவாதிகளை இஸ்ரேல் விடுவிக்க வேண்டும் என்ற நிபந்தனை வைக்கப்படுகிறது. நிபந்தனைகளை இஸ்ரேல் அரசாங்கம் ஏற்றதா? இவர்களை மீட்க பெற்றோர்கள் போராடுகிறார்கள், குறிப்பாக பியாவின் நார்வே தாய் பல வழிமுறைகளில் முயற்சி செய்கிறார். அந்த முயற்சி கை கூடியதா? என்பதே கதை.

பாலஸ்தீன பயங்கரவாத அமைப்பான ஹமாஸ், ISIS அமைப்பில் சேருவதற்கு பயிற்சி தந்து அனுப்புவதும், அனுப்பிய அந்த இளைஞனை வைத்தே பிணைக் கைதிகளை மீட்பது, இஸ்ரேலியர்களிடம் பேச்சு வார்த்தை நடத்த ஹமாஸ் போராளியாக உயிரிழந்தவரின் மனைவி மருத்துவரை அனுப்புவது, பியாவின் நார்வே தாயும், மருத்துவரும் தோழிகளாக இருந்தது ஙீண்டூணி அஞிஞிணிஊஞீ ல் பங்கெடுத்தது, அப்போது தான் இஸ்ரேலிய அதிகாரி ஆரிக் உடன் பழக்கம் ஏற்பட்டு நார்வே பெண் அலெக்ஸ் பியா கருவுற காரணம் என பல முடிச்சுகள் இந்த வெப் சீரிஸில் இருந்தாலும், அது பெரியளவில் த்ரில்லிங்காக கடத்தாமல் நாடக பாணி டயலாக் மூலம் மெதுவாக கதை நகர்வது சில நேரங்களில் சலிப்பு தட்டுகிறது.

ஊச்தஞீச் வெப் சீரிஸ் பார்த்தவர்களுக்கு The Girl from Oslo மெதுவாக செல்லும் இது எந்தளவிற்கு ஏற்புடையதாக இருக்கும் என தெரியவில்லை. இந்த வெப்சீரிஸில் பெரிய குறையாக இருப்பது நம்பகத்தன்மை எனலாம். ஹமாஸ் பயன்படுத்தும் சுரங்கப் பாதை செங்கல்லால் கட்டப்பட்டது போன்று காட்டியிருப்பது. பெரும்பாலன பங்கர்களில் சிமெண்ட் கலவையாக மட்டுமே பயன்படுத்தப்படும் என்பதை குறிப்பிட்டு படக்குழு இதை பார்க்க தவறியது எப்படி என கேள்வி எழுப்புகின்றனர் இஸ்ரேலிய ரசிகர்கள்.

இஸ்ரேல் காசா பகுதியில் தினமும் குண்டு போட்டுக் கொண்டே இருப்பது போன்ற காட்சிப்படுத்தல் மூலம் இஸ்ரேலிய தரப்பை வில்லனாகவும், ஹமாஸ் தரப்பை நியாயவாதிகளைப் போல காட்டி இருப்பதையும் குறிப்பிட்டு இந்த வெப்சீரிஸ் இஸ்ரேலிய - நார்வே கூட்டு முயற்சி என்பதால் இப்படி உண்மைக்கு மாறாக காட்சிப்படுத்தப்பட்டிருப்பதாக விமர்சனங்கள் எழுவதை புறந்தள்ள முடியவில்லை. ஆனாலும் ஹமாஸ், ISIS பயங்கரவாத அமைப்புகள் மனித தன்மையற்றவை என்பதையும் இந்த வெப்சீரிஸ் ஊடாக காட்டியிருப்பது பாராட்டத்தக்கது.

இஸ்ரேல்-அமெரிக்கா-ஈரான் இடையே போர் நடந்து வரும் சூழலில் இந்த வெப்சீரியஸை பாருங்க.

### RANAPATI SHIVRAY & SWARI AGRA’ (MARATHI) : Amazon Prime

ஒரே கதை, கேட்டது, பலவாறாக படித்தது என இருந்தாலும் வருடத்திற்கு ஒரு படமாவது சத்ரபதி சிவாஜி பற்றி எடுக்காமல் இருப்பதில்லை என கங்கணம் கட்டிக் கொண்டு இருப்பார்கள் போல மராத்தி சினிமாதுறை.

தனது 50வது பிறந்த நாளுக்காக தன்னை டெல்லியில் பார்க்க வர வீர சிவாஜிக்கு, மிர்ஸா ராஜா சிங் மூலம் தூது அனுப்புகிறான் டெல்லி சுல்தான் ஔரங்கசீப். அங்கு தனது மகன் சம்பாஜியுடன் செல்லும் சிவாஜி எப்படி சமயோஜிதமாக திட்டமிட்டு தப்பிக்கிறார் என்பதை மிக சுவாரஸ்யமாக சொல்லியிருக்கிறார் இயக்குநர் திக்பால் லஞ்சேகர். சரித்திர படம் என்பதால் கண்டிப்பாக போர் காட்சிகள் இடம் பெற்றே ஆகவேண்டும் என்ற நிர்பந்தத்தில் சிக்காமல் அதையொட்டிய கதையை வசனங்கள் மூலமே நகர்த்தியுள்ளார் இயக்குநர். கதைக்குத் தேவையான கேரக்டர்கள் சிவாஜி, ஜீஜாபாய், தளபதி தன்ஹாஜி என ஒவ்வொருவரையும் சரியாக தேர்ந்தெடுத்திருப்பதற்கே பாராட்டலாம். காஸ்ட்யூமில் படக்குழு காட்டிய கவனம் தெரிகிறது.

இதே மையக்கருவை ஒட்டி வேறு சில படங்கள் வந்திருந்தாலும், காட்சிப்படுத்தலில் பாராட்டைப் பெறுகிறது RANAPATI SHIVRAY & SWARI AGRA’. மராத்தி படம் என்றாலும், பெரும்பாலான டயலாக்குகள் ஹிந்தியிலும், சப் டைட்டில் ஆங்கிலத்திலும் இருப்பதால் எளிதாக புரிந்து கொள்ளலாம் என்பதால் கண்டிப்பாக பார்க்கலாம்.

Printed by Published by Padmapriya L on behalf of Padmapriya L, Published at 77/6, 10th Avenue, Ashok Nagar, Chennai - 600 083 Printed at Chennai Offset Printers, No. 19/1 & 21/2, Kitabath Khan Bahadur Street, Ellis Road, Chennai - 600 002, Editor Padmapriya L.